விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 82 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 04, செவ்வாய்க்கிழமை 16.02.2016




## வடக்கின் நீண்ட கால அபிவிருத்திக்கு 3 ஆயிரம் பில்லியன் ரூபா நிதி தேவை

### பிரதமர் ரணிலிடம் மதிப்பீட்டை வழங்கியது வடக்கு அரசு

யாழ்ப்பாணம், பெப். 16
வடக்கு மாகாணத்தில் நீண்ட கால நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 3 ஆயிரம் பில்லியன் ரூபா நிதி தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுக் கொழும்பு அரசிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.
விரைவில் நடைபெறவுள்ள, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான நிதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக, மேற்படி விவரங்கள் வடக்கு மாகாண சபையினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண அபிவிருத்திக்கூட்டம் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பக். 06

## வழங்கிய வாக்குறுதிக்கேற்ப செயற்படுவார் புதிய ஆளுநர்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை

கொழும்பு, பெப். 16
வடக்கு மாகாண புதிய ஆளுநர் ரெஜினோல்ட் கூரே வழங்கியுள்ள வாக்குறுதிக்கேற்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்படுவார் என்று நாம் நம்புகின் றோம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்தார்.
போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் தான் அயராது பாடுபடுவார் என்று வடக்கு மாகா ணத் பக். 23

## முன்பள்ளி ஆசிரியை விபத்தில் சாவு

கிளிநொச்சி. பெப்.16
கிளிநொச்சி, விசுவமடுப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிவில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பக். 06

# ஈ.பி.டி.பிக்கு மானம் இருக்கிறதா?

### நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்துக்களை முன்வைத்து நீதிமன்றில் சட்டத்தரணி சுமந்திரன் எம்.பி. வாதம்


முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் அதன் ஆணையாளர்கள், ஈபிடிபி கட்சி ஒரு சட்டவிரோத ஆயுதக் குழு என்று இந்த நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது அந்தக் கட்சிக்கு என்ன மானம் இருக்கிறது?
இவ்வாறு நீதிமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பினார் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.
ஈபிடிபி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவால் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மான இழப்பு கோரும் வழக்கிலேயே சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றத்திடம் இந்தக் கருத்தைச் சுட்டிக்காட்டினார்.
கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து அந்த நாட்டுத் தலைநகர் வொஷிங்ரனுக்கு பக். 23

## மகிந்தவின் கொள்கை கோமாளித்தனமானது

### சாடுகின்றார் அமைச்சர் மனோ

யாழ்ப்பாணம், பெப். 16
தமிழ் மொழி வேண்டாம். ஆனால் திருட்டுத் தேங்காய் அடிக்க தமிழ் இந்துக் கடவுள்களான விஷ்ணுவும், காளியம்மனும் வேண்டும் என்பதுதான் மகிந்த ராஜபக்சவின் கோமாளிக் கொள்கை என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அரசகரும மொழி பக். 25

## அடுத்த வாரம் நாமல் கைது?



கொழும்பு, பெப். 16
எனது மகன் நாமல் ராஜபக்ச அடுத்த வாரமளவில் கைது செய்யப்படலாம் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
எனது குடும்பத்தை தண்டிக்கவும் ஆதரவாளர்களை பழிவாங்கவுமே நிதிக் குற்றப்புலனாய்வை அலரி மாளிகையில் இயக்கி வருகின்றனர். புலனாய்வுப் பிரிவுக்கான பொலிஸ் மா அதிபராக, பக். 25

## மிரட்டியே பதவியை பறித்தார் மைத்திரி

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, பெப். 16
'அடிப்பேன் - சிறையில் போடுவேன். இதைக் காப்பாற்றவேண்டும் என்றால் எனக்கு இதைத் தந்துவிடு' என்று கூறியே என்னிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைமைப் பதவியை, ஜனாதிபதி மைத்திரிபால பெற்றுக்கொண்டதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக். 23

## தமிழீழத்துக்குச் சமமான அதியுச்ச சமஷ்டியே தீர்வு

### அரசமைப்புக்கான கருத்தறியும் அமர்வில் நேற்று வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 16
தமிழீழத்துக்கு நிகரான அதியுச்ச சமஷ்டியையே தமிழ் மக்கள் தமது தீர்வாக எதிர்பார்க்கின்றனர் என்று சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.
புதிய அரசமைப்புக்கு மக்கள் கருத்தறியும் அமர்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் 49 பேர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இதில் பக். 25

## மயிலிட்டி மீள்குடியேற்றம்; வியாழனன்று இறுதி முடிவு

யாழ்ப்பாணம், பெப். 16
விமான நிலைய அபிவிருத்தியா? மயிலிட்டி மீள்குடியமர்வா? என்பது தொடர்பில் முடிவு எடுக்கும் மாவட்டரீதியிலான கூட்டம், நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் கள் தலைமையில் நடை பக். 23

## தனி நாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை தமிழர்கள்

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 16
போர் மீண்டும் ஏற்படாது என்று உறுதியாகக் கூற முடியாது. தமிழ் மக்கள் இன்னமும் தனி நாடு என்ற கோரிக்கையிலிருந்து விடுபடவில்லை. மக்களின் எதிர்கால நலனுக்காகக் கூட்டாட்சி முறைமையில் வாழும் பக். 25

முச்சந்தி முரளி



இல்லையெண்டு தெரிஞ்சும் கேக்கிறியள் பாருங்கோ....

## அரசமைப்புக்கு கருத்துக்களை மார்ச் 10 வரை சமர்ப்பிக்கலாம்



கொழும்பு, பெப். 16
அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் தமது கருத்துக்களை எழுத்து மூலமாகப் பெற்றுக் கொள்ளும் காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் பக். 23



அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மஹா சத சண்டியாகம் - 2016

மேற்படி ஆலய சண்டியாகம் கடந்த 12.02.2016 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.
தொடர்ந்து 13.02.2016 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றுவரும் மேற்படி சண்டியாகக் கிரியைகள் 10 நாள்கள் நடைபெறவுள்ளன.
இதன் இறுதிநாளான 22.02.2016 திங்கட்கிழமை [illegible] ஆகியவற்றைத் தொடர்ந்து சுவாமி உள்வீதியுலா வருதலும் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடைக்கு புதிய இயந்திரம் உருவாக்கி கிளி. இளைஞன் சாதனை

கிளிநொச்சி, பெப். 16

குறைந்தளவு நிலத்தில் நெற்பயிர்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அதை இலகுவாக அறுவடை செய்யும் நோக்கோடு பல தோல்விகளின் பின் கிளிநொச்சி இளைஞனால் புதிய அரிவு வெட்டும் இயந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பரீட்சார்த்த முயற்சியும் வெற்றியீட்டியுள்ளது.

கிளிநொச்சி கரடிப்போக்குச்சந்தி உருத்திரபுரம் செல்லும் வீதியில் கே.கே.கே பவிசன் வெல்டிங் வேக் சொப் வைத்திருக்கும் காண்டீபன் எனும் இளைஞரே இந்த இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.



தற்போது இடம்பெற்று கொண்டிருக்கும் கால போக நெல் அறுவடையின் போது விவசாயிகள் இயந்திரம் மூலம் அறுவடை செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு ரூபா7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையில்செலவுசெய்கின்றனர். இந்த பணத்தை பெற்றுக் கொள்வதற்கும், அரிவு வெட்டும் இயந்திரத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கும் பலர் திண்டாடுகின்றனர். இந்த நிலையில் குறித்த இளைஞன் இந்த முயற்சியை எடுத்து புதிய அரிவு வெட்டும் இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.



சாதாரண புல் வெட்டும் இயந்திரத்தைக் கொண்டு அதில் சில மாற்றங்களை ஏற்படுத்தி நெல் அறுவடைக்கு ஏற்றவாறு குறித்த இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.

இது குறித்து எம்மிடம் கருத்துத் தெரிவிக்கும்போது இந்த இயந்திரத்தை உருவாக்க 6 தடவைகள் முயற்சி எடுத்தும் அது தோல்வி கண்டநிலையில் விடா முயற்சியாக 7ஆவது தடவை இந்த இயந்திரத்தை உருவாக்கினேன் என்று அந்த இளைஞர் குறிப்பிட்டார்.

நண்பர் ஒருவரின் தூண்டுதலாலேயே நான் இந்த புல்லு வெட்டும் இயந்திரத்தை அரிவு வெட்டும் இயந்திரமாக மாற்றியுள்ளேன். எனது குடும்பம் சிறிய குடும்பம் நாங்கள் இந்த இடத்தில் தான் வசிக்கின்றோம். வருமானத்துக்காக வெல்டிங் கடை நடத்தி வருகின்றேன். எனது நண்பன் தினேஸ் இவ்வாறு முயற்சி செய்து பார்ப்போம் என கேட்டதற்கு இணங்கவே நான் அவனின் உதவியுடன் குறித்த முயற்சியை ஆரம்பித்தேன். தொடர்ச்சியாக 6 தடவைகள் தோற்ற போதும் தொடர்ந்து முயற்சித்ததன் பயனாக 7 ஆவதுதடவைவெற்றியளித்துள்ளது.

ஒரு புல் வெட்டும் இயந்திரம் 14 ஆயிரம் ரூபா தொடக்கம் 17 ஆயிரம் வரை இருக்கும். இந்த அரிவு வெட்டும் இயந்திரத்தை உருவாக்க மேலும் 8 ஆயிரம் ரூபா தேவை என்று தெரிவித்த காண்டீபன் அறுவடை செய்தவற்றை நெல் மணிகளாக்கும் இயந்திரத்தையும் விரைவில் தயாரிப்பேன் என்கிறார்.

இந்த இயந்திரம் தயாரித்தமைக்கான முக்கிய காரணம், குறைந்தளவு நிலத்தில் விதைத்தவர்கள் பெரும் இயந்திரங்களை பிடித்து அறுவடை செய்கின்றபோது நட்டத்தை எதிர்நோக்குகின்றனர். அதனை நிவர்த்திசெய்யவே இதைதயாரித்தேன். இந்த அறுவடை இயந்திரம் மூலம் நாள் ஒன்றுக்கு ஒன்றரை ஏக்கர் நெல் அறுவடை செய்ய முடியும். ஒரு ஏக்கர் நிலம் அறுவடை செய்ய 2 லீற்றர் பெற்றோல் போதுமானது.இதன் மூலம் செலவைக் குறைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு-பலவற்றை உருவாக்கும் திறன் இருந்தும் பொருளாதார நிலைமை காரணமாக அது குறித்துச் சிந்திக்க முடியாதுள்ளது என்றும் காண்டீபன் கூறினார்.

(ற-21,ரி3)

# வெளிமாவட்டத்து மீனவரால் தொழிலில் பெரும் பாதிப்பு

## நாயாற்றுப் பகுதி மீனவர்கள் தெரிவிப்பு அதிகாரிகள் அசமந்தம் எனவும் விசனம்



முல்லைத்தீவு, பெப். 16

நாயாற்றுக் கடற்பரப்பில் பருவகால மீன்பிடியை மேற்கொள்ளும் வெளி மாவட்ட மீனவர்களால், தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம் என்று தெரிவித்துள்ள நாயாற்று மீனவர்கள், இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெளி மாவட்ட மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான அனுமதி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தாலேயே வழங்கப்படுகின்றது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எமது மீனவர் சங்கங்களுக்கு கட்டுப்படாமல் குறித்த வெளி மாவட்ட மீனவர்கள் கடற்கரையோரமாக குடியேற்றங்களை அமைத்து வருகின்றனர். இவ்வாறு வாடிகளை அமைப்பதால் கடலுக்குச் செல்லும் படகுகளை கரையேற்றுவது சிரமமாக உள்ளது. மழைகாலத்தில் வெள்ளம் வருவதால் எங்கள் படகுகளை நாங்கள் வீதிக்கு இழுத்து வரவேண்டியதாக உள்ளது என்று நாயாற்றுப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெளிமாவட்ட மீனவர்களால் அமைக்கப்பட்ட குறித்த வாடிகளை அகற்றுமாறு நாம் அவர்களிடம் கேட்கும் போது எம்மோடு முரண்படுகின்றனர். இராணுவத்தின் உதவியை நாடி எமக்கு அச்சுறுத்தல் விடுகின்றனர்.

இதுதொடர்பாக பிரதேச செயலாளருக்கு அறிவித்த போது உடனடியாக பொலிஸாருடன் பேசி அவற்றை அப்புறப்படுத்துகிறேன் என்று தெரிவித்தார். ஆனால், இன்னும் அது நடைபெறவில்லை. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு தெரியப்படுத்திய போது இதற்கு ஒரு குழுவை நியமித்திருக்கிறேன் இதற்கு நான் உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலாது எனக் குறிப்பிட்டார்.

நாம் அதிகாரிகளிடம் கெஞ்ச வேண்டியுள்ளது. எமக்கான அரச அதிகாரிகள் வெளிமாவட்ட மீனவர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகின்றனர். எமது இழப்புக்களை கருத்தில் கொள்வதில்லை. வெளிமாவட்ட தொழிலாளர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் கொழும்பில் இருந்து வருகிறார்கள். எங்களை ஒருவரும் வந்து பார்த்ததே இல்லை.

நாங்கள் ஒரு படகை கொண்டு வருவதென்றால் கிராமச் சங்கத்தில் ஒரு அனுமதி எடுக்கவேண்டும். மீன் பிடித்திணைக்களத்தில் (பிசறிஸ்) அனுமதி எடுக்கவேண்டும். வெளிமாவட்ட தொழிலாளர்களுக்கு ஒரு அனுமதியும் தேவையில்லை- என்றனர்.

இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தப் பிரச்சினை குறித்து எனக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடன் கலந்துரையாடி நிரந்தரத் தீர்வு விரைவில் எட்டப்படும் என்று தெரிவித்தார்.

(ற-21,ரி7)

# தாமதமாக பணிக்கு வந்தால் இனி அரை நாள் விடுமுறை

அரச அலுவலகங்களுக்கு மூன்று தினங்களுக்கு தாமதமாக வரும் பணியாளர்களுக்கு அவர்களது சொந்த விடுமுறையிலிருந்து அரை நாள் விடுமுறை குறைக்கப்பட வேண்டும் என்று அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தாமதங்களுக்கு பதிலீடு செய்ய முடியாத சந்தர்ப்பங்களை மாதாந்தம் கணக்கிடல் வேண்டும்.

அதற்கேற்ப ஒவ்வொரு அலுவலரும் குறித்த மாதத்தினுள் பதிலீடு செய்யாத தாமதங்கள் தொடர்பாக இரண்டு சந்தர்ப்பங்கள் வரை அலுவலரின் விடுமுறைகளிலிருந்து கழிக்கப்படுவதில்லை என்பதோடு, இரண்டு சந்தர்ப்பங்களை விட அதிகமாயின் பதிலீடு செய்யாத சகல தாமதங்களுக்கும் அலுவலரின் விடுமுறைகளிலிருந்து அரை நாள் வீதம் குறைக்கப்படல்வேண்டும்என்றுஅவர்அறிவித்துள்ளார்.

1992.01.25 மற்றும் 1994.01.24 ஆகிய அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள போதிலும், தற்போது புதிய சுற்றறிக்கை வெளியாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-9)

# வர்த்தகர்கள் கைது

மன்னார்,பெப்.16

மன்னார் பஸார் பகுதியில் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும்வகையில்தமதுபொருள்களை விற்பனை செய்த 8 வர்த்தகர்கள் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நடைபாதையில் வைக்கப்பட்டிருந்த பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களில் உரிமையாளர்கள் விசாரணைகளின் பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிராக மன்னார் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-56)

# ஆசிரியர் இடமாற்றத்தை நிறுத்தக் கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

## தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று முன்னெடுத்தனர்

வவுனியா,பெப்.16

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தின் உடற்கல்வி ஆசிரியருடைய இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி பாடசாலை மாணவர்களினால் நேற்று இரண்டாவது முறையாகவும் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய உடற்கல்வி ஆசிரியருடைய இடமாற்றத்தை இரத்துச் செய்து தமது பாடசாலைக்கு அந்த ஆசிரியரையே மீளவும் பெற்றுத் தருமாறு கோரியே குறித்த மாணவர்கள் இந்த ஆர்ப்பாட் டத்தை மேற்கொண்டனர்.



கடந்த வெள்ளிக்கிழமையும் இந்தப் பாடசாலை மாணவர்களால் குறித்த ஆசிரியரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுடைய குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவிடம் கேட்டபோது;

வடமாகாண கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாகவே இந்த ஆசிரியர் இடமாற்றம் இடம்பெற்றுள்ளது-என்றார்.

பாடசாலை மாணவர்களின் குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக பாடசாலையின் மாணவர்களின் பெற்றோர்கள், கல்விசார் சமூகத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துக் குற்றம் தொடர்பான வழக்குகளில் யாழ்.மேல் நீதிமன்றம் அநாவசியமாக தலையிடாது

## மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். பெப். 16

யாழ் குடாநாட்டில் போக்குவரத்துக் குற்றம் தொடர்பான வழக்குகளின்போது நீதிவான்கள், நீதிபதிகளினால் பிறப்பிக்கப்படும் தீர்ப்புக்களில் யாழ். மேல் நீதிமன்றம் அநாவசியமாகத் தலையிட மாட்டாது என்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இதன்படி இனிமேல் போதையிலும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் செல்பவர்களின் சாரதி அனுமதிப் பத்திரங்களை நீதிமன்றங்கள் இடைநிறுத்தினால் அவற்றுக்குரியவர்கள் அவற்றை மீளப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் விபத்துக்கள், அவற்றால் சாவுகள், படுகாயங்கள் அதிகரித்த நிலையில் அதற்குக் காரணமானவர்களுக்கான தண்டனையை நீதிவான் நீதிமன்றங்கள் அதிகரித்த நிலையில், மேல்நீதிமன்ற நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் குற்றம் தொடர்பான வழக்கொன்றில் யாழ். நீதிவான் நீதிமன்றம் விதித்த தீர்ப்புக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மீளாய்வு மனு மீதான விசாரணையின்போதே, அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பில் அநாவசியமாகத் தலையிட முடியாது என நீதிபதி மறுத்துள்ளார்.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் போக்குவரத்துக் குற்றங்கள் சம்பந்தமாக குறிப்பாக மதுபோதையில் வாகனம் ஓட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சாரதிகளின் அனுமதிப்பத்திரங்களைக் குறிப்பிட்ட காலத்துக்கு இடைநிறுத்துமாறு இங்குள்ள நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குகின்றன.

நீதிவான் நீதிமன்றங்களினால் விடுக்கப்பட்ட இத்தகைய கட்டளையை ரத்துச் செய்யுமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

மதுபோதையில் வாகனம் செலுத்தியபோது இடம்பெற்ற விபத்து ஒன்றில் பாதசாரி ஒருவர் சாவடைந்த சம்பவத்தில், சாரதி மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக அவருடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை நீதிவான் நீதிமன்றம் 9 மாதங்களுக்குச் செல்லுபடியற்றது என இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டிருந்தது. இதேபோன்று இன்னுமொரு வழக்கிலும் சாரதி அனுமதிப்பத்திரத்தை 9 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த இரண்டு வழக்குகளிலும் வழங்கப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை எதிர்த்து யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுக்களில், சாரதி அனுமதிப்பத்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை நீக்குமாறு கோரப்பட்டிருந்தது.

அந்த மீளாய்வு மனு மீதான விசாரணை கடந்த வெள்ளியன்று மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போதே நீதிபதி இளஞ்செழியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீதிவான் நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் தாமாகவே முன்வந்து குற்றவாளி என ஒப்புக் கொண்டதன் பின்னர், சட்ட வரையறைக்கு உட்பட்டே தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. எனவே, இத்தகைய வழக்குகள் தொடர்பில் மீளாய்வு மனு தாக்கல் செய்யும்போது, அந்தத் தீர்ப்பில் சட்டரீதியாக என்ன பிழை இருக்கின்றது என்பது மீளாய்வு மனுவில் தெளிவாக சுட்டிக்காட்டப்படவேண்டும்.

நீதிவான் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில் மேல் நீதிமன்றம் தலையீடு செய்வதற்கு விதி விலக்கான காரணங்கள் என்னென்ன இருக்கின்றன என்பதும் அந்த மீளாய்வு மனுவில் முறையாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்களை மீளாய்வு செய்வதற்குரிய சட்ட ரீதியான காரணங்கள் அல்லது விளக்கங்கள் மீளாய்வு மனுக்களில் குறிப்பிடப்படாத சூழ்நிலையில் நீதிவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களுக்கு தற்காலிகமாகக்கூட மேல் நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்படமாட்டாது. ஆகவே, இந்த மீளாய்வு மனு மீதான மேல் நீதிமன்ற விசாரணைகள் முடிவடையும் வரையில் நீதிவான் நீதிமன்றத்தின் தடையுத்தரவு நீடிக்கும் என்றார்.

இந்த வழக்குத் தொடர்பாக அரச சட்டத்தரணி தனது ஆட்சேபனை மனு தாக்கல் செய்வதற்கு மார்ச் மாதம் வரையில் அவகாசம் வழங்கி, நீதிபதி இளஞ்செழியன் வழக்கு விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். (த-4)

# சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 16

வீதியால் சென்ற சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் முயற்சி ஒன்று யாழ். நகரில் இடம்பற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தச்சிறுமியை பாலியல் முறைகேட்டுக்கு உட்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.நகர் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

10 வயதுக்குட்பட்ட அந்தச் சிறுமி தேவை நிமித்தம் வெளியே புறப்பட்டு வீதியால்பயணித்துக்கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இரண்டு பேரைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-101-106)

# வரதட்சணை முறைமை ஒழிக்கப்படவேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, பெப். 16

இலங்கையில் நடைபெறுகின்ற திருமணங்களின் போது வரதட்சணை முறைமை முற்று முழுதாக ஒழிக்கப்பட வேண்டுமென்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

காதலர் தினமான நேற்றுமுன்தினம் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்-யுவதிகள் எதிர்நோக்கி வரும் கல்வி, தொழில் இல்லாப் பிரச்சினையுடன், காதல் பிரச்சினையும் காணப்படுகின்றது. பணம் இல்லாமல் திருமணம் செய்து கொள்ள முடியாது. பெரியளவில் பணத்தைச் செலவழித்தே திருமணம்செய்துகொள்ள வேண்டியுள்ளது.

21 ஆம் நூற்றாண்டு பற்றிப் பேசினாலும் இன்னமும் நாட்டில் வரதட்சணை முறைமை காணப்படுகின்றது. வரதட்சணை காரணமாக இளைஞர், யுவதிகள் பெரும் அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே வரதட்சணை முறைமையை ரத்துச் செய்யுமாறு நான் இன்றைய காதலர் தினத்தில் கோருகின்றேன்.

வரதட்சணை பெற்றுக் கொள்வது வெட்கம் கெட்ட செயலாகும் என்றார். (த-5)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
GUNA BEST PC Computer Repair
077 9086737 50/12, Hospital Road Jaffna. (Vairavar Kovil lane)
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்

Hotel வேலையாள்கள் தேவை
யாழில் இயங்கிவரும் ஐஸ்கிறீம் மற்றும் சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ் காணும் வேலையாள்கள் தேவை. திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.
• றொட்டி வேலையாள்கள்
• பிறைற்றைஸ், பிரியாணி சமையலாள்கள்
• ரீ.மாஸ்ரர்
• ஐஸ்கிறீம் வெட்ட தெரிந்தவர்கள்
• உணவு பரிமாறுநர்
• விற்பனை பிரதிநிதி (Sales Rep)
தொடர்புகொள்ளவும்
0777 710 785
(69326) (10.17.20)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 462
சீட்டிழுப்பு திகதி 2016.02.15
வெற்றி இலக்கங்கள்
22 34 50 54 L
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 43,223,640/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1237
சீட்டிழுப்பு திகதி 2016.02.15
வெற்றி இலக்கங்கள்
04 11 16 61 C
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 10,000,000/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2739 திகதி 15.02.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
19 22 26 53 G
போனஸ் இல. 20
புதன்கிழமை ஜக்போட் ரூ. 11,636,650/-

வேலை வாய்ப்புக்கள் (2016)
வட மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் எமது 04 கிளைகளுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து O/L & A/L படித்த இளைஞர், யுவதிகள் தேவை.
→ அனுபவம் அவசியமற்றது
→ மாதாந்தம் 12,000/= - 18,000/= பெறமுடியும்
→ Medical, ETF, EPF, Insurance செய்து தரப்படும்.
→ தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.
(69285)(15,17,20)
தொடர்புகளுக்கு: 077 136 3797, 077 5566 226

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்
பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்
பதவி :- பொதுமுகாமையாளர்
சம்பளக் குறி.இல :- 101/8
சம்பள அளவுத்திட்டம் :- 11200 - 140X10-150X10-14100
(66/2006 இன்படி)
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
அ) கூட்டுறவுப் பணியாளர் 09ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டமுகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
* சம்பள அளவுத்திட்டம் = 16020-200X10-220X10-20220 (சுற்றுநிருபம் 13/2015 இன்படி)
*02/2012 சுற்று நிருபப்படி இலாபம் ஏற்படின் வாழ்க்கைச் செலவுப்படி 5850/=உம்
படிகள் நீங்கலாக சம்பளத்தின் 15% உம் வழங்கலாம்.
16020X15%= 2403/=
*விண்ணப்ப முடிவு திகதி:- 29.02.2016
* விண்ணப்பங்கள் "தலைவர் மு/க.தொ.கூ.ச.சமாசம் முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு கடிதம் மூலமும் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.
தலைவர்
மு/மா./க.தொ.கூ.ச.சமாசம், முல்லைத்தீவு.
021 229 0008

வீடு விற்பனைக்கு
சிவன் புது வீதி, நல்லூரில் வீட்டுடன் கூடிய ஒருபரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(தரகர்கள் தேவையில்லை)
தொடர்புகளுக்கு:
077 3627 895, 076 6028 898

காணி விற்பனைக்கு
கோப்பாய் தெற்கு வன்னியசிங்கம் வீதியில் 02 நிலப்பரப்பு 2.73 குளி காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: வி. துஸ்யந்தன்
077 167 1174, 0777 286 061

திருப்பதி வெங்கடேசன் மற்றும் அதன் கிளை நிறுவனமான சைவ உணவகம் ஒன்றிற்கும் கீழ்வரும் வேலையாள்கள் தேவை
01. உணவு பரிமாறுபவர்கள்
02. ஹோட்டல் குசினி வேலையாள்கள்
03. மரக்கறி நறுக்குனர் (ஆண்/பெண் இருபாலாரும்)
04. காசாளர்
05. பில் கிளாக்
06. வீட்டு வேலையாள்கள் (பெண்கள்)
07. களஞ்சிய காப்பாளர் (கணினி வடிவமைப்பில்)
08. சுத்திகரிப்பாளர்கள்
09. வீட்டு வாகன சாரதி
10. ரீ மேக்கர்
(69287) (15,17,20)
உடனடித்தொடர்புக்கு:
T.P: 0777 917 753 / 075 330 4521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய முகாமையாளர் தேவை

அராலி வடக்கு முருகமூர்த்தி தேவஸ்தானத்தை நிர்வகிக்கக் கூடிய முகாமையாளர் ஒருவர் தேவை.

விருப்பமானவர்கள் தங்களைப் பற்றிய சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். அராலியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு கொள்ளவும்: தர்மகர்த்தா
அராலி வடக்கு முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபை
"அற்புத வாசா", அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

## வலி- வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் பிரேரணை

மேற்படி சங்கம் சார்பாக யாதேனும் பிரேரணைகள் இருப்பின் அதனை செ. அன்ரன் (செயலாளர்) செல்வகிரி மல்லாகம் என்ற முகவரிக்கு அறியத்தரவும்

சங்கநலன் சார்பாக
செயலாளர் செ. அன்ரன்



## ஏழாலை தெற்கு களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்.

எதிர்வரும் 18.02.2016
வியாழக்கிழமை இந்தியாவில் இருந்து வருகை தரும் சரவணபாவா சுவாமிகளின் விசேட அருளுரை இடம்பெறும் காலை 8.30 மணிக்கு மோட்ச தீபம் ஏற்றும் நிகழ்வும் தொடர்ந்து பஜனை விசேட பூசை வழிபாடுகள் அருளுரை அன்னதானம் ஆகியவை இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிர்வாகி

NLB
தேசிய லொத்தர்

தேசிய லொத்தர் சபை
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

## விநியோகித்தல் முகவர் பதவிகளுக்கான வெற்றிடங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள விநியோக வலயங்களில் தேசிய லொத்தர் சபையின் சகல லொத்தர் சீட்டுக்களையும் விநியோகிப்பதற்கு விநியோக முகவர்கள் தேவை.

| வலயம் | வெற்றிடம் |
|---|---|
| கிளிநொச்சி | 01 |
| முல்லைத்தீவு | 01 |
| யாழ்ப்பாணம் | 01 |
| பருத்தித்துறை | 01 |
| வவுனியா | 01 |
| திருகோணமலை | 01 |
| கந்தளாய் | 01 |
| ஹட்டன் | 01 |
| மொரவக்க | 01 |
| பிபிலே | 01 |

அடிப்படை தகுதிகள்

01. குறிப்பிட்ட வலயத்தில் பிரதான நகரில் குறைந்தது 20X30 அடி அளவிலான காரியாலய கட்டிடத்தொகுதியொன்று அல்லது அதற்கான வசதி இருத்தல் வேண்டும்
02. ஒரு மில்லியன் ரூபாய்க்கான வங்கி உத்தரவாதம்.

தகுதியினை உறுதிசெய்யக்கூடிய பத்திரங்களின் பிரதிகளுடன், எழுத்து மூலமான கோரிக்கையினை விடுப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி 2016.03.15.

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தகுதியினை உறுதி செய்யக்கூடிய பத்திரங்கள் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும். குழுவின் முடிவே இறுதியானதாகும்.

தலைவி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி
கொழும்பு 03

தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
234/2, ...

# காணாமற்போன குடும்பஸ்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

கிளிநொச்சி. பெப். 16
விசுவமடு, தேராவில் பகுதியில் நேற்று முன்தினம் காணாமற்போனதாகக் கூறப்பட்ட வட இலங்கை தனியார் பஸ் சங்க முகாமையாளரான குடும்பஸ்தர் அன்றைய தினமே மாலை குறித்த பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பரஞ்சோதி கண்ணன் (வயது-40) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த குடும்பஸ்தர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டதால் அது தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டனர்.

ஆயினும் கிளிநொச்சி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

விசுவமடு, தேராவில் பகுதியில் வசிக்கும் குறித்த நபர் நேற்று முன்தினம் பகல்வேளை வீட்டில் இருந்து தொலைபேசியில் உரையாடியவாறு வெளியே சென்றுள்ளார். இதன் பின்னர் இவரைக் காணாத வீட்டார் பல இடங்களிலும் தேடியுள்ளனர். ஆயினும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை அயலில் உள்ள கிணறு ஒன்றில் ஆண் ஒருவரின் சடலம் காணப்பட்டுள்ளது. ஊரவர்கள் குறித்த சடலத்தைக் கிணற்றில் இருந்து மீட்டனர். இதன்போது அந்தச் சடலம் காணாமற்போன குறித்த குடும்பஸ்தருடையது என்பது தெரியவந்தது.

சடலத்தின் தலையில் காயம் இருப்பதாலும் உடலில் தளும்புகள் இருப்பதாலும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்த அவரது உறவினர்கள், சடலத்தை விசாரணைகளுக்காகக் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சடலத்தைக் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைத்து உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையை அடுத்து அவர் தற்கொலை செய்துள்ளார் என கிளிநொச்சி மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(த-101-21)

**தேவை** 021 4921 731, 077 8249675
மானிப்பாயில் 65 வயதான பெண்ணை பராமரிப்பதற்கு பெண்மணி தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்.
விவரங்கள் நேரில்

**வீடு, காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்திக்கு அருகில் நல்ல வீடு வளவுடன் விற்பனைக்கு
(c 29302) (14,19,20)
தொடர்பு: 077 905 0274

**வீடு வாடகைக்கு உண்டு**
5ஆம் குறுக்குத்தெரு, சுண்டுக்குளியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
077 695 3215, 077 362 1136

**தேவை**
அரைக்கும் ஆலைக்கு (மில்) அனுபவம் உள்ள வேலை ஆள் தேவை.
077 615 4941, 077 975 1601

## எல்லை நிர்ணய மேன்முறையீடு; பெப். 20 இக்கு முன் சமர்ப்பிக்குக

உள்ளூராட்சி மன்ற நிறுவனமீள் எல்லை நிர்ணயம் தொடர்பான மேன்முறையீடுகளை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக முறைப்பாடுகளை கடந்த வருடம் நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து பதிவு செய்ய ஆரம்பித்ததுடன், மேலும் முறைப்பாடுகள்கிடைக்கப்பெறுவதனால் இம்மாதம் 20 ஆம் திகதி வரை பதிவுகளைப் பெற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகளை துரிதப்படுத்த உள்ளதால் இம்மாதம் 20 ஆம் திகதிக்கி முன்னர் முறைப்பாடுகளை அல்லது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | 26.02.2016 | 27.02.2016 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | | |
| அச்சுவேலி | புத்தூர் | | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | 26.02.2016 | 27.02.2016 | |
| | கல்வியங்காடு | | | |
| பருத்தித்துறை | புலோலி | | | |
| ஊர்காவற்துறை | ........ | | | |
| சுன்னாகம் | கோப்பாய் | 26.02.2016 | 28.02.2016 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| | அளவெட்டி | | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | | |
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | | | |
| | மானிப்பாய் | | | |
| நெல்லியடி | ........ | 26.02.2016 | 28.02.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | | |
| | கைதடி | | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2601 / 021 222 8602
தொலை நகல் : 021 222 2602

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
# வடக்கு, கிழக்கு

## நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம்
## கூட்டக் குறிப்பு (Minutes)

**மேற்குறிப்பிட்ட கூட்டம் 21.01.2016 முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் கூடியது. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட முதலாவது விடயமான "புதிய அரசியலமைப்பை உருவாக்குதல்" தொடர்பில் முழுமையாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.**

01. புதிய அரசியலமைப்பு ஆக்கம் சம்பந்தமான நடைமுறையில் 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 17 ஆம் திகதி பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த அறிக்கைக்கு (Manifesto) தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாக எமது அரசியல் தீர்வு நிலைப்பாட்டை முன் வைப்போம்.

02. 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் "சொல்லப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கொள்கையானது" 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் அறிக்கையில் கைவிடப்பட்டதாக மேற்கொள்ளப்படும் பரப்புரை உண்மைக்கு மாறானது. அத்தோடு இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமான விடயத்தில் வடக்கு மாகாண மக்கள் மட்டும் கொடுத்த தீர்ப்பை அடிப்படையாகக் காட்டுவது தவறானதாகும். ஆதலால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டுக் கொடுத்த ஆணையான 2015 ஓகஸ்ட் பொதுத் தேர்தல் அறிக்கையே (Manifesto) எமது ஆணையாக எடுத்துக்காட்ட வேண்டும்.
அந்தத் தேர்தல் அறிக்கையானது இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(EPRLF), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) எனும் கட்சிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டதாகும்.

03. நாடாளுமன்றமே அரசியலமைப்பை உருவாக்கும் உச்ச அதிகாரங் கொண்ட அமைப்பாகும். அத்தகைய நாடாளுமன்றம், அரசியலமைப்புப் பேரவையாக அமைந்து முன்னெடுக்கும் புதிய அரசியமைப்பு உருவாக்கத்தின்போது தேசிய (இனப்) பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும். அந்த முன்மொழிவுகள் 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வழங்கிய ஆணையையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

04. 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் அறிக்கையின் பக்கம் 06 மற்றும் 07ஆம் பக்கங்களில், "தமிழ் மக்களும் அரசியலமைப்பு ஏற்பாடுகளும்" எனும் தலைப்பிலும்; "அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு" எனும் தலைப்பிலும் அதிகாரப் பங்கீட்டு அடிப்படைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. "சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு" தொடர்பில் ஐ.நா. சாசனத்தில் வலுவூட்டப்பட்டு (Entrenched clause) வரையப்பட்ட வரிகளும் வாக்கியங்களும் அவ்வாறே உள்ளடக்கப்பட்டுள்ளன.

05. அரசியல் தீர்வு ஒன்றுக்கான த.தே.கூட்டமைப்பின் முன்மொழிவானது, சமஷ்டித் தத்துவத்தின் அடிப்படையிலும்; சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையிலும் வரையப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டமாகவே அமைந்திருக்கும்.

06. 2015 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பு ஆணைபெற்ற தேர்தல் அறிக்கையின் 06 மற்றும் 07ஆம் பக்கங்களின் உள்ளடக்கம் இத்துடன் தங்களின் பார்வைக்கும், வழிகாட்டலுக்குமாக இணைக்கப்பட்டுள்ளன.

07. புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக பொது மக்களின் கருத்தறிவுக்கு நியமிக்கப்பட்ட குழு முன் யோசனைகளை முன் வைப்பதற்கு வடக்கு, கிழக்கிலுள்ள பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டும். அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் தமது யோசனைகளைத் தனியாகவோ அல்லது வேறு அமைப்புக்களூடாகவோ முன்வைப்பது தவிர்க்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் யோசனைகள் அரசியலமைப்பு பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக மாத்திரம் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

08. அதன் பொருட்டு இத்துடனுள்ள 2015 ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையின் அடிப்படைகளை கருத்திற்கொண்டு தங்கள் கருத்துக்களை வழிகாட்டலாகக் கொண்டு முன் வைப்பது அர்த்தமுள்ளதாக இருக்கும் என்பதையும், அப்போது ஒன்றுபட்ட தமிழ் மக்களின் ஒருமித்த கருத்தாகவும் நிலை நாட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### தமிழ் மக்களும் இன்றிருக்கும் அரசியலமைப்பு ஏற்பாடுகளும்

சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் பிரகாரமும் தமிழர்களாகிய நாங்கள் தனிச் சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம். ஒரு மக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும், அச்சமின்றியும், நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகின்றோம்.

இதனால், தனித்துவமான மக்களாகவும், தேசிய இனமாகவும் இருப்பதுடன் நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் தொடர்பிலும், எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும், மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும், அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும், பிளவுபடாததுமான இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு,கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றோம்.

இவை தொடர்பிலான தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் பொருத்தமற்றதாகவும், திருப்தியற்றதாகவும் அமைந்துள்ளன. தற்போதுள்ள ஏற்பாடுகள் பெரும்பான்மை மக்களுக்குச் சார்பானதாகவும், அவர்களது ஆதிக்கத்தை தமிழர் மீது திணிக்கும் வகையிலுமே அமைந்துள்ளன. நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியலமைப்புக் கட்டமைப்பின்றி பல்லின சமூகமொன்றில் ஜனநாயகம் செயற்படமுடியாது. இந்தப் பின்புலத்திலேயே நாம் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம்.

இறையாண்மை என்பது ,மக்களிடமே உண்டு. அரசிடம் அல்ல எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக வலியுறுத்துகின்றது. தமிழ் மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசிடமல்ல, தமிழ் மக்களிடமே பொதிந்திருக்கின்றது. இதனடிப்படையில், மத்திய அரசிடமும் அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13 ஆம் திருத்தச் சட்டம் முற்றிலும் பிழையானதொன்று. எதேச்சதிகார அரசுக்கு விடுக்கும் அடிப்படை ஜனநாயகச் சவாலின் மீதே எமது அரசியல் சித்தாந்தம் வேரூன்றி நிற்கின்றது. இந்த நோக்கம் நாடளாவிய ரீதியில் செயற்படுவதற்கென நாம் கடந்த ஜனவரி 8இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மாபெரும் பங்களிப்பை வழங்கியிருந்தோம். ஆகவே, எமது அரசியலானது அனைத்து மக்களதும் தேவைகள் மற்றும் அரசியலபிலாசைகளோடும் தமிழ் பேசும் மக்களது நீதி மற்றும் சமத்துவத்துக்கான போராட்டத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது.

### அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அத்தியாவசியமெனக் கருதும் கோட்பாடுகளும், பிரத்தியேக அரசியலமைப்பு ஏற்பாடுகளும் பிரதானமாக இந்தத் தீவில் வாழும் பல்வேறு மக்களிடையே ஆட்சி அதிகாரங்களைப் பங்கிடுவதனூடாகப் பகிர்ந்த இறையாண்மையை உறுதிப்படுத்தலைக் குறித்தது. உண்மையான நல்லிணக்கத்தையும், நீடித்து நிலைக்கும் சமாதானத்தையும், இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான அபிவிருத்தியையும் எய்துவதற்குப் பின்வரும் அதிகாரப் பங்கீட்டு அடிப்படைகள் முக்கியம் பெறுகின்றன.

தமிழர்கள் தமக்கேயுரிய நாகரிகம், மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்ட தனித்துவமிக்க தேசிய இனமாவர். அத்துடன் தொன்று தொட்டே சிங்கள மக்களுடனும் ஏனைய மக்களுடனும் இந்தத் தீவில் வாழ்ந்து வருகின்றனர்.

01. புவியியல் ரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ளதும், தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதுமான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களதும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களதும் பூர்வீக வாழ்விடங்களாகும்.

02. இலங்கை நாடு ஏற்றுக்கொண்டு, கைச்சாத்திட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் குடியியலுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்திலும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சாசனத்திலும், அடங்கியிருக்கும் விதிகளின் பிரகாரம், "தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாவர்".

03. முன்னர் இருந்தவாறு ஒன்றுபட்ட வடக்கு, கிழக்கு அலகைக் கொண்ட சமஷ்டிக் கட்டமைப்புக்குள்ளே அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற்கொள்ளப்படும் அனைத்து அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்துடையவர்கள். இது வடக்கு,கிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எந்தவித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்.

04. பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடானது நிலத்தின் மீதும், தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சட்டம் - ஒழுங்கு, சட்ட நடைமுறை என்பவற்றின் மீதும், சமூக பொருளாதார அபிவிருத்தியின் அங்கங்களான சுகாதாரம், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, பண்பாட்டுத்துறை, உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து வளங்களை திரட்டிக் கொள்ளல் மற்றும் நிதி அதிகாரம் என்பவற்றின் மீதானதாகவும் இருக்க வேண்டும்.

05. வடக்கு, கிழக்கில் வாழும் இளைஞர்களுக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டின் மூலம் புதிய கைத்தொழில் துறைகளும், வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்படல் வேண்டும்.

06. தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறாதோர் தமக்கு உகந்த துறைகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு மாற்று வழிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

**மேற்குறித்த யாவும் ஒன்றுபட்டதும் பிளவுறாததுமான இலங்கைக்குள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.**

**மாவை சோ.சேனாதிராசா**

**துணைத்தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றக்குழு தலைவர்,இலங்கைத் தமிழரசுக் கட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்

ரெஜி னோல்ட் கூரே, முன்னாள் ஆளுநர் பளிகக்கார, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன் மற்றும் வடக்கின் 5 மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் இதில் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் பெரிய அபிவிருத்தித் திட்டங்களின் தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தித் தேவைகளுக்கு வடக்கு மாகாணத்திற்கு 3 ஆயிரம் பில்லியன் ரூபா தேவை என்று மாகாண சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதேபோன்று வடக்கின் அரச அதிபர்கள் ஒவ்வொருவரும், மாவட்டத்தில் மிகப் பெரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எவ்வளவு நிதி தேவை என்ற விவரங்களைச் சமர்ப்பித்தனர்.

இதன் போது தற்போது வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. மிகப் பெரியளவிலான நிதி முதலீட்டுத் திட்டங்களையே, வடக்கு - கிழக்கு மாகாண நிதி உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாகக் கொழும்பு அரசினால் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வழங்கப்பட்ட தேவை மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதுடன், பெரியளவிலான நிதி முதலீட்டுத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மார்காணங்களுக்கு நிதி உதவி வழங்கும் மாநாடு தொடர்பில் தம்முடனோ, அல்லது மாகாண சபைகளுடனோ கலந்துரையாடாமல் கொழும்பு அரசு தன்னிச்சையாக நடவடிக்கைளை மேற் கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-5-101)

## முன்பள்ளி

இந்தச் சம்பவம் நேற்று மாலை விசுவமடு 12ஆம் கட்டைப் பகுதி யில் இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த ஆசிரியை சிவபாலன் கஸ்தூரி ( வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் கப் வாகனமும் மோதியமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நேற்று சிவில் பாதுகாப்புத் தலைமையகத்தில் இடம்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலை முடித்துக்கொண்டு கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த ஆசிரியையை எதிரே வந்த வெள்ளை நிற கப் வாகனம் மோதியதாகக் கூறப்பட்டது. விபத்தை ஏற்படுத்திய குறித்த வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-21-ரி3)

## சிறைச்சாலை விசேட பகுதி புனரமைக்கப்படவில்லை

### ஆணையாளர் மறுப்பு

கொழும்பு, பெப் .16

விஜய குமாரதுங்க மற்றும் சரத் பொன்சேகா ஆகியோர் தடுத்துவைக்கப்பட்டிருந்த வெலிக்கடை சிறைச்சாலையின்'எஸ்' சிறைக் கூடம் தற்சமயம் சுத்திகரிக்கப்பட்டு வருவதாக வெளி வந்துள்ள வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ள மறுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும், பேச்சாளருமான துஷார உபுல்தெனிய தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சிறைக்கூடம் வெகு விரைவில் அங்கு வரவுள்ள முக்கிய பிரமுகர் ஒருவருக்காக சுத்திகரிக்கப்பட்டு வருவதாக பத்திரிகையொன்றில் வந்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(த)

## போதையில் தாறுமாறாக மோட்டார் சைக்கிள் ஓடிய இரு ரஷ்ய யுவதிகள் கைது

கொழும்பு, பெப்.16

மிதமிஞ்சிய கஞ்சாப்போதையில் ஏனைய வாகனங்களுக்கு இடையூறு செய்யும் வகையில் பிரதான வீதியொன்றில் மோட்டார் சைக்கிளொன்றைத் தாறுமாறாக ஓட்டிச்சென்ற இரு ரஷ்ய யுவதிகளை ஹபராதுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

26 வயதான இந்த யுவதிகள் இருவரும் நேற்றுமுன்தினம் ஆபத்தான வகையில் மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்துள்ளனர். ஹெடிவத்த சந்தியில் நின்ற பொலிஸ் குழுவொன்று இவர்களை நிறுத்தி விசாரணை செய்துள்ளது.

மோட்டார் சைக்கிள் தொடர்பான எந்த ஆவணமும் சாரதி அனுமதிப் பத்திரமும் அவர்க ளிடம் இருக்கவில்லை. அத்துடன் அவர்கள் பொலிஸாருடன் வாக்குவாதம் செய்துள்ளனர். அதனைத் தொடர்ந்து மகளிர் பொலிஸார் வரவழைக்கப்பட்டுச் சோதனை நடத்தப்பட்டபோது ஒருவரிடமிருந்து நூறு மில்லிகிராம் கஞ்சாவுடன் அரைவாசி புகைக்கப்பட்ட சுருட் டொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

(த)

## கண்ணீர் அஞ்சலி



யா/ இராமநாதன் கல்லூரியின்
முன்னைய அதிபரும் பழைய
மாணவியுமாகிய
திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம்
அவர்கள் கனடாவில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
(69324) (12.17.18.20)

## பதினேழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருமதி
**அன்னலட்சுமி கந்தையா**

தோற்றம் 16.04.1934
மறைவு 24.02.1999

திதி: பூர்வபக்க நவமி (16.02.2016)

அன்பின் ஒளிவிளக்காய்
அறிவின் சிகரமாய்
ஊர் போற்றும் உத்தமியாய் வாழ்ந்து
எமையெல்லாம் ஆளாக்கிய
அன்புத் தெய்வமே
ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டுகள் பதினேழு ஆகியும்
அழியாத ஓவியமாய்
இன்றும் எம் மனதில்....

"கமலவாசா"
கந்தரோடை, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(68922)(11,19)

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
**சின்னராசா செல்வராணி**



தோற்றம் 24.09.1957
மறைவு 10.03.2014

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
எம்முன்னே தோன்றாப் பொருளாய் ஒளி வீசி,
நற்பிரசையாக தரணியில் வாழ எம்மை
வழிநடத்திய எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.
கருணாநிதி சனசமூக நிலையம் (அருகில்)
வல்வெட்டி.
(65927)(11.19.20)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**கனகசபை சண்முகவடிவேல்**
**(மருமோன்)**



தோற்றம் 1949.05.14
மறைவு 2016.01.18

கடந்த 18.01.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் கனகசபை சண்முகவடிவேல் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (15.02.2016) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அன்னாரது வீட்டுக்கிருத்தியமும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (17.02.2016) புதன்கிழமை அவரது பிறப்பிடமான மடத்தடி வீதி, கொடி காமத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி வீதி,
கொடிகாமம்.
077 072 1752 (60735) (14,19,20)
குடும்பத்தினர்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்னன்
**நாகரத்தினம்**



தோற்றம் 02.03.1950
மறைவு 09.03.2014

திதி: 16.02.2016 நவமி

அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தந்தையே!
கண்மூடித் திறக்கும் நேரத்தில்
எங்களைத் தவிக்கவிட்டு
நிரந்தரமாய் பிரிந்தீர்களே!
உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்?
ஆண்டுகள் இரண்டு ஆனாலும் அணையாத
உங்கள் நினைவுகள்!!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை
076 864 8897
(65928)(11.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 116 குடும்பங்கள் தற்போதும் மீள்குடியமராது முகாம்களில்

## விடுவிக்கப்பட்ட வலி.வடக்கில்

யாழ்ப்பாணம்,பெப்.16
வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 116 குடும்பங்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 40 குடும்பங்களும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 76 குடும்பங்களுமே தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பிரதேசங்கள் கடந்த ஆண்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டன. இவ்வாறு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் படிப்படியாக மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

ஆனாலும், இன்னமும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாக யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 40 குடும்பங்களும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 76 குடும்பங்களுமே தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வறுத்தலைவிளான் மற்றும் பளை வீமன்காமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

நலன்புரி நிலையங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ள இந்த மக்கள், தமக்கான அடிப்படை வசதிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இல்லை என்றும், வீடுகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமக்கான தொழில் வாய்ப்பு எதுவும் இங்கே இல்லை எனவும் பிரதேச செயலக அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தினரின் முகாம்கள் சில இடங்களில் அமைந்துள்ளமையால் அந்தக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. (ஐ-5)

## அறுவடை இயந்திரமில்லாது விவசாயிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.16
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நெல் அறுவடை இயந்திரங்கள் போதுமானதாக இல்லை. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி தென்மேற்கு பிரதேசசபையின் நவாலி, வழுக்கையாறு, கட்டுடை மற்றும் நவாலி களையோடைப் பகுதி விவசாயிகளே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தற்போது குறித்த பகுதிகளில் நெல் அறுவடை செய்வதற்கான பருவத்தை அடைந்துள்ள போதும், மக்கள் அவற்றை அறுவடை செய்வதில் பெரும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர்.

தற்போது வன்னியிலிருந்து குத்தகைக்குக் கொண்டு வரப்பட்ட அறுவடை இயந்திரங்கள் பல பழுதடைந்துள்ளன. எனவே, நவாலி, கட்டுடை, வழுக்கையாறுப் பகுதியில் உள்ள நெல்லை அறுவடை செய்யப் போதுமான அறுவடை இயந்திரங்களைப் பெற்றுக் கொடுக்கப் பிரதேச செயலாளர், கமநல கேந்திர பெரும்பாக அதிகாரி ஆகியோர் முன்வர வேண்டும் என விவசாயிகள் கேட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சண்டிலிப்பாய்ப் பகுதி கமநலசேவைகள் அதிகாரியைத் தொடர்பு கொண்டபோது: தம்முடைய கட்டுப்பாட்டில் நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் எவையும் இல்லை எனவும் தனியாரே அவற்றை வைத்துள்ளனர் எனவும் தெரிவித்தார். (ற-ஐ-ரி5,50)

## வடக்கிலுள்ள போர்ச் சின்னங்கள் இன வேறுபாட்டை ஏற்படுத்தும்

### ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் உறுப்பினர் சுகு சிறிதரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்;,பெப்.16
ஒரு சமூகம் வெற்றி பெற்றதாகவும், இன்னொரு சமூகம் தோற்கடிக்கப் பட்டதாகவும் காண்பிக்கும் வகையிலேயே வடக்கு - கிழக்கில் போர்ச் சின்னங்கள் இன்னமும் காணப்படுவதாக, ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் உறுப்பினர் சுகு சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற, புதிய அரசமைப்புக்காக மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வென்றவர்கள், தோற்றவர்கள் என்ற அடிப்படையில் போர்ச் சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு சமூகம் தோற்றதாகவும், மற்றொரு சமூகம் வென்றதாகவும் சுட்டிகாட்டும் தன்மையில் அந்தச் சின்னங்கள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பௌத்த மதம் உன்னதமான மதம். அந்த மதம் மலிவான அரசியலுக்கும், ஆக்கிரமிப்புக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பொலிஸ்நிலையங்கள் மற்றும் அரசநிர்வாகத்திணைக்களங்கள் நாட்டு மக்களுக்கு ஏற்றவகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அங்கு பொது மக்கள் தமது காரியங்களை நிறைவேற்றுவதற்குப் பயமின்றிச் செல்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பல்லின மொழி மதம் கலாசாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சட்டம் ஒழுங்குகள், முப்படை, நீதி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மறு சீரமைப்புச்செய்யப்பட வேண்டும். இன விகிதாசாரங்கள் பேணப்பட வேண்டும். மனித அடிப்படை உரிமைகள் பற்றிய போதனைகள் வேண்டும். அதிகாரங்கள் மிக முக்கியமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். சமூகத்தில் பெண்களின் தலைமைத்துவம் மிக அவசியமாக இருக்கின்றது. தமிழ்த் தலைமைகளில் தமிழ்த்தேசியம் ஆண்களின் தலைமையாக இருக்கின்றது. பெண்களுக்கு உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களில் 40 வீதமும் ஒதுக்கப்பட வேண்டும்- என்றார். (ஐ-5-106)


# கண்ணீர் அஞ்சலி



## திரு.அம்பலவாணர் தம்பிஐயா
## ( சித்தப்பா )

இளைப்பாறிய தபாலதிபர்
முன்னாள் முகாமையாளர் - சீவம்ஸ் ஹோட்டல்,கொழும்பு.

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும்,
சயம்பு வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து
நீர்கொழும்பில் வசித்து வந்தவருமாகிய
திரு.அம்பலவாணர் தம்பிஐயா
(இளைப்பாறிய தபாலதிபர்,முன்னாள்
முகாமையாளர் - சீவம்ஸ் ஹோட்டல்,கொழும்பு.)
அவர்கள் 13.02.2016 சனிக்கிழமை அன்று
சிவபதம் அடைந்துள்ளார்

**அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நாங்கள் ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளோம் ! அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**P.சீவரட்ணம்**
Hotel Seevams - Colombo
Seevam Export (Pvt) Ltd - Colombo | Seevam Textile - Jaffna
**மற்றும் ஊழியர்கள்**

தோற்றம் : 07.04.1930 மறைவு : 13.02.2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவரைத் தாக்கிய கடற்படை மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சார்ள்ஸ் நிமலநாதன் எம்.பி. பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம்

மன்னார்.பெப்.16

சட்டத்தை மீறும் வகையில் சிவில் உடையில் முகங்களை மறைத்து முகமூடியணிந்தவாறு மீனவர்களைக் கண்மூடித்தனமாக, கொடூரமாகத் தாக்கி, கத்தியால் வெட்டும் கடற்படையினருடைய செயற்பாடானது, நாட்டில் சட்டம் நீதி எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது என்பதை வெளிப்படையாகவே காட்டுகின்றது. குறித்த கடற்படையினருக்கு எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். – இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிமலநாதன் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கடற்படையினரால் தலையில் கத்தி வெட்டுக்குள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, அவசர சிகிச்சை பெற்ற மீனவரை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த மீனவர்கள் நான்கு பேர் இரணதீவு கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு வந்த கடற்படையினர் அவர்களில் இருவரைத் தாக்கியதுடன் கத்தியால் கொடூரமான முறையில் வெட்டியுமுள்ளனர். ஏனைய இருவரையும் கைது செய்து பொலிஸில் தடுத்து வைத்துள்ளனர். கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் நாட்டில் நல்லாட்சி நடைபெறுகின்றது என்ற அரசின் பொய்ப் பரப்புரையைக் கோடிட்டுக் காட்டுகிறது.

வட பகுதியில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் கடற்கரை ஓரங்களை ஆக்கிரமித்துள்ள தென்பகுதி மீனவர்கள், சட்டவிரோதமான முறையில் கடற்றொழிலில் ஈடுபடும்போது வாய் மூடி மௌனிகளாக இருக்கும் கடற்படையினர், நியாயமான முறையில் தமிழர் தாயகப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் வட பகுதி மீனவர்களை தமிழர்கள் என்கின்ற காரணத்துக்காகத் தாக்குவதும் அச்சுறுத்துவதும் தொடர்கிறது.

இவ்வாறு சட்டத்தை கையில் எடுத்து தான்தோன்றித்தனமான முறையில் மீனவர்களை தாக்கிய- காயம் விளைவித்த கடற்படையினரை சட்டத்தின் முன் நிறுத்தி தக்க நடவடிக்கை எடுப்பதுடன் பாதிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் மீண்டும் வட பகுதியில் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஐ-21)

# தமிழருக்கான தீர்வை கட்சிகள் பெற்றுக் கொடுக்க வேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். ஒவ்வொரு கட்சியும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கான நல்ல தீர்வை நோக்கி நாம் செல்ல வேண்டும். – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற புளொட் அமைப்பின் வுனியா மாவட்டக் காரியாலயத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இன்று நாட்டில் பலர் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். எல்லோரும் அரச உத்தியோகத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் அரச உத்தியோகம் வழங்குவது என்பது இயலாத விடயம்.

தொழில் வாய்ப்பற்றவர்கள் சுயதொழிலைச் செய்யலாம். அதனை வழங்க பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். அந்த விடயத்தை இன்னமும் அரசு செய்ய முனையவில்லை.

வடக்கு முதலமைச்சரைப் பற்றிய விமர்சனங்கள் தனிநபர்களுடைய கருத்துக்களே. அவை கட்சியின் கருத்துக்கள் அல்ல. வடக்கு மாகாண முதலமைச்சர் தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கியே செல்கிறார்.

வடமாகாண முதலமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நம்பிக்கைக்குரிய ஒருவர். சரியான ஒருவரான முதலமைச்சரைப் பற்றி பல்வேறு கருத்துக்கள், விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவையெல்லாம் தனி நபர்களின் கருத்துக்களேயன்றிக் கட்சிகளது கருத்துக்கள் அல்ல.

நாட்டின் நலனுக்காகவே முதலமைச்சராக விக்னேஸ்வரனை சம்பந்தன் நியமித்தார். அந்த நேரம் மாவை சேனாதிராசாவை முதலமைச்சராக்க வேண்டும் என கூட்டமைப்பில் உள்ள அனைத்துக்கட்சிகளும் தீர்மானித்த போதிலும் சம்பந்தன் விக்னேஸ்வரனை நியமித்ததன் நோக்கம் இப்போது எனக்குப் புரிகிறது.

தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத்தருவதில் சம்பந்தனின் பங்களிப்பும் அவசியமானது என்பதை நாம் மறக்கக்கூடாது.

மைத்திரியை தமிழர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடு தெரிவு செய்தார்கள். அவர் அந்த எதிர்பார்ப்பை இன்னமும் சரியாகச் செய்யவில்லை -என்றார். (ற-ஐ-21,402)

# வீதிகளில் இடையூறு விளைவிக்கும் கால்நடைகள் இன்று பிடிக்கப்படும்

## கரைச்சி பிரதேச சபை அறிவிப்பு

கிளிநொச்சி, பெப்.16

கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள வீதிகளில் இடையூறு விளைவிக்கும் கால் நடைகள் அனைத்தும் பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்டவர்களால் இன்று முதல் பிடிக்கப்படும் என கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் கணேசன் கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்டதான பிரதேசத்தின் பரந்தன், இரணைமடுவை அண்மித்த கிராமங்களில் இரவு வேளைகளில் யாழ்-கண்டி வீதியூடாகச் செல்லும் வாகனங்களுடன் மாடுகள் அடிக்கடி மோதுண்டு இறக்கின்றன. இதனால் வாகன உரிமையாளர்களும் பொதுமக்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களை நாளாந்தம் எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவ்வாறு போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் காணப்படுகின்ற கால்நடைகள் பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்டவர்களால் பிடிக்கப்பட்டு, அந்தக் கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி3)



# விடுமுறை விடுதி முல்லையில் திறப்பு

முல்லைத்தீவு,பெப்.15

முல்லைத்தீவு நகரப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட "முல்லைத்தீவு விடுமுறை விடுதி" நேற்றுமுன்தினம் பொதுநிர்வாக மற்றும்முகாமைத்துவ அமைச்சர் மத்தும பண்டாரவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண சபை பிரதித் தலைவர் அன்ரனி ஜெகநாதன், நான்கு மதத் தலைவர்கள், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உரையாற்றும் போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளியில் இருந்து வருகின்ற விருந்தினர்களுக்கான இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தோம்.


25 அறைகளைக் கொண்ட இந்தக் கட்டடம் எங்களுடைய மாவட்டத்துக்கு வருகின்ற விருந்தினர்கள் தங்குவதற்கும், அவர்களுக்கான விருந்தோம்பலை மேற்கொள்வதற்கும் சிறந்த முறை யில் உதவும்.- என்றார்.

அங்கு உரையாற்றிய பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர், கொழும்பு மாவட்டத்தில் வாழுகின்ற மக்கள் எவ்வாறு அடிப்படை வசதிகளுடன் வாழ்கிறார்களோ அதே போல முல்லைத்தீவு மாவட்ட மக்களும் அடிப்படை வசதிகளுடன் வாழ வேண்டும் என்றே சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு ஏற்றாற் போல நாங்கள் எல்லோரும் பணி செய்தல் வேண்டும். நாங்கள் இரு தரப்பினரும் கைகோர்த்து நாட்டை முன்னெடுத்துச் செல்வதன் மூலம்தான் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்றார்.

இந்த நிகழ்வு ஆரம்பிக்கும் போது தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதுடன், நிகழ்வு முடியும் போது சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. (ற-ஐ)


## மரண அறிவித்தல்

### அப்புத்துரை அழகேந்திரன்



வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை அழகேந்திரன் 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (ATI யாழ்ப்பாணம்), அனுராகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு திருமதி அப்புத்துரை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு திருமதி செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அழகராசா மற்றும் தவமலர், இந்திராணி, இரஞ்சிதமலர், ஞானமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(சி/29132)(11,19)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தொடர்பு: 077 249 2331


# மணி விழா

அச்சுவேலி,பெப்.16

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும்,தெல்லிப்பழை கோட்டக்கல்வி அதிகாரியுமான அப்பாத்துரை ஈஸ்வரநாதனின் மணி விழா நாளை பி.ப. 2 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி கற்பக விநாயகர் கலை அரங்கில் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

தொடக்கவுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

வாழ்த்துரையை வடக்கு ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதய குமார், யாழ். பல்கலைக் கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன், முன்னாள் வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா, முன்னாள் இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள் ச.நா.தணிகாசலம்பிள்ளை, வே.கி.செல்வரத்தினம், வ.செல்வராசா, ஆ.இராசேந்திரம், திருமதி அ.வேதநாயகம், வலிகிழக்கு பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் கல்வியியற்கல்லூரி பீடாதிபதி ப.தனபாலன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ற-ஐ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு-செலவுத் திட்ட நிதியில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி

## மாவை. சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

சாவகச்சேரி,பெப்.16

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் கடந்த 30 வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன. அவற்றின் அபிவிருத்திக்கு இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால் விரைவில் பல அபிவிருத்தி வேலைகள் மேற் கொள்ளப்படும். கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரால் பல்வேறு பாதிப்புக்கள் மக்களுக்கு ஏற்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான வீதிகள் சேதமடைந்தும், சிலவீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாமலும் உள்ளன. - இவ்வாறு நாடளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாகாண சபை உறுப்பினர் கேவசன் சயந்தனால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரதேசபொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

> இதேபோன்று ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கிராம அபிவிருத்திக் குழுக்களை உருவாக்கி அந்த அமைப்புக்கள் ஊடாக அபிவிருத்தித் திட்டங்களை இனம் காண வேண்டும்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வீதி அபிவிருத்தி என்பது மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சிசபைகள்போன்றவைகளால் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டிய வியடமாகும். இவற்றுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றாலும் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளால் அபிவிருத்திசெய்யப்பட்டுவருவதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த வருடம் ஆட்சியிலிருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத பல வீதிகளை புனரமைத்து வழங்கியுள்ளனர்.

சில வீதிகள் மத்திய, மாகாண அரசுகளின் பராமரிப்பில் உள்ளன. அவை வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் போன்றவற்றால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. மத்திய, மாகாண அரசுகளினால் நிதி வழங்கப்படும் போது இந்த அமைப்புகள் வீதிகளை புனரமைத்து வருகின்றன.

முன்னைய ஆட்சியாளர் காலத்தில் எம்மால் பல்வேறு அபி விருத்தித் திட்டங்கள் முன் வைக்கப்பட்ட போதிலும், தாங்கள் நினைத்ததையே செய்தார்களே தவிர மக்களின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

யாழ்.மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் பல்வேறு தேவைகள் காணப்படுகின்றன. அங்குள்ள மக்கள் தனிப்பட்ட ரீதியில் கடிதங்களை எமக்கு அனுப்பும் போது எந்த வேலைக்கு முன்னுரிமை கொடுப்பது என்று நாங்கள் தடுமாறவேண்டியுள்ளது.

இந்த நிலையில் தென்மராட்சி பிரதேச மக்களால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி தொடர்பான அறிக்கை என்னிடம் வழங்கப் பட்டது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தித் திட் டங்களை மத்திய, மாகாண அரசு கள்மற்றும்உலக நாடுகளுடன் கதைத்து அதற்கான நிதியைப் பெற்று அபிவிருத்திகளைச் செய்ய முடியும்.

இதேபோன்று ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கிராம அபிவிருத்திக் குழுக்களை உருவாக்கி அந்த அமைப்புக்கள் ஊடாக அந்தந்தக் கிராமத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இனங்கண்டு அவற் றில் அவசியமெனக் கருதும் வேலைத் திட்டங்களை முன்னுரிமைப் படுத்தி எமக்கு வழங்னால் நிச்சயம் அவற்றை ஏதோ ஒருவழியில் மேற்கொள்ள எமக்கு உதவியாக இருக்கும்.-என்றார். (ற-ஜ-9)

---

## வீரமாமுனிவர் நினைவு விழா

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ். தமிழ்ச் சங்கம் நடத்தும் வீரமாமுனிவர் நினைவு விழா, எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு தூய சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவரும், தூய சம்பத்திரிசியார் கல்லூரி அதிபருமாகிய அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மன்னார் மறைமாவட்ட கலையருவி இயக்குநர்வண.பிதாதமிழ் நேசன் அடிகளார் 'வீரமாமுனிவரும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும்' எனும் தொனிப் பொருளில் சிறப்புரை யாற்றவுள்ளார். (ற-ஜ-ரி)



கடற்கரை வீதியில் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு முன்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கான கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவுற்றுள்ளன. தற்போது கட்டடத்தின் உள்ளக வீதிகள் மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருவதோடு விரைவில் இந்தக் கட்டடம் திறந்தும் வைக்கப்படவுள்ளது. (ற-ஜ-17)

---

# அபிவிருத்திக் கருத்தறியும் நிகழ்வில் மின்சாரம் தடைப்பட்டதால் சிரமம்

சாவகச்சேரி, பெப்.16

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக மக்களிடம் கருத்தறியும் நிகழ்வில் மின்சாரம் தடைப்பட்டதால் கூறப்பட்ட கருத்துக்களை மற்றவர்கள் செவிமடுக்க முடியாத நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் மேடையில் நின்று நாடளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியவிதத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என்றும், மின்சாரம் இல்லாததால், பலர் தமது கருத்துக்களைத் தெரிவிக்காமல் இருந்து விட்டனர் என்றும் கூறப்பட்டது.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச அபிவிருத்தி தொடர்பான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றது. நிகழ்வு தொடங்கி பிரதிநிதிகள் தமது கருத்துக்களை தெரிவிக்கும் நேரத்தில் மின்சாரம் தடைப்பட்டதால் மக்கள் தமது கருத்துக்களை ஏனையோருக்குக் கேட்கும்படியாக கூறமுடியாத நிலை ஏற்பட்டது.

மக்கள் கருத்துக்கள் வரிசையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரு கூறுகளாகப் பிரித்தல், விடத்தற்பளைப் பகுதியில் வைத்தியசாலை அமைத்தல், சாவகச்சேரியிலிருந்து கச்சாய் கிளாலி அல்லிப்பளை ஊடாக ஆனையிறவு வரையான வீதி அமைத்தல், போரின் போது அழிவடைந்து இன்னமும் திருத்தப்படாத நிலையில் உள்ள பல வீடுகளை மீண்டும் புதுப்பிக்க வீடமைப்புத் திட்டங்களை மேற் கொள்ளல் போன்றவை முக்கியமான கருத்துக்களாக முன்மொழியப்பட் டன.

இதேவேளை மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையிலான கிராம நகர மட்டஅபிவிருத்திக் குழுக்களினால் தயாரிக்கப்பட்ட 'வெல்கம்' என்னும் தலைப்பிலான பிரதேச அபிவிருத்தி தொடர்பான அறிக்கை நாடளுமன்ற உறுப்பினர் மாவை.சேனா திராஜாவிடம் கையளிக்கப்பட்டது. (ற-ஜ-9)

---

## 46 பேருக்கு வாழ்வாதார உதவிகள்

சாவகச்சேரி, பெப்.16

வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனின் கடந்த வருட மக்கள் பிரதிநிதிகளின் அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட 46 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட் டன.

சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் நாடளுமன்ற உறுப்பினர்களானமாவை சேனாதிராசா மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்வாதார உதவிகளை மக்களுக்கு வழங்கினர்.

நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான இ.ஆர்னோல்ட், ஏ.அஸ்மின் ஆகியோரும் கலந்து கொண்டனர்

இதில் 27 பேருக்குச் சைக்கிள்களும், 10 பேருக்குத் தையல் இயந்திரங் களும், 5 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும், இருவருக்கு சிகை அலங்கரிப்பு நிலையக் கதிரைகளும், ஒருவருக்கு மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரமும், ஒருவருக்கு வாகன ரியூப் ஒட்டும் கொம்பிறேசர் இயந்திரமும் வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சிலருக்கு வீடுகளை அமைப்பதற்கு சிமெந்துக் கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-9)

---

## சாவ.லயன்ஸ் கழகத்தால் இலவச ஆங்கிலப் பயிற்சி

சாவகச்சேரி, பெப்.16

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஆங்கில பாட விருத்திக்கென க.பொ.த.சாதாரண தர வகுப்புகளில் கற்கும் ஆங்கிலபாடத்தில் அடைவு மட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்படும் 100 மாணவர்களுக்கு இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வகுப்புகளை நடத்தி தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆங்கில அறிவைமாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள விமலாஸ் கடையில் பதிவை மேற்கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிக்கு எதிராக படை திரட்டும் மகிந்த

## சு.க. அமைச்சர்களைப் பிரித்தெடுப்பதற்குத் திட்டம்

கொழும்பு, பெப். 16
தேசிய அரசில் இணைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அதிலிருந்து வெளியேறவேண்டும், கைது வேட்டைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பது உட்பட ஐந்து தீர்மானங்களை அதிரடியாக நிறைவேற்றியுள்ளனர் மகிந்தவுக்குச் சார்பான உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கியமகள் சுதந்திர முன்னணியின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கும் மகிந்த ராஜபக்சவுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகிந்தவுக்கு விசுவாசமான முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். பசில் ராஜபக்ச உட்பட பொது எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் மகிந்த அணியின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

> உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசு உடன் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளுக்கு எதிராகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதில் பங்கேற்ற அனைவரும் சு.கவின் தலைமைப் பதவியை மகிந்த ஏற்கவேண்டும். இதற்கு தற்போதைய தலைவர் உடன்படாத பட்சத்தில் புதிய தொரு அரசியல் பயணத்தை மகிந்த ஆரம்பிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இதற்கு தாம் முழு ஆதரவையும் வழங்கி மகிந்தவின் பின்னால் அணிதிரள்வார்கள் என்றும் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்துள்ளனர். குறிப்பாக, சு.கவின் பொதுச் செயலாளர் பதவி வகிக்கும் அமைச்சர் துமிந்த திசாநாயக்காவுக்கு எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சியையும் அதன் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் கடுமையாக விமர்சித்த முன்னாள் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு சு.கவின் மத்திய செயற்குழு எடுத்துள்ள முடிவுக்கு எதிராகவும் இந்தக் கூட்டத்தில் போர்க் கொடி தூக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசு உடன் நடத்தவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளுக்கு எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (த-சி)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு நேற்று ஜேர்மனி சென்றார். ஜேர்மனிக்கான இரண்டு நாள் பயணத்தின் பின்னர் ஜனாதிபதி ஒஸ்ரியா நாட்டுக்குச் சென்று அந்த நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார். (த)

# யோசித இருக்கும் பகுதி விசேட வலயமாகியது

கொழும்பு, பெப். 16
சி.எஸ்.என். தொலைக்காட்சி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள யோசித ராஜபக்ஸ உள்ளிட்ட ஐவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைப் பகுதி விசேட வலயமாக்கப்பட்டுள்ளது.

யோசித உட்பட ஐவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைப் பகுதியில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் அகற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் எச்.என்.சீ.தனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறைப் பகுதிக்கு அருகில் உள்ள சிறையில் இருந்து கையடக்கத் தொலைப்பேசி ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது. இதுவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

06 ஆம் மாத நினைவஞ்சலி



பிறப்பு
1946 . 09 . 22

இறப்பு
2015 . 08 . 23

அமரர் சரவணமுத்து கற்பகநாதன்
திதி: நவமி

அன்புடனும் பண்புடனும்
வளர்த்த அப்பாவே
மாதங்கள் ஆறு ஆகியும்
மறக்க முடியவில்லை உங்களை

இல. 60 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(சிறி மாதவன்)

(69278)
(12.17.18.20)

# திருகோணமலையில் கைக்குண்டுத் தாக்குதல்

## இரண்டு பேர் கைதாகினர்

கொழும்பு, பெப். 16
திருகோணமலை, உப்புவெளிப் பகுதியிலுள்ள வீடான்றின் மீது, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் வீட்டுக்கு சிறிதளவான சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டார். (த)

# புதிய கட்சியின் கொள்கை என்ன?

## சரத் அமுனுகம கேள்வி

கொழும்பு, பெப் 16
புதிய அரசியல் கட்சியின் கொள்கைகள் என்ன என்பது குறித்துத் தாம் கேள்வி எழுப்புவதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று புதிய அரசியல் கட்சி அமைக்கும் தரப்பினரிடம் இந்தக் கேள்வியைத் தாம் எழுப்புவதாகத் தெரிவித் துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் உதவியின்றிச் செயற்பட முடியாத தரப்பினரே, தனியாக அரசியல் கட்சி அமைக்க முயற்சிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன மற்றும் உதய கம்மன்பில போன்றவர்களே புதிய அரசியல் கட்சி அமைக்க முயற்சித்து வருவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

எவ்வாறெனினும், புதிய அரசியல் கட்சியில் இணைந்து கொள்வதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகள் குடியேற ஆஸி. சட்டத்தரணிகள் எதிர்ப்பு

கான்பரா, பெப் 16

ஆஸ்திரேலியாவின் மானுஸ் தீவில் உள்ள இலங்கை அகதிகள் பப்புவா நியுகினியில் குடியேற்றப்படுவதற்கு ஆஸ்திரேலியாவில்செயற்படும் அகதிகளுக்கான சட்டத்தரணிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்ற 900 இக்கும் அதிகமான அகதிகள், மானுஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையர்கள் ஆவர்.

இந்தநிலையில், குறித்த அகதிகளுள் 472 பேரது அகதி அந்தஸ்து உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் பப்புவா நியூகினியில் குடியேற முடியும் என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ரிம்பிங் பாடோ அறிவித்திருந்தார்.

ஏற்கனவே 61 பேர் குறித்த முகாமை விட்டு வெளியேறி இருப்பதாகவும், அவர்களில் 6 பேர் பப்புவா நியூகினியில் தொழில்பெற்றுள்ளதாகவும் அவர் கூறி இருந்தார். எனினும் அகதிகளைக் குடியேற்றுவதற்கான எந்த முறையான வேலைத்திட்டங்களும் பப்புவா நியுகினி அரசிடம் இல்லாத நிலையில், இந்த அறிவிப்பு பாதுகாப்பற்றது என்று அகதிகள் சட்டத் தரணிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

# குமார் குணரட்ணத்தின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, பெப் 16

முன்னிலை சோசலிச கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரான குமார் குணரட்ணத்தைத் தொடர்ந்தும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கேகாலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை அவர் கேகாலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஆஸ்திரேலியக் குடியுரிமை கொண்டவரான குமார் குணரட்ணம், வீசா காலம் முடிவடைந்த நிலையில் நாட்டில் தங்கியிருந்தமை மற்றும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இவரை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர்ந்தும் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)

# யோசிதவுக்கு ஆதரவு வழங்கிய நான்கு வீரர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப் 16

டயலொக் றக்பி லீக் போட்டியின்போது, வை-007 என எழுதப்பட்டிருந்த பட்டியைக் கைகளில் அணிந்திருந்த, கடற்படை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர்கள் நால்வரை இடைநிறுத்தியுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்தார்.



தியகமவில், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியின்போதே, கடற்படை விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் யோசித ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், குறித்த வீரர்கள் பட்டிகளை அணிந்திருந்தனர்.

இதற்கமையவே, குறித்த வீரர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறும் எனவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார். (து)

## வெள்ளவத்தையில் போதைவஸ்துடன் இருவர் கைது

கொழும்பு, பெப் 16

வெள்ளவத்தைப் பிரதேசத்தில் போதைப்பொருள் வைத்திருந்தனர் எனும் குற்றச்சாட்டில், பெண்ணொருவர் உட்பட இருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்களிடமிருந்து 14 கிராம் 100 மில்லி கிராமுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த பெண்ணுக்கு 34 வயதும், மற்றைய நபருக்கு 22 வயதுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, குறித்த இருவரும் வெள்ளவத்தை கடற்கரை வீதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்கே நபர்களிட மிருந்து ஹெரோயின் விற்பனை மூலம் வருமானமாகப் பெற்றுக் கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் 38 லட்சத்து 200 ரூபா பணத்தைக் கைப்பற்றியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் மேலும் தெரிவித்துள்ளது. (து)

# யானைக்குட்டி வளர்த்த தேரருக்குப் பிடியாணை

பொல்ஹென்கொடவிலுள்ள ஆலன் மத்தினியராமய விகாரையில், சட்டவிரோதமான முறையில் யானைக்குட்டியொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்காக, வண.உடுவே தம்மாலோக்க தேரரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு, சட்ட மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

அவரைக் கைது செய்வதற்கு முன்னர், அவரிடமிருந்து வாக்கு மூலமொன்றைப் பெறுமாறும், சட்டமா அதிபர் பணித்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிவான் நிஷாந்த பீரிஸுக்கு அறிவித்துள்ளனர். (து)

# மீனவர்கள் பிரச்சினை குறித்து தமிழகத்துடன் பேசமாட்டோம்

## மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப் 16

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடனோ அல்லது தமிழக அரசுடனோ எவ்வித பேச்சுக்களும் நடத்தத் தயாரில்லையெனவும் இந்திய மத்திய அரசுடனேயே பேச்சு நடத்துவோம் என்றும் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் அத்துமீறி கைது செய்யப்படுவதாக குற்றஞ் சாட்டிவரும் ஜெயலலிதா, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்குமாறும் இந்தப் பிரச்சினை குறித்து தமிழக அரசுடன் பேச்சு நடத்துமாறும் வலியுறுத்தி வருவதோடு, இது குறித்து இந்திய பிரதமர் மோடிக்குத் தொடர்ந்து கடிதமும் அனுப்பி வருகிறார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்தபோதே, மீன்பிடி அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

தமிழக மீனவர்களது அத்துமீறல்களால் வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், விசைப்படகுகளைப் பயன்படுத்துவதால் கடல் தாவரம் உள்ளிட்ட வளங்கள் அழிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த நடவடிக்கையை இல்லாதொழிக்கும் வகையிலேயே, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறும் படகுகளைக் கைப்பற்றுமாறும் மீனவர்களைக் கைது செய்யுமாறும் கடலோரக் காவற்படை மற்றும் கடற் படையினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர விளக்கியுள்ளார்.

இந்த நிலையில், இந்திய மீனவர்களை மனிதாபிமான நடவடிக்கையின் பிரகாரம் விடுதலை செய்யலாமே தவிர, அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள், வலைகள் உள்ளிட்ட பொருள்களை ஜெயலலிதாவின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து எக்காரணம் கொண்டும் மீளக் கையளிக்கப் போவதில்லையெனவும் மீன்பிடி அமைச்சர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். (து)

## வெளிநாட்டு நிதியை வைப்புச் செய்வது சிக்கலில்லை

கொழும்பு, பெப் 16

வெளிநாட்டு நிதியை இலங்கையின் வங்கிகளில் வைப்பிலிடும் போது, புதிய சட்டதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாக கூறப்படும் செய்தியை நிதியமைச்சர் ரவிகருணாநாயக்கமறுத்துள்ளார்.

குறித்த செயற்பாட்டுக்கு எதிராகப் புதிதாக வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்துஅவர் இதனைக்கூறினார்.

இந்த நிலையில், குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த மத்திய வங்கியின் நிதி நுண்ணறிவு பிரிவின் பணிப்பாளர் எச். அமரதுங்க, வெளிநாட்டு நிதியை இலங்கையின் வங்கிகளில் வைப்பிடும்போது, வழமையாக கோரப்படுகின்ற தகவல்களுக்கு மேலதிகமாக எதுவும் கோரப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (து)

## தேரர்கள் பொலிஸில் சரண்

கொழும்பு, பெப் 16

ராவணா பலய அமைப்பின் இணைப்பாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் மற்றும் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் அடங்கிய சிலர் ஹோமாகம பொலிஸில் முன்னிலையாகினர்.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டபோது நீதிமன்ற வளாகத்தில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டுக்கு அமையவே இவர்கள் நேற்று ஹோமாகம பொலிஸில் முன்னிலையாகினர்.

குறித்த தேரர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி

# கடவுச் சீட்டைக் கழிவறையில் தொலைத்தார் இலங்கை எம்.பி

## தென்கொரிய விமான நிலையத்தில் சம்பவம்

கொழும்பு, பெப். 16

தென்கொரியாவில் நடந்த கருத்தரங்கொன்றில் பங்கேற்கச்சென்றநாடாளுமன்றஉறுப்பினர் ஒருவர், அவரது கடவுச் சீட்டை கழிவறையில் தவறவிட்டதால், கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அமைதிக்கான சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தரங்கில் பங்கேற்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் சியோல் சென்றிருந்தனர்.

சியோல் விமான நிலையத்தில் இறங்கியதும், மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரோகினி விஜேரத்ன கழிவறைக்குச் சென்றபோது, தனது கடவுச்சீட்டை அங்கு தவறவிட்டிருந்தார். இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்களால் விமான நிலையத்தை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, தென்கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவி கோரப்பட்டு, அங்கிருந்து வந்த அதிகாரிகள் நடத்திய தேடுதலில் கடவுச்சீட்டு மீட்கப்பட்டது.

எனினும், சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றுகூடலின் ஆரம்ப நிகழ்வில், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களால் பங்கேற்கமுடியவில்லை.

தென்கொரியா சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவில், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனாதிபதி எதிர்பார்க்கும் இன ஒற்றுமை மேலெழுமா…?

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இளைஞர்கள், எல்லையற்ற அநீதிகளுக்கு முகம் கொடுப்பதற்கு இயலாத காரணத்தினாலேயே, அவற்றுக்கு எதிராக அவர்கள் ஆயுதம் ஏந்தினர்.

ஆகவே, அவர்கள் ஆயுதம் ஏந்திப் போரிட்டமைக்கான காரணம் முறையாகக் கண்டறியப்பட வேண்டும். அதனூடு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும். அது அவசியமானது, தவிர்க்கக் கூடாதது.

மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருப்பர் வெளிநாட்டவர் எவரும் அல்லர். இந்த நாட்டின்-இலங்கையின்-அதி உத்தம ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அவராவார்.

பொலனறுவை மாவட்டத்தின் வெலிகந்தப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்தே மேற்போந்த கருத்தை தேசத்தின் அரசு அதிபர் வெளிப்படுத்தினார்.

நாட்டின் வடக்கிலும், தெற்கிலும் வாழும் அனைவருக்கும் நீதியர்ண்மை கொண்ட சமூகமே தேவைப்படுகிறது. ஒற்றுமையும் சகவாழ்வுமே இலங்கைக்கு இப்போது இன்றியமையாதவை என்றும், எந்தவித பிசுறுமின்றி அப்பட்டமாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி.

இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் தாம் நாடாளுமன்றுக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல், நாட்டில் இனப் பிரச்சினை நீடிக்கிறது-தொடர்கிறது என்றும் அவர் புட்டுக்காட்டி உள்ளார்.

ஈழத் தமிழர்களின் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கென, தெற்கின் பேரினவாதத் தலைமைகளுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள், அவை ஊடான ஒப்பந்தங்கள், (பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பவை, அவ்வப்போதைய அரசுகளால் கடாசி வீசப்பட்டதும், இங்கேபதியப்பட வேண்டியவை) கிழித்து எறியப்பட்டதும் காலால் மிதிக்கப் பட்டதும் இந்த நாட்டின் மிகப்பெரும் சாபக் கேடுகள் எனலாம்.

பல சந்தர்ப்பங்களில், சிங்களத்தின் அவ்வப் போதைய ஆட்சித்தலைவர்களால்தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் சுட்டுப் பொசுக் கப்பட்டுள்ளன.

ஏன் தமிழர்களின் நிலை, மரம் என்ற சிங்கள இனத்தில் படர்ந்துள்ள கொடியை ஒத்தது என்று சிங்களத்தலைவர்களால் விமர்சிக்கப்பட்டதையும் மறைத்துவிட இயலாது.

நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது, வேறு எந்தப் பிரச்சினையும் இல்லவே இல்லை என்று உலக நாடுகளை நம்ப வைத்த நயவஞ்சகமும் ஒப்பேறியமை மறக்கத்தக்கது அன்று.

சிங்கள அரசுகளின் பேரினவாதம் மலையளவு உயர்ந்த பின்னரே, தமிழ் மக்களின் பேரழிவுகளுக்குப் பின்னரே, எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர் என்பதும் பொய்யல்ல.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தக் காரணம், அரச பயங்கரவாதத்தின் விளைவே ஆகும். அதனை ஜனாதிபதி தொட்டுக் காட்டியிருப்பது சிலாகிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வடக்கிலும் தெற்கிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் நீதியான ஆட்சியும், சகவாழ்வும், ஒற்றுமையுமே இப்போதைய உடனடித் தேவை.

அதனைப் பகிரங்கமாக எடுத்து உரைத்துள்ளார் நாட்டின் அதிஉத்தம ஜனாதிபதி. ஆனால், அவர் குறிப்பிடும் சகவாழ்வும், இனங்கள் மத்தியிலான ஒற்றுமையும் எப்போது சாத்தியமாகும்? எப்போது நாட்டுக்கு நலன் கிடைக்கும் என்று எதிர் பார்ப்பது…???



# கச்சதீவு உற்சவத்திலும் மீனவர் பிரச்சினை

**லக்ஸ்மன்**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையுமாக இரண்டு தினங்களுக்கு இடம்பெற உள்ளது. புனித அந்தோனியாரின் அருளாசியைப் பெறவழமை போன்று இலங்கை-இந்திய நாடுகளைச் சேர்ந்த மக்கள் கணிசமான அளவில் அங்கு கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தமுறை நாங்கள் உற்சவத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என தமிழக மீனவர்கள் கூறுகின்றனர். அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தீர்வு காணத்தவறிய மீனவர் பிரச்சினைக்கு புனித அந்தோனியாராவது அருள்கூர்ந்து பிரச்சினை தீர வழியமைப்பாரா என்ற எதிர்பார்ப்பு தமிழக மீனவர் களிடம் உள்ளதுபோலும், ஒரு காலத்தில் எந்த ஒரு தலையீடுமின்றி இரு நாட்டு மீனவர்களும் இந்தப் பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இருநாட்டு மீனவர்களும் கச்சதீவில் தங்கி நின்று தொழில் செய்த காலகட்டத்தை இலேசில் மறந்துவிட இயலாது. அப்போதெல்லாம் உருவாகாத மீனவர் பிரச்சினை இப்போது தலைதூக்கியுள்ளது. இதற்குக் காரணம், தமிழக அரசியல்வாதிகளே. முழுக்க முழுக்க மீன்பிடித்தொழிலில்தமது பெரும் முதலீடுகளை விட்டு எல்லை கடந்து அதில் அதிக இலாபத்தைக் கண்டவர்கள் என்பதால் எல்லை மீறல் தடுக்கமுடியாத ஒன்றாகி விட்டது. அதன் தாக்கம் இன்று அந்தோனியார் ஆலய உற்சவத்தையே புறக்கணிப்போம் என்று கூறும் அளவுக்குச் சென்றுள்ளது. "மீனவர் பிரச்சினை இறைவன் செய்த குற்றமடி" என்றாகி விட்டது.

### நெடுந்தீவின் ஆளுகைக்கு உட்பட்டது

கச்சதீவு கி.பி. 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்து நெடுந்தீவின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாகவே இருந்துள்ளது. இன்றைக்குக் கச்சதீவை மீட்டெடுப்போம். அது எமது பகுதி என்று கூச்சலிடும் தமிழக அரசியல்வாதிகளுக்கு இந்தத் தீவுக்குக் கச்சதீவு எனப்பெயர்வரக் காரணம் என்ன என்பதுகூடத் தெரிந்திருக்க முடியாது. நெடுந்தீவின் வரலாற்றோடு இணைந்த இந்த சிறிய திடலுக்குக் கச்சதீவு எனப் பெயர் வரக் காரணமாயிருந்ததே நெடுந்தீவுதான். இந்தஉண்மையை வெற்றுக் கோஷமிடும் தமிழக அரசியல்வாதிகள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். கச்சதீவு ஆலயத்தின் மூப்பர்களாக நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே இருந்துள்ளனர். உற்சவ காலங்களில் ஆலயப் புனரமைப்பு, பாதை அமைத்தல், துப்புரவுப் பணிகள் என்பன இவர்களாலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தது. யாழ்.செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம் என்பவை மேற்கொள்ளும் சேவை கள்கூட மூப்பருடன் கலந்தாலோசித்தே முடிவு செய்யப்படும்.

> இலங்கை-இந்திய நாடுகளைச் சேர்ந்த மக்கள் கணிசமான அளவில் அங்கு கூடுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்த முறை நாங்கள் உற்சவத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை என தமிழக மீனவர்கள் கூறுகின்றனர்.

### மூப்பனாருக்கு முக்கிய பொறுப்பு

ஆலயஉற்சவம்ஆரம்பிப்பதற்கு ஒரு மாதம் முன்னாதாகவே மூப்பர் தமிழகம் சென்று அங்குள்ள குருமாரையும் உற்சவத்தில் கலந்து கொண்டு திருப்பலிப் பூசைகளுக்கு உதவ அழைப்பது வழமையாகும். எது எப்படி இருப்பினும் மூப்பர் மட்டுமே அங்கு முதன்மையாக இருந்து வந்துள்ளார். அந்த நாள்களில் ஆலயப் பணிகளுக்காக பாய்த் தோணிகளில் இருபது நாள்களுக்கு முன்னதாகவே மூப்பர் குழுவினர் செல்வதுண்டு. உற்சவம் பத்துத் தினங்கள் வரை இடம்பெற்று வந்ததுண்டு. அந்தக் காலங்களில் இரு நாட்டுப் பொருள்களையும் கொள்வனவு செய்யக்கூடிய ஆண்டுக்கொரு தடவை இடம்பெறும் பொதுச் சந்தை போலவும் கச்சதீவு அமையும். புனித அந்தோனியாரின் அருளாசியுடன் இரு நாட்டு மக்களும் கூடித் தமது உறவுகளைப் பலப்படுத்தும் பிரதேசமாகவும்; இறையாசி பெறும் புனித பூமியாகவும், சுதந்திரமாக மக்கள் வந்து திரும்பக்கூடிய தீவாகவும் இது அமைய வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். கச்சதீவில் கிடைக்கும் வருமானத்தில் செலவுகள் போக மீதிப்பணம் அந்தந்த வேளைகளின் ஆயர்களிடம் கையளிக்கப் பட்டது. இந்த ஆலயம் தொடர்ந்தும் மூப்பரின் நிர்வாகத்திலேயே இருக்கும் என்பதற்கான ஆவணங்கள் சில உள்ளதாகவும் முன்னைய அரச அதிபர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். கடந்த காலங்களில் பொலிஸாரோ, படையினரோ உற்சவத்தையொட்டித் தீவின் உட்பகுதிக்குள் இறங்கியது கிடையாது.

இப்போது நிலைமை முற்றாக மாறியுள்ளது. மூப்பரின் கட்டுப்பாடு இல்லை. ஆலயத் துப்புரவுப் பணிகள் உட்பட அனைத்து வேலைகளும் படையினரின் வசமே உள்ளன. கோடிஅற்புதரைத் தரிசிக்கவரும் பக்தர் களுக்கு கச்ச தீவு அரசியல் பிரச்சினையாக இருக்கக்கூடாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி பிரஷான்

# சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது நியாயமா?

விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களாக இருந்த கருணா அம்மான், கே.பி. போன்றவர்களைக் கைது செய்யாமல் – அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்காமல், வெறுமனே சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட எங்களுக்கு ஏன் புனர்வாழ்வு அளிக்க அரசு முன்வரவேண்டும்? 15 வருட சிறைச்சாலை வாழ்க்கையால் எனது இளமைக்காலம், இலட்சியம், குடும்ப உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய அன்பு, பாசம் போன்றவற்றை இழந்து முன்னாள் போராளி என்ற, பொய்யாகச் சூட்டப்பட்ட் பட்டத்துடன் இன்று நடுத்தெருவில் நிற்கின்றேன்.

– இவ்வாறு கடந்த வருடம் நவம்பர் மாதம் 13ஆம் திகதி தமிழ் அரசியல் கைதியாக இருந்து பிணையில் விடுதலை செயப்பட்டிருந்த மகேந்திரன் புவிதரன் தெரிவித்திருந்தார்.

**தடுப்புக் காவலில் சித்திரவதைகள்**

கடந்த புதன்கிழமை வழக்குத் தவணைக்காகக் கொழும்பு நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த இவர், புலி என்ற சந்தேகத்தில் தான் கைது செயப்பட்டுத் தடுப்புக்காவலில் அனுபவித்த சித்திரவதைகளையும் பல்வேறு சிறைச்சாலைகளில் நடந்த கசப்பான அனுபவங்களையும் மனம் விட்டுப் பகிர்ந்துகொண்டார்.

அவருடனான முழுமையான கலந்துரையாடலை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

நான் 13 வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுது புலி என்ற சந் தேகத்தின்பெயரில் 1996ஆம் ஆண்டு மண்டூரில் வைத்து என்னைப் பொலிஸார் கைதுசெய்தனர். 2000ஆம் ஆண்டு நிரபராதி என்று அம்பாறை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டேன். பின்னர் 2001ஆம் ஆண்டு கைதுசெயப்பட்டு விடுதலையாகி மீண்டும் 2003ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு 2013ஆம் ஆண்டு பிணையில் விடுதலை செய்தனர்.

2004ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணாவின் சகாக்களான சச்சி மாஸ்டர், சாந்தகுமார் ஆகிய இருவரையும் நான் கொலை செய்ததாக என்மீது பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தி வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

நல்லாட்சி என்று சொல்லப்படும் இன்றைய ஆட்சியில் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் வீதியில் சென்று கொண்டிருந்த போது மட்டு.-அம்பாறை பிரதேசத்துக்குப் புலிப்பொறுப்பாளராகச் செயற்பட்டவர் என்று தெரிவித்து என்னைப் பொலிஸாரும் குற்றப் புலனாவுப் பிரிவினரும் திரும்பவும் கைது செய்திருந்தனர்.



**சிறைகளில் அடைந்து சித்திரவதை**

காலி, மகஸின், அநுராதபுரம், திருகோணமலை, வெலிக்கடை, பொலனறுவை போன்ற சிறைச்சாலைகளில் மாறி மாறி அடைத்துத் துன்பப்படுத்தியிருந்தனர்.

நிர்வாணப்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டனர். பென்சில் கூரை காது, மூக்கின் ஓட்டைகளில் உட்செலுத்துவார்கள். தலையில் புத்தகக்கட்டைவைத்து அடிப் பார்கள். பெற்றோல் அடைக்கப்பட்ட பொலித்தீன் பையை முகத்தில் கட்டி விடுவார்கள். கொடூரமான சித்திரவதைகளை பொலி ஸார் மேற்கொள்ளும்போது உயிர் போகிற அளவுக்கு நரக வேதனையாக இருக்கும்.

**உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் கைதிகள்**

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கடந்த வருடம் ஈடுபட்டோம். இதன்போது 38 அரசியல் கைதிகளைப் பிணையில் விடுதலை செய்திருந்தனர்.

பிணையில் விடுதலை செயப்பட்டவர்களில் இரண்டு பேர் குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. 21 பேர் புனர்வாழ்வை ஏற்றுக்கொண்டுள்ளனர். கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் என்னுடன் சேர்த்து 14 பேருக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நாங்கள் புனர்வாழ்வை மறுத்துவிட்டோம். புனர்வாழ்வு பெறுவதால் நாம் குற்றங்களை இழைத்ததாக ஒப்புக் கொண்டதாகிவிடும். ஆனால், நாங்கள் எந்தவித பயங்கரவாதச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டதில்லை. இயக்கத்திலும் சேரவில்லை. குற்றங்கள் இழைக்கவும் இல்லை.

**கருணா, கே.பிக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டதா?**

புலிகளின் முக்கிய தளபதிகளாகத் திகழ்ந்த கருணா, கே.பி., தயா மாஸ்டர் போன்றவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதா? அவர்கள் அனைவரும் அரசின் செல்வாக்குடன் சுதந்திரமாகவெளியில்உலாவருகின்றனர். சந்தேகத்தின்பேரில் கைதுசெய்த எமக்கு மட்டும் ஏன் புனர்வாழ்வு? விடுதலை செயப்படாமல் இன்னும் 217 தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் 20 வருடங்களுக்கு மேலாகவும் சிறைகளில் உள்ளனர். 60, 70 வயதுகளைக் கடந்த நிலையிலும் வயது முதிர்ந்த பருவத்தில் எந்தவித விசாரணையுமின்றி சிறைகளில் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவிக்கின்றனர். சிலர் நோயாளிகளாகவும் மாறியுள்ளனர் என அவர் தெரிவித்திருந்தார்.

> நல்லாட்சி என்று சொல்லப்படும் இன் றைய ஆட்சியில், 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் வீதியில்சென்று கொண்டிருந்த போது மட்டு. -அம்பாறை பிரதேசத்துக்குப் புலிப் பொறுப்பாளராகச் செயற்பட்டவர் என்று தெரிவித்து என்னைப்பொலிஸாரும் குற்றப் புலனாவுப்பிரிவினரும் திரும்பவும் கைதுசெய்திருந்தனர்.

## உணவுகள் வீணாக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை

முன்பெல்லாம் மண்டபங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட உணவைத் தனக்குத் தானே பரிமாறிக்கொள்ளும் முறை இப்போது வீடுகளிலும் நடைமுறைக்கு வந்துள்ளது.

மண்டபங்களில் விழாக்கள் நடை பெறும்போது அவற்றின் உச்சக் கட்டமாக விருந்துபசாரம் இடம் பெறும். விருந்தினர்கள் தமக்கு வேண்டிய உணவுகளை எடுத்துப் பரிமாறிக் கொள்ளும் பொருட்டு தனக்குத்தானே பரிமாறிக் கொள்ளும் முறை நடைமுறையில் உள்ளது.

அண்மையில் இங்குள்ள மிகப்பெரிய மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற திருமணநிகழ்வுக்காகச் சென்றிருந்தேன். திருமண நிகழ்வு நிறைவுபெற்றதும் உணவு பரிமாறும் மண்டபத்தை நோக்கி விருந்தினர்கள் முண்டியடித்தவாறு சென்றனர். அங்கே வரிசையில் நின்று செல்லவேண்டிய நிலை காணப்பட்டது. நானும் வரிசையில் நின்று உள்ளே சென்றேன் உணவுகள் பெரிய பெரிய பாத்திரங்களில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன விருந்தினர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு சோறு, கறி வகைகளைத் தமது பாத்திரத்தில் நிரப்பிக் கொண்டனர். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட அப்பளங்களையும், வடைகளையும் எடுத்ததைக் கண்டதும் எனக்கும் அவ்வாறே செய்யவேண்டுமென மனம் உந்தியது. ஆனால் மனதை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டேன். சாப்பிடும் இடத்தில் பார்த்த போது பலரது பாத்திரங்களிலும் அளவுக்கு அதிகமான வகையில் உணவுகள் இருப்பதைக் கண்டேன். பின்னர் மீதி உணவுகளைப் போடும் இடத்தில் சென்று பார்த்த போது நெஞ்சு ஒருகணம் திடுக்குற்றது. பெருமளவு உணவுப் பொருள்கள் வீணாகக் கொட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன. இவற்றைக் கொட்டியவர்கள் உணவுகளை அளவோடு எடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இன்னும் பலர் உணவை உண்ணக் கூடியதாகவும் இருந்திருக்கும்.

தற்போது மண்டபங்களைப் பின்பற்றி வீடுகளிலும் தனக்குத்தானே பரிமாறிக் கொள்கின்ற முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இங்கும் மண்டபத்தில் நடந்தது தான் நடக்கின்றது. நான் வவுனியாவில் வேலை செய்த போது முஸ்லிம் நண்பர் ஒருவரின் வீட்டில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கு உணவுபரிமாறப்படும் இடத்தில் சற்று வயதான ஒருவர் காணப்பட்டார். அவர் அங்கு வந்தவர்களின் கோப்பைகளில் உணவைப் பகிர்ந்து போட்டுக் கொண்டிருந்தார். எல்லாக் கோப்பைகளிலும் சகல உணவு வகைகளும் தேவையான அளவில் பறிமாறப்பட்டன. இதனால் உணவுகள் வீணாக வீசப்படவில்லை.

எம்மவர்களும் இந்த முறையைக் கடைப்பிடிப்பதன் மூலமாக விரயமாக்கப்படும் உணவுகளைக் கட்டுப்படுத்த மடியும். பொறுப்பானவர்களை இதில் ஈடுபடுத்தலாம். நாம் எமது வருமானத்தில் பெரும் பகுதியை உணவுக்கே செலவிடுகின்றோம். தற்போதுள்ள நிலையில் உணவுப் பொருள்களின் விலைகள் பன் மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றன. உலகின் பல நாடுகளிலும் உணவின்றிப் பலர் பட்டினியால் வாடுவதாகவும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

பா.திருநாவுக்கரசு, அளவெட்டி

## மாறுபட்ட விலையில் விற்பனையாகும் பொருள்கள்

விலைக் கட்டுப்பாடு என்பது சகல பொருள்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இதை நடை முறைப் படுத்துவதற்கு எவரும் முன்வருவதில்லை. குறிப்பாக உணவகங்களில் பரிமாறப்படுகின்ற உணவுப் பொருள்கள் தொடர்பாக எந்த அதிகாரியும் அக்கறை காட்டிச் செயற்படுவதாகத் தெரியவில்லை. தற்போது யாழ்.நகரிலுள்ள உணவுக் கடைகளில் மாறுபட்ட விலைகளில் உணவுகள் பரிமாறப்படுகின்றன. வடைகள் மக்களால் பெரிதும் விரும்பி உண்ணப்படும் ஒன்றாகும். ஆனால் வெவ்வேறு கடைகளில் ஒரே விலைக்குப் பரிமாறப்படுகின்ற வடைகள் ஒரே அளவில் இருப்பதில்லை. கடைக்காரர் தமது வசதிக்கு ஏற்றவாறு வடையின் அளவை நிர்ணயம் செய்து விடுகின்றார். இதைப்போன்று தான் ஏனைய உணவுப் பொருள்களும் காணப்படுகின்றன. சோற்றுப் பார்சல்கூட வெவ்வேறு விலைகளில் விற்கப்படுகின்றன. இந்தியாவில் உணவுப் பொருள்களின் நிறையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் எமது நாட்டில் எல்லாமே தலைகீழாகத்தான் காணப்படுகின்றன.

இறைச்சி வகைகள், முட்டை என்பனகூட மாறுபட்ட விலைகளில் விற் கப்படுகின்றன. இதனால் பாவனையாளர்கள் குழம்பிப் போய்க் காணப்படுகின்றனர்.

மரக்கறி வகைகள்கூட இடத்துக்கிடம் மாறுபட்ட விலைகளில் விற்கப்படுகின்றன. சுன்னாகம் சந்தையில் ஒரு விலை, மருதனார்மடம் சந்தையில் வேறொரு விலை, மல்லாகத்தில் இன்னொரு விலையென மரக்கறி வகைகள் விற்பனையாகின்றன.

இத்தகையதொரு நிலை உடனடியாக மாற்றப்படாது விட்டால் எதிர் காலத்தில் பிரச்சினைகளே உருவாகிவிடும்.

க.சிவரூபன், மல்லாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மேக் இன் இந்தியா மேடையில் தீ விபத்து

புதுடில்லி, பெப்.16
மும்பையில் மேக் இன் இந்தியா வாரத்தையொட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்ற அரங்கில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது.
பிரதமர் மோடியினால் கடந்த, செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மேக் இன் இந்தியா திட்டத்தை ஊக்கப்படுத்தும் விதமாக நேற்று முன் தினம் மும்பை வொர்லி பகுதியில் கண்காட்சி நிகழ்ச்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
இதனை பிரதமர் மோடி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இதில் நடிகர் அமிதாப்பச்சன், மாநில முதல்வர் பட்னாவிஷ் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்
இந்த நிலையில், கண்காட்சியின் ஒரு நிகழ்வாக கலை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே திடீரென அரங்கம் தீப் பிடித்து எரிந்தது. இந்தத் தீ விபத்தில் அரங்கம் முழுவதும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.
மேலும் தீ விபத்துக்கான காரணம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி)

# தீவிரவாதத்தை ஒன்றிணைய

## ஒபாமாவிடம் தொலைபேசியில் கோரிக்கை விடுத்தார் புடின்

வொஷிங்ரன், பெப்.16
தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் இணைந்து செயல்படுவோம் என்று ஒபாமாவைத் தொலைபேசியில் தொடர்புக்கொண்டு புடின் கேட்டுக் கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கும் மத்தியில் பல ஆண்டுகள் காலமாகவே பனிப்போர் நிலவி வருகிறது.
ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக நேட்டோ படையுடன் இணைந்து அமெரிக்கா தாக்குதல் நடத்தி வந்தது. இதையடுத்து ரஷ்யாவும் இந்த தாக்குதலில் இறங்கியது.
இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரஷ்ய ஜனாதிபதி புடின், ஐ.எஸ். உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு எதிரான தாக்குதலில் இரு நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகங்களுக்கும் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.
தீவிரவாதத்துக்கு எதிராக இரண்டு நிலைகள் தேவையில்லை எனவும், ஒருங்கிணைந்த தீவிரவாதத் தடுப்பு அமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் புடின் கோரிக்கை விடுத்ததாக ரஷ்ய அரசின் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.
மேலும் இருநாட்டு தலைவர்களும் சிரியாவில் மேற்கொள்ளவேண்டிய மனிதாபிமான அணுகல்களின் அவசியம் குறித்தும் விவாதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேபோல் சிரியாவில் அரசுக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சியாளர்கள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்துவதை நிறுத் கோரியுள்ளதாகவும்



## ஒரு லட்சத்து 50 ஆயிரம் பென்குயின்கள் சாவு

நியூயோர்க், பெப்.16
அந்தாட்டிக்கா கடற்பரப்பில் கடந்த ஆறு வருடங்களுக்குப் பின்னர் பெரிய பனிப்பாறை உருகியதில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பென்குயின்கள் உயிரிழந்துள்ளதாக கேம்பிறிஜ் பல்கலைக்கழக ஆட்டிக் விஞ்ஞான சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆயிரத்து 120 சதுர மைல் பரப்பளவுக்கு அங்கு பனிப்பாளங்கள் காணப்பட்டன. அதன் அளவு குறைந்ததால் பென்குயின்களுக்கான வதிவிடத்திற்கும்,அவற்றின் உணவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.
2010 ஆம் ஆண்டளவில் அங்கு அதிகளவிலான பென்குயின்கள் காணப்பட்டன. பென்குயின்களின் எண்ணிக்கை ஒருலட் சத்து 60 ஆயிரமாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது அது 10 ஆயிரமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அவற்றின் இனப்பெருக்கத்துக்குப் போதுமான பனிப்பாளங்கள் இல்லாமையால் இன அழிவு சாத்தியமாகியுள்ளது. இந்த எண்ணிக்கை வீழ்ச்சி, உயிர் பல்வகைமைக்குப் பெரும் இழப்பு என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (த-ரி4)





மெக்ஸிக்கோவுக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் பிரான்ஸிஸ் நேற்று முன் தினம் மெக்ஸிக்கோ நகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்குச் சென்றார். அங்கு குழந்தைகளுடன் உரையாடிய பாப்பரசர், அவர்களை ஆசீர்வதித்ததோடு, குழந்தைகளுக்கு மருத்துவ சேவைகளை வழங்கும் அந்த மருத்துவமனையின் பணியாளர்களுக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்தார். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரவ அமெ.

பென்ரகன், பெப் 16
சிரியா மற்றும் ஈரா
கொண்டுள்ள டாவ்
களின் இலக்குக
வைத்து, அமெரிக்
யிலான கூட்டணி
வான்வழித் தாக்குத
கொண்டுள்ளதாக
தெரிவித்துள்ளது.
பென்டகன் வெ
அறிக்கையிலேயே
யம் குறிப்பிடப்பட்
அந்த அறிக்கையி
க்கா தலைமையி
ணியினரின் வி

## சவூதியி 20 நாடு

றியாத், பெப்.16
சவூதியின் வடக்கே
பெற்றதாகச் சவுதி
கலந்து கொள்ளும்
நவீன இராணுவ உ
பயிற்சியில், சவூதி
மொராக்கோ, பாகிஸ்
மொரிஷியஸ் ஆகி

# த ஒழிக்க வேண்டும்



ுத்தும்படி ஒபாமா புடினிடன் ும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த உரையாடலின் போது உக்ரைன் விவகாரம் குறித்தும் பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. (கு)



# வாதிகளின் இலக்குகள் மீது ோ. கூட்டணி வான் தாக்குதல்

் 16
ஈராக்கில் நிலை
டாஷ் தீவிரவாதி
ுகளைக் குறி
ிக்கா தலைமை
ணியினர் 27
ுதல்களை மேற்
ாக பென்டகன்
ு.
வளியிட்டுள்ள
ேயே இந்த விட
ட்டுள்ளது.
கயில், அமெரி
யிலான கூட்ட
விமானங்கள்

ஈராக்கில் 25 வான்வழித் தாக்குதல்களையும், சிரியாவில் இரு வான்வழித் தாக்குதல்களையும் முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கின் ஒன்பது நகரங்களில் இந்த வான்வழித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, தலைநகர் பக்தாத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ரமாடி நகருக்கு அருகில் 6 வான்வழித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து டாஷ் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த ரமாடி நகரானது, கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தத்தில் ஈராக்கிய அரச படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், ஈராக்கின் மோசூல் நகரில் உள்ள டாஷ் தீவிரவாதிகளின் இலக்குகளைக் குறிவைத்து, 12 வான்வழித் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

# யில் மாபெரும் இராணுவப் பயிற்சி

## டுகள் பங்கேற்பு

கே ஹஃப்ர் அல் பாதின் நகரில் மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான இராணுவப் பயிற்சி ஒன்று நடை
ுதி செய்திகள் தெரிவிக்கின்றன.
ும் நாடுகளின் எண்ணிக்கை அடிப்படையிலும், பயன்படுத்தப்பட்ட பல்வேறு ஆயுதங்கள் மற்றும் அதி
உபகரணங்கள் அடிப்படையிலும் சவூதி வரலாற்றில் மிகப் பெரியதாக கருதப்படும் மேற்படி இராணுவப்
ுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜோர்தான், பஹ்ரைன், செனகல், சூடான், குவைத், மாலைதீவு,
கிஸ்தான், சாத், துனிசியா, கொமொரோஸ், ஜிபூட்டி, ஓமன், கத்தார், மலேஷியா, எகிப்து, மூரித்தானியா,
ஆகிய நாடுகள் பங்கேற்றதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (கு)



# தீவிரவாதிகளைச் சுற்றிவளைத்து பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல்

## 12 தீவிரவாதிகள் உயிருடன் சிக்கினர்

இஸ்லாமாபாத், பெப்.16
பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள சிபி மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டு மோதலில், 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதோடு, 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில், சிபி மாவட்டம், சங்கான் பகுதியில் பலுசிஸ்தான் விடுதலைப் படையினர் என்ற பெயரில் சட்டவிரோதமாக இயங்கி வருகிற தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக இராணுவத்தினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் குறித்த பகுதிக்கு விரைந்து அவ்விடத்தை சுற்றிவளைத்த இராணுவத்தினர், அங்கு பதுங்கி இருந்த தீவிரவாதிகளைச் சரணடையுமாறு கூறினர்.

ஆனால் தீவிரவாதிகள் இராணுவத்தினர் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள ஆரம்பித்ததை அடுத்து, இராணுவத்தினரும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். நீண்ட நேரமாகத் தொடர்ந்த பரஸ்பர துப்பாக்கிச் சூட்டு மோதலை அடுத்து 10 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்தோடு, 12 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதோடு, 3 பதுங்கு மிடங்கள் நிர்மூலமாக்கப்பட்டன.

இது தொடர்பில் பலுசிஸ்தான் மாகாண அரசு செய்தித் தொடர்பாளர் அன்வர் அல் ஹக் காக்கர் கூறுகையில், சிபியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதல் நடவடிக்கையில், பலுசிஸ்தான் விடுதலை இராணுவ அமைப்பின் தளபதி அஸ்லாம் ஆச்சோ கொல்லப்பட்டார் என்று குறிப்பிட்டார்.

இந்தச் சுற்றிவளைப்பு மோதலை அடுத்து, தீவிரவாதிகள் வசமிருந்து வெடி குண்டுகள், ரொக்கெட்டுகள் எனப் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் குறிப்பிட்டனர். மேலும், கைது செய்யப்பட்ட 12 தீவிரவாதிகளையும் இரகசிய இடமொன்றில் தடுத்து வைத்து இராணுவத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலுசிஸ்தான் விடுதலை படையினர் என்ற பெயரில் இயங்கிய இந்த அமைப்பு, பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது பல்வேறு தாக்குதல்களை நடத்தியதுடன், கியாஸ் குழாய்களையும் தகர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# தொலைக்காட்சியில் முதல்முறை தோன்றுகிறார் பிரிட்டன் இளவரசி

## அனுமதி வழங்கினார் மகாராணி

லண்டன், பெப்.16
பிரிட்டன் மகாராணியான இரண்டாம் எலிசபெத் பற்றிய ஆவணப்படம் ஒன்றில் பங்கேற்க இளவரசியான கேட் மிடில்டன் முதன் முதலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியில் உரையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் மகாராணியான இரண்டாம் எலிசபெத் எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி தனது 90 ஆவது பிறந்த நாளை கோலாகலமாகக் கொண்டாட உள்ளார்.

இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பிரிட்டன் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று மகாராணியின் வாழ்க்கை வரலாறு, முக்கிய பணிகள் குறித்து விவரிக்கும் வகையில் ஆவணப் படம் ஒன்றை வெளியிடவுள்ளது. இதில் மகாராணியும் கலந்து கொள்வார் என எதிர்ப்பார்க்கப்படும் நிலையில், தற்போது கூடுதலான தகவல்களும் வெளியாகியுள்ளன.

அதாவது, மகாராணியைப் பற்றி உரையாட இளவரசி கேட் மிடில்டனும் இந்த ஆவணப் படத்தில் இடம்பெற உள்ளதாகவும், இதற்கு மகாராணி ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது.



கடந்த 2010 ஆம் ஆண்டு இளவரசர் வில்லியத்துடன் நிச்சயதார்த்தம் நடைபெற்ற போதுதான் கடைசியாக தொலைக்காட்சியில் கேட்மிடில்டன் தோன்றினார். இதற்குப் பிறகு, அதிகாரபூர்வமாக எந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்துக் கொள்ளவில்லை.


அரச குடும்பத்தின் விதிமுறைகளை கவனத்துடன் பின்பற்றி இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே நற்பெயரை கேட் மிடில்டன் பெற்றுள்ளதால், தன்னைப் பற்றிய ஆவணப்படத்தில் பங்கேற்க மகாராணி அனுமதி வழங்கியுள்ளதாகவும் பிரிட்டனில் வெளியாகும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சரீரத்துள் மறைந்துள்ள சூட்சுமம்!

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

ஒரு தாயின் கருவறையில் உருவாகும் ஓர் உயிர், அதற்கான உடலமைப்பைப் பெற்று, ஜனனம் பெற்றபின், அது நாளடைவில் வளர்ச்சியடைந்து செல்கிறது. சிறு பிள்ளைப் பருவ நிலையில் இருந்து, வாலிபப் பருவம் ஊடாக அந்த உடல் முதுமை என்னும் நிலையை அடையும் வரைக்கும், அந்த உடலுக்குள் பத்து விதமான வாயுக்கள் தங்கியிருந்து உடலை இயக்குவதற்கான செயற்பாட்டை நிகழ்த்துகின்றன. இந்தப் பத்து வாயுக்களும் தமக்கான பங்களிப்பை வழங்குவதில் இருந்து மனித உடலால் சமநிலை தளம்பல் இன்றி வாழ்வியக்கத்தை நோக்கி நகரமுடிகின்றது. இந்தப் பத்து வாயுக்களில், ஒரு வாயுவின் செயற்பாடு சிறிது தாமதிக்குமானால் அல்லது செயலிழக்குமானால் அந்த உடலுக்குப் பாதிப்பு அதாவது நோய் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்து விடுகின்றது.



### மனித உடலுக்குள் 10 வாயுக்கள்

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் எனும் பெயர் கொண்ட பத்து வாயுக்கள் மனித உடலுக்குள் இருப்பதாக ஆதிகால சோதிட நூல்கள் கூறுகின்றன. மனித உடலுக்குள் இவை ஒவ்வொன்றும் தொழிற்படும் விதம் வித்தியாசமானது. ஒன்றுக்கொன்று உதவி ஒத்தாசையாக இருப்பதோடு, பிராணன் என்னும் வாயு உடலை விட்டு நீங்கும் போது, தனஞ்செயன் என்னும் வாயு தவிர, ஏனைய எட்டு வாயுக்களான அபானன், வியானன், உதானன், சமா னன், நாகன், கூர்மன், கிருகரன், தேவ தத்தன் ஆகியவையும்தங்கள் இயக்கத்தை நிறுத்திவிடுகின்றன. இந்தப் பத்து வாயுக்களில் தேவதத்தன் என்னும் பெயர் கொண்ட வாயுவின் தொழிற்பாடானது, மனிதன் தன் சுய நினைவுடன் விழித்திருக்கும்போது, ஓடுதல், நடத்தல், தொழில் செய்வதற்கான உடலுறுப்புக்களை இயக்குதல் மற்றும் மனதில் சின்த்தைத் தூண்டி கைகலப்பை செய்வித்தல் போன்றவையாகும்.

அடுத்து முகத்தில் நவரச உணர்வுகளின் வெளிப்படுத்தலைச் செய்விக்கும் வாயு கூர்மன் என்னும் வாயு ஆகும். இது பெரும்பாலும் கண்களிலே நின்று இமைகளை இயக்கச்செய்யும்தொழிற்பாட்டோடு சிரித்தல், புன்முறுவல் பூத்தல், முகத்தை அழகுறச் செய்தல் மட்டுமன்றி மயிர்க் கூச்சத்தையும் உண்டாக்குகிறது.

முகத்தின் புருவ மத்தியில் நின்று அதை இறுகப் பற்றியபடி நெற்றியின் மேற்தோல்களைச் சுருங்கச் செய்வதோடு, மனதுள் துயரானது மிகுதாய் அழுத்தும்போது அதன் எதிர்விளைவாய் அழுகையை உண்டாக்கும் தொழிற்பாட்டைச் செய்வது கிருகரன் என்னும் வாயு ஆகும்.

### மனித உடலின் வளர்ச்சி

அடுத்ததாக, மனித உடலின் வளர்ச்சியானது மிகமுக்கியமானதொன்று. மனிதனானவன் உண்ணும் உணவின் ஒரு பகுதி ஜீரணமாகி கழிவாக மாறும் அதே சமயம், மறுபுறத்தில் மீதி உணவு உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தாக மாற்றி, உடலின் நரம்புகளில் கலக்கச் செய்து உடலை வளர்க்கச் செய்யும் பணியை உதானன் என்னும் பெயர் கொண்ட வாயு ஆற்றுகிறது. இதேபோல், இரு பக்கத் தோள்களிலும் நின்றபடி தொடுஉணர்வுகளை உடனுக்குடன் மனதுக்கு அறிவிக்கும் தொழிலை வியானன் என்னும் வாயு செய்கிறது.

இதுதவிர, மனிதனின் கழிவகற்றும் பகுதியான குதத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் பற்றி நின்றபடி கழிவுகளை வெளியேற்றுவதற்கு உதவி செய்யும் வாயு அபானன் எனப்படுவதாகும்.

நாகன் என்னும் வாயுவானது மனித மனத்தில் தோன்றும் பலவித உணர்வுகளின் பிரதிபலிப்போடு சம்பந்தப்பட்டதாகும். அதாவது சோம்பேறித்தனம், வீம்புத்தனம், விக்கலெடுப்பது, வாந்தி மற்றும் சில தேவைகளின் பொருட்டு முக்குவதற்கும் இந்த வாயுவே பெரிதும் உதவி புரிகிறது. இறுதியாக பிராணன் என்னும் வாயு மனிதனின் உயிர் வாழ்தலுக்கு வளிமண்டலத்தில் உள்ள காற்றை உள்ளே இழுத்துப் பின் வெளியே விடுதலுக்கான பணியைச் செய்கிறது. இந்த வாயு உடலை விட்டு நீங்கியபின், உடல் 'சடலம்' எனும் நிலையை அடைகிறது.

### உயிரற்ற உடலுக்குள் வாயு

பிராணன் உடலை விட்டுப் பிரிந்த பிற்பாடு, அதன் பின் தனஞ்செயன் என்றழைக்கப்படும் வாயுவானது, அந்த உயிரற்ற உடலுக்குள் மூன்று நாள்கள் வரை தங்கியிருந்தபடி சடலத்தை வீங்கிப் பொருமச்செய்து, அதனுள் இருக்கும் இரத்தத்தைப் புளிப்படைய வைத்து, பின்னர் மூன்றாம் நாள் தலைபிளந்து அனைத்தையும் வெளியேறிப் போக வைக்கிறது. சடலம் பொருமி இரத்தம் புளிக்கும் நிகழ்வு நடைபெறும்போது தான், 'பொடி' மணக்குது... நாய் செத்து நாறுது... என்று கூறுவார்கள்.

ஆயினும், இந்தத் தனஞ்செயன் என்ற வாயுவை முற்காலத்தில் தவவலிமையுள்ள முனிவர்கள் தமது தவயோக வலிமையால் தமக்கு மறுஜென்மம் வராதபடிக்கு, முதலில் தலையைப் பிளந்து இரத்தத்தை ஓடச் செய்வார்கள் என்றும், அதன் பின் சாதாரண மனிதர்களுக்கோ விலங்குகளுக்கோ நடைபெறுவது போன்று, உடல் வீங்கிப் பொருமி இரத்தம் புளிப்படையும் நிலைக்கு உட்படாதபடி வற்றிவிடும் என்றும் பழையகால சோதிட நூல்கள் எடுத்தியம்புவதாகக் கூறப்படுகின்றது.




## மீனம்

(உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் மீன ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். மீன ராசிக்கான பலன்கள் குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.)

### கலைஞர்கள்

உங்களைப் புதிய வாய்ப்புக்கள் தேடிவரும். ஆண்டின் தொடக்கத்தில் தொழில்ரீதியாக நிறையப் பிரச்சினைகளைச் சந்தித்தாலும் ஓகஸ்ட் மாதம் முதல் உங்கள் திறமைகளுக்கு தீனிபோடும் வகையில் நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த வாய்ப்புக்கள் கிடைக்கும். பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும். வெளியூர், வெளிநாடுகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பும், அதன்மூலம் உயர்வுகளும் உண்டாகும்.

### விவசாயிகள்

பயிர் விளைச்சல் சிறப்பாக அமையும். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் ஓகஸ்ட் மாதத்தில் கிடைக்கப் பெறும். பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால் பூமி, மனை வாங்கும் யோகமும் உண்டாகும். முடிந்தவரை தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாதிருப்பது நல்லது. எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றிகிட்டும்.

### பெண்கள்

உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் ஆண்டின் தொடக்கத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றினாலும், எதையும் சமாளித்து ஏற்றம்பெறுவீர்கள். பணவரவுகளும் ஓரளவுக்குச் சிறப்பாகவே இருக்கும். குடும்பத்தில் மங்களகரமான சுப காரியங்கள் கைகூடி மகிழ்ச்சியை அளிக்கும். பொன் பொருள் சேரும். கடன் தொல்லை குறையும்.

### மாணவ- மாணவியர்

ஆண்டின் தொடக்கத்தில் கல்வி பயிலுபவர்கள் அனுகூலமற்ற பயன்களைச் சந்தித்தாலும், கல்வியில் சாதனை பல செய்வார்கள். பெற்றோர், ஆசிரியர்களின் பாராட்டுதல்கள் மேலும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கும். விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றிவாகை சூட முடியும். நண்பர்களால் நற்பயன்கள் அமையும்.

### மாதப்பலன் (ஜனவரி)

மாதக்கோளான சூரியன் 10, 11இல் சஞ்சரிப்பதும், அதிகாரமாக 7இல் குரு சஞ்சாரம் செய்வதும் எல்லாவகையிலும் ஏற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். எடுக்கும் முயற்சி அனைத்திலும் வெற்றிகிட்டும். பணவரவுகளும் தாராளமாகவே இருக்கும். கொடுத்த வாக்குறுதிகளையும் காப்பாற்றமுடியும். சிலருக்கு அசையும்- அசையாச் சொத்துக்கள் வாங்கக் கூடிய யோகமும் உண்டாகும். செய்யும் தொழில், உத்தியோக நிலை என்பவற்றில் முன்னேற்றங்களும், புதிய வாய்ப்புக்களும் கிடைக்கப் பெறும். நெருங்கியவர்களின் ஆதரவு சிலநேரங்களில் உங்களின் முன்னேற்றத்துக்கு உதவும். துர்க்கையம்மனை வழிபாடு செய்வது சிறந்தது.

### பெப்ரவரி

[illegible] சூரியன் [illegible] முன்னேற்றங்கள் உண்டாகும். பொருளாதார நிலையில் உயர்வான நிலைகள் இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியும். பயணங்களால் சாதகமான பயன்களை அடைய முடியும். வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்புபவர்களின் நோக்கம் நிறைவேறும். கடன்களனைத்தும் குறையும். சனிக்குப் பரிகாரம் செய்வது உத்தமம்.

### மார்ச்

ஜென்ம ராசிக்கு 6இல் குருவும் 12இல் சூரியனும் சஞ்சரிப்பது சாதகமற்ற அமைப்பு என்றாலும் 11-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் எதையும் சமாளிக்க முடியும். நெருங்கியவர்களை அனுசரித்துச்செல்வதும், முடிந்தவரை பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நல்லது. நல்லதாக நினைத்துச் செய்யும் காரியங்களும் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். சுபகாரியங்களுக்கான முயற்சிகளை சில காலம் தள்ளிவைப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் சற்றுத் தாமதப்படும். 6இல் ராகு இருப்பதால் எதையும் சமாளிப்பீர்கள். சிவ வழிபாடு, தட்சிணாமூர்த்தி வழிபாடு சிறந்தது.

### ஏப்ரல்

ஜென்மராசியில் சூரியனும், 6இல் குருவும் சஞ்சரிப்பதால் எதிலும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் தோன்றி மறையும். முடிந்தவரை பிறர் விடயங்களில் தலையீடு செய்யாதிருப்பது, தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பணவரவுகள் ஓரளவுக்குச் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தர்கள் எவ்வளவுதான் பாடுபட்டாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கும் போட்டி பொறாமைகள் அதிகரிக்கும். சிவ வழிபாடு செய்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிக வாழ்வுக்கு வழிகாட்டிய

## ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா

ம.சண்முகநாதன்

திருகோணமலையில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆன்மிக, சமூகப் பணி ஆற்றிய ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா, அண்மைய காலத்தில் இலங்கையில் வாழ்ந்த ஒரு மகாஞானியும் மாதவ சிரேட்டரும் ஆவார்.

பூர்வீகத்தில் பாரதத்தின் கேரள மண்ணில் அவதரித்த சுவாமி, செல்வச் செழிப்புமிக்க 'நம்பூதிரி' எனும் பிராமணக் குலத்தைச் சேர்ந்தவர். திருப்புரியூர் எனும் ஊரில் வாழ்ந்த அவரது பெற்றோரும், உறவினர்களும் சக்தி வழிபாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை மிக்கவர்களாக வாழ்ந்தவர்கள். எமது சமூகத்துக்கென்றே 'பகவதி ஷேத்திரம்' எனும் ஆலயமொன்றை அமைத்து வழிபாடு மேற்கொண்டு வந்தனர். பரம்பரையாகவே ஆயுள்வேத வைத்தியத்தில் சிறந்து விளங்கினர். சாதுக்கள், சந்நியாசிகள், துறவிகள் மீது மிகுந்த பக்தியும், நம்பிக்கையும் கொண்டிருந்தனர். எவ்வேளையிலும் துறவிகளுக்கு இன்முகத்துடன் பணிவிடை செய்வதைத் தமது பெரும் பேறாகக் கருதினர்.

### இளமையில் இறைநாட்டம்

இத்தகைய சூழலில் வளர்ந்த சிறுவனான கெங்காதரானந்தாவும், இளமையிலேயே இறைநாட்டம் கொண்டவராகவும், துறவை விரும்பியவராகவும் காணப்பட்டார். மனதில் ஏற்பட்ட வைராக்கியம் காரணமாக, செல்வம் குவிந்து கிடந்த எமது இல்லச் சூழலை விட்டு வெளி யேறி தேச சஞ்சாரியாகத் திரிந்தார். பாரதத்தின் பல பாகங்களிலும் அலைந்து பல துறவிமாரைச் சந்தித் தார். பலரது உபதேசங்களைப் பெற்றார். பாம்பு கோவிந்தன் என்ற ஒரு சித்தர், சாந்தகிரி பாபா என்ற ஒரு ஞானி, இமயமலை அடிவாரத்தில் கண்ட பல துறவிமார் எனப் பலரும் இந்த இளைஞனின் துறவு வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக அமைந்தனர். இங்ஙனம் சந்தித்தவர்களுள், இஸ்லாமிய சூபி ஞானியும் ஒருவராவார். அவரே "கடல் கடந்து சென்று கடுந்தவ சாதனைகள் மேற்கொண்டு உனது ஞான நோக்கத்தை அடைவாய்" என நல்லாசி கூறி அருள் வழி காட்டினார்.

இத்தகைய ஞானியர் தொடர்புகளோடு 1940 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்த சுவாமி கெங்காதரானந்தா, யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் மீதும், பெரும் பற்றும் பக்தியும் கொண்டிருந்தார். இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றபோதும், கோணேசர் கோலோச்சுகின்ற திருகோணமலையும், கந்தன் அருள்புரிகின்ற கதிர்காமமுமே அவரது தவ சாதனைக்குரிய தலங்களாக அமைந்தன.

### குகைகளில் அமர்ந்து கடும்தவம்

கோணேசர் ஆலயத்தை அண்டிய குகைகளில் அமர்ந்து கடும் தவம் மேற்கொண்டார். ஊனுறக்கம் மறந்த சாதனை, பல்லாண்டுகால வைராக்கியம் தீவிர யோகப் பயிற்சிகள் என்பவற்றின் விளைவாக ஒரு வைகாசி பூரணை தினத்திலே ஞானம் கைகூடப் பெற்றார்.

அனைத்துயிர்கள் மீதும் அன்பும், உலகநலனுமே அவரது இலட்சிய நோக்குகளாகின. "ஒரு ஞானி, ஞானோதயத்துக்குப் பின்னும் மக்களையும், மாநிலத்தையும் நன்றியோடு நேசிக்க வேண்டும்" என்ற அவரது வாக்குக்கு அமைய, மிக அமைதியாக ஆன்மிகப் பணிகளை மேற்கொண்டார்.

அவர் நிறுவிய சிவயோக சமாஜம் எனும் ஆச்சிரமம் அருட்செயற்பாடுகளின் உறைவிடமாக அமைந்தது. சமாஜ மண்டபத்திலே மிகவும் கிரமமான முறையில் பஜனை, சத்சங்கம், யோகாசன வகுப்புக்கள், இசைப் பயிற்சி, கூட்டுவழிபாடு என்பவை இடம் பெற்றன. சிவராத்திரி, நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, திருவெம்பாவை ஆகிய விரத நாள்களில் சிறப்புப் பூசைகளும் சிறப்பாக நடை பெற்றன. தேனை நாடிவரும் வண்டுகள்போலப் பக்தர்கள் சமாஜத்தை நாடினர்.

அனைவரையும் ஈர்த்து சமயப் பணிகளை சமூகத்துடன் ஒன்றிணைத்தார். மன, மொழி, மெய்களால் அன்பர்கள் தூய்மை பெற வழி சமைத்தார். வருடம் தோறும் பக்தர்களை ஒன்றிணைத்து கதிர்காம உற்சவத்தின்போது பாதயாத்திரை மேற்கொண்டார். அவரை நாடியோர் பலதரப்பட்டவர்களாக அமைந்தனர். அரசியல் தலைவர்கள், சமயப் பெரியார்கள், தீவிர எண்ணங்களைக் கொண்டோர், பிறமதத் துறவிமார், மேனாட்டுப் பக்தர்கள், எனப்பலரும் அவரைக் கண்டு அருள்பெற விழைந்தனர்.

ஒவ்வொரு பக்தரையும் தனித்தனியே காணும்போது அவரது மனதை ஊடுருவ நோக்கி முன்வினைப் பயன்களை அறிந்து உபதேசம் மேற்கொண்டார்.

ஒருதடவை அவரைத் தரிசித்தவர்கள் தமது வாழ் நாள் முழுவதும் மறந்துவிட இயலாதவாறு அன்பையும் கருணையையும் ஒருங்கே பொழிந்தார். லௌகீக வாழ்வின் பிரச்சினைகளுக்கு வழி காட்டினார். அனைத்துக்கும் மேலாக பக்தர்களின் உடல், மனத் துன்பங்களைத் தாமே ஏற்று அவர்களது துன்பங்களைக் குறைத்தமை உன்னதமான கருணையாகும்.


ஒரு துறவி, தபசி என்றபோதும் ஆச்சிரமத்திலே அமர்ந்து உபதேசம் மட்டும் மேற்கொள்ளாமல், சமாஜத்துக்கென இருந்த வயலில் ஒரு விவசாயி போன்று கடுமையாக உழைத்தார். உழைத்துப் பெற்ற பயனை அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளித்தார்.

### சுவாமிகள் ஓர் அபூர்வத் துறவி

எவரிடமும், எதையும் யாசித்துப் பெற்றுக் கொள்ளாமல், தமது உழைப்பின் பயன் மூலமே வாழ்ந்த அபூர்வத் துறவி அவராவார்.

சமாஜத்திலே, பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கென ஓர் ஆதரவற்றோர் இல்லத்தை அமைத்து, அவர்களது வாழ்வுக்கு வழிகாட்டினார். திருகோணமலை மாவட்டத்தின் சிவயோகபுரம் எனும் இடத்தில் நடேசர் ஆலயம் ஒன்றை அமைத்துத் தமது அருட் சைதன்யம் முழுவதையும் அந்த ஆலயத்தில் செலுத்தி வைத்தார். இந்த ஆலயத்தை அமைக்க, தாமே ஸ்தபதியாகவும், ஆசாரியாகவும், கூலியாளனாகவும் பணி செய்தார். நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளின்போது இந்த ஆலயம் பல தடவைகள் சேதமுற்றபோதும், தற்போது சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

> ஒருதடவை அவரைத் தரிசித்தவர்கள் தமது வாழ் நாள் முழுவதும் மறந்துவிட இயலாதவாறு அன்பையும் கருணையையும் ஒருங்கே வொழிந்தார். லௌகீக வாழ்வின் பிரச்சினைகளுக்கு வழிகாட்டினார். அனைத்துக்கும் மேலாக பக்தர்களின் உடல், மனத் துன்பங்களைத் தாமே ஏற்று அவர்களது துன்பங்களைக் குறைத்தமை உன்னதமான கருணையாகும்.



பக்தர்கள் தமக்கென நேர்ந்த கடமைகளை முறைப்படி ஆற்றுதல், மனத் தூய்மையுடன் பணிபுரிதல், பரிபூரண சரணாகதி ஆகிய மூன்று விடயங்களையே பிரதான உபதேசங்களாகக் கொள்ள வேண்டுமென அருள்புரிந்தார். தம்மை அண்டினோருக்குத் தரிசனமும், ஸ்பரிச தீட்சையும், நயன தீட்சையும் அளித்து அவர்களது வாழ்வை ஆன்மிக நெறிக்கு உட்படுத்தினார். அவரது தீர்க்க தரிசனம், அளப்பருங்கருணை என்பவற்றால் பக்தர்களுக்கு நிகழ்ந்த அற்புதங்கள் அளப்பரியனவாகும்.

சுவாமியின் போதனைகள் தனிமனிதர், சமூகம், நாடு, உலகம் என வியாபித்தன. நற்பண்பு மிக்க மக்கள் நிறைந்த சமூகமே அமைதியும் சுபிட்சமும் நிறைந்ததாக விளங்கும்என அவர் தெளிவுபடுத்தினார்.

மதம், ஆன்மிக வாழ்வு, அரசியல், பொருளாதாரம், தனிமனித முன்னேற்றம் என்பவை தொடர்பாக தீர்க்கமான கொள்கைகளை வெளியிட்டார்.

கேடுகள், பூமியிலிருந்தும், வானத்திலிருந்தும் உருவாகுவதில்லை. அவை மனிதர்களின் மனங்களிலிருந்தே தோன்றுகின்றன. மத விசுவாசமும், தர்மத்தின் மீது நம்பிக்கையும் கொண்ட அரசாட்சியின் துணையில்தான் நாடும் மக்களும் செழிப்புடன் வாழமுடியும் போன்ற கருத்துக்கள் மூலம் அறவாழ்வுக்கு வழிகாட்டினார்.

ஆன்மிக வாழ்விலே, விளம்பரம், புகழ், கவர்ச்சி என்பவை இல்லை என உறுதிபடக் கூறி, அதன்படியே வாழ்ந்தும் காட்டிய சுவாமி, 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்16 ஆம் திகதி மகாசமாதி அடைந்தார்.

எனினும், அவரது திருவாக்குக்கு அமையவே தூல சரீரத்தை நீக்கியபோதும், சூக்கும சரீரத்திலே இன்றும் பக்தர்களுக்கு, தமது கருணையினால் அருள்பாலிக்கின்றார். சுவாமி மகாசமாதி அடைந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றபோதிலும் இன்றும் பக்தர்கள் அவரது நினைவை மனம் நெகிழ்ந்து போற்றுகின்றனர். சுவாமியை நேரில் கண்டு தரிசனம் பெற்றோர், பிறர் வாயிலாக அறிந்து கொண்டவர்கள், புதிதாக கேள்வியுற்று பக்தி செய்பவர்கள் அனைவருக்கும் அவரது கருணை ஒரே விதமாகப் பொழிகின்றது. அவரது அருள் அலைகளுக்குள் ஈர்க்கப்பட்டோர் பேறு பெற்ற புண்ணியவான்களே.

சுவாமியின் வாழ்க்கை வரலாறு உபதேசங்கள் என்பவை சமாஜ வெளியீடுகளாக வெளியிடப்பட்டுள்ளன.

ஞான மண்டலம், அலையாத இன்பம், வஜனாமிர்தம், ஆலயம், ஞானச்சுடர், குருமுகம், அமிர்தத்துளிகள், சித்த சோதனை, பிரம்மஞானி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா போன்ற நூல்கள் மூலம் அவரது வாழ்வுப் போதனைகளை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

சுவாமியின் 25 ஆவது மகாசமாதி தினமான இன்று (16.12.2015) திருகோணமலை சிவயோக சமாஜ மண்டபத்திலும், கொழும்பில் பஜனை நிகழும் அன்பர் இல்லத்திலும், உலகின் பல பாகங்களிலும் வாழும் சுவாமியின் பக்தர்களது இல்லங்களிலும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. பூர்வ வினைத்தளையால் வாடித்தளர்ந்து, தீராத எண்ணச் சுழியில் சுழன்று பொய்யான அன்பில் மயங்கி நிற்கும் மனங்களின் ஞான தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு சுவாமியின் வாழ்வும், உபதேசங்களும் என்றும் துணைபுரிவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1874 - அமெரிக்காவின் சட்டபூர்வ பரிமாற்றமாக வெள்ளி டொலர் ஏற்பு.

1945 - இரண்டாம் உலக மகா யுத்தம். பிலிப்பைன்ஸ் கொரிகோடர் தீவில் அமெரிக்கப் படைகள் தரையிறங்கின.

1959 - கியூபாவின் பிரதமராக பிடல்காஸ்ரோ பதவியேற்றார்.

1962 - மேற்கு ஜேர்மனின் கரையோரப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 315 பேர் சாவு. 60,000 மக்கள் வீடிழப்பு.

1983 - தென் ஆஸ்திரேலியாவின் விக்ரோறியா மாநிலத்தில் காட்டுத் தீயில் 75பேர் சாவு.


1991 - நிக்கராகுவா கொன்றாஸ் தலைவர் என்றிக் பேர்முடஸ் படுகொலை செய்யப்பட்டார்.

1998 - சீன விமானம் 676, தைவான் சியாங்கைஷேக் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் போது விபத்துக்கு உள்ளாகி 196 பேர் சாவடைந்ததுடன் தரையிலிருந்த 7 பேரும் சாவு.

1999 - துருக்கியில் குர்டிஷ் போராளிகளின் தலைவர் அப்துல்லா ஒகலான் கைது செய்யப்பட்டதை அடுத்து ஐரோப்பிய தூதரகங்கள் முற்றுகையிடப்பட்டு பலர் பணயக் கைதிகளாக்கப்பட்டனர்.

2013 - பாகிஸ்தான் குவட்டா ஹசாரா நகர் சந்தையில் குண்டு ஒன்று வெடித்ததில் 80பேர் வரை கொல்லப்பட்டனர். மேலும் 190 பேருக்குக் காயம்.

# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



# திறன் வளர்க்கும் விடுகதைகள்

1. எந்த எழுத்து பறக்கும்?
2. எந்த எழுத்து பொருள்களைப் போட்டுக் கொள்ள உதவும்?
3. எந்த எழுத்து மணக்கும்?
4. எந்த எழுத்து வாயைப் பிளக்கும்?
5. எந்தத் தானம் எல்லாவற்றிலும் சிறந்தது?
6. எந்தப் பாத்தியிலே முள்ளே முளைக்கும்?
7. எந்த மாலையைத் தரிக்க முடியாது?
8. எந்த மானுக்குக் கொம்பு கிடையாது?
9. ஒரு போதும் கொட்டும் சத்தம் கேட்காது. அது என்ன?
10. எருக்க முள் தைத்தால் பொறுக்க முடியவில்லை! காட்டுப் புளியங் கொட்டையைக் கடிக்க முடியவில்லை! அவை என்ன?

10.தேள், கழுாங்கல்
9.கண்ணிமை
8. அம்புலிமான்
7. கண்டமாலை
6. சப்பாத்திக்கள்ளி
5. அன்னதானம்
4. ஆ
3. பூ
2. பை
1. ஈ





# உங்கள்ஞாபக சக்திக்கு

இங்குள்ள பொருள்களை ஒரு நிமிடம் கவனமாகப் பாருங்கள். இவற்றை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். பிறகு புத்தகத்தை மூடிவிட்டு ஒரு காகிதத்தில் இங்கு நீங்கள் பார்த்து நினைவில் பதித்துக் கொண்ட பொருள்களின் பெயர்களை எழுதுங்கள். பிறகு பத்திரிகையில் இந்தப் புத்தகத்தைப் பிரித்து நீங்கள் எழுதியதோடு சரிபாருங்கள். எத்தனை பொருள்களை எழுத மறந்தீர்கள். இல்லாதது எவற்றை எழுதினீர்கள் என்பதிலிருந்து உங்கள் ஞாபகசக்திக்கு நீங்களே மதிப்பெண் போட்டுக் கொள்ளுங்கள்.

# பாசப் பிணைப்பு

ஓர் ஊரில் அண்ணனும் தம்பியுமாக இருவர் இருந்தனர். அண்ணன் திருமணமானவன். அவனுக்கு மனைவியும் மூன்று பிள்ளைகளும் இருந்தனர். தம்பி திருமணமாகாதவன். அவன் தனியாக வாழ்ந்தான்.

அவர்கள் குடும்பச் சொத்தாகக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதை இருவரும் சேர்ந்து பயிரிட்டு வந்தார்கள். அறுவடையைச் சமமாக பிரித்துக்கொள்வது அவர்கள் வழக்கம்.

அந்த ஆண்டுஅறுவடை நடந்தது. அவர்கள் வழக்கம் போல் தங்கள் கட்டுக்களைப் பங்கிட்டுக் களத்தில் தனித் தனியே அடுக்கி வைத்தனர். பின்னர் இருவரும் வீடு திரும்பினர்.



அன்று இரவு படுத்துக்கொண்டிருக்கும் போது தம்பி தன் அண்ணனைப் பற்றி நினைத்தான். "அண்ணனுக்கு மனைவி, மக்கள் உள்ளனர். நானோ தனியாள். என்னை விட அவருக்குச் செலவு அதிகம். என் கட்டுகளில் சிலவற்றை அவர் பங்கில் போட்டால் அவருக்கு நல்லது. நேரில் கொடுத்தால் அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார்"

அவன் உடனே எழுந்து களத்து மேட்டுக்குச் சென்றான். தன் பங்குகளில் இருந்தகட்டுக்களில் சிலவற்றை எடுத்து அண்ணன் பங்கில் போட்டான். மனமகிழ்ச்சியோடு வீடு திரும்பிப் படுத்துத் தூங்கினான்.

அந்த நேரத்தில் அண்ணன் தம்பியைப் பற்றி நினைத்தான். "தம்பிக்கு மணமாக வேண்டும். அவனுக்குச் சேமிப்பு இருப்பது நல்லது. அவனுக்குத் தெரியாமல் சில கட்டுக்களை அவன் பங்கில் போடுவோம். நேரில் கொடுத்தால் வாங்க மறுத்து விடுவான்" என்றுஎண்ணினான். உடனே அண்ணன் எழுந்து களத்துக்குப் போனான். தன்பங்கில் உள்ள சிலகட்டுகளை எடுத்துத் தன் தம்பியின் பங்கில் அடுக்கிவிட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் காலை இருவரும் களத்துக்குச் சென்றபோது தங்கள் பங்குகள் சரியாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அது எப்படி என்பது புரியாமல் விழித்தனர்.

அன்று இரவு தம்பி களத்துக்குப் போய் அண்ணன் பங்கில் தனது கட்டுக்களில் சிலவற்றைப் போட்டான். அப்போது அதே எண்ணத்தில் அண்ணனும் அங்கு வந்தான். இருவரும் சந்தித்துக்கொண்டபோது உண்மை விளங்கியது. இருவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக உணர்வை மேம்படுத்தும் காலம்

பாஸ்காவுக்கு ஆயத்தக் காலமே தவக்காலம். திருநீற்றுப் புதனிலிருந்து ஆரம்பமாகும் இந்தக் காலம் அருளின், இரக்கத்தின், மன்னிப்பின் காலமாகும். அதாவது, இறைவன் நம்மைத் தேடி மீட்கும் காலமாகும். இறைவனின் அருளை, கனிவை, இரக்கத்தை, மன்னிப்பை, அன்பை அதிகமாக அனுபவிக்கும் காலம். ஒவ்வொரு காலத்திலும் இறைவன் ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் குரல்களுக்குச் செவிமடுப்பதுபோல், இஸ்ரயேலரின் அழுகுரல்களுக்கும் செவிமடுத்தார். தன்னுடைய இரக்கம் மற்றும் மீட்பின் இடையீட்டாளராக மோசேயை உயர்த்தினார். மோசே வழியாக இஸ்ரயேலை விடுதலை நோக்கி வழிநடத்திய இறைவன், உடன்படிக்கையின் வழியாக அவர்களைத் தன் உடைமையாக்கினார். அவர்களைத் தனது தனிச் சொத்தாக்கினார். அவர்களை குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் மாற்றினார். தம் மகனாம் ஆண்டவர் யேசுவின் இரத்தத்தால், புதிய நிலையான உடன்படிக்கையை உருவாக்கியதில் இறைவனின் இரக்கம், தன் உச்ச நிலையைக் கண்டது. இந்த உடன்படிக்கையின் வழியாகவே நாம் எமது பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற்று இரக்கமும், நன்மைத்தனமும் நிறைந்த தந்தையின் அன்பு நிறை மக்களாக உண்மையில் மாறினோம். எனவே தான், இயேசுவின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளான அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் மறை நிகழ்ச்சிகளைத் தகுதியான உள்ளத்துடன் கொண்டாட எம்மைத் தயாரிக்கும் காலமாக இந்தத் தவக்காலம் எமக்குக் கொடுக்கப்படுகின்றது.எமது ஆன்மிக பயணத்தின் பழையன உதிர்ந்து, பழைய பாவ நாட்டங்கள், பாவ வழக்கங்கள் உதிர்ந்து, புத்துயிர் துளிர்க்கும் ஆன்மிக வசந்த காலமாக, புதுச் சிந்தனைகளுடன், புதுத்தெம்புடன், புதுப் பலத்துடன், புதுச்சக்தியுடன், புது வாழ்வை ஆரம்பிக்கும் நோக்குடன் எமக்குக் கொடுக்கப்பட்ட காலம்.

எனவே பாவப்பரிகார காலமான இந்தக்காலத்தில், பாவம் செய்தவர்கள் கிறிஸ்தவ சமூகத்துடன் மீண்டும் ஒப் புரவாகுவதற்கு நாற்பது நாள்கள் கடினதபசு, நோன்பு, ஒருவேளை உணவு மட்டும் உண்டு பாவப்பரிகாரத்தைத் தேடிக் கொள்ளலாம். செபமும், தபமும் தான் பாவப் பரிகாரத்தின் அடையாளங்கள். தவக்காலம்,கடின தபசுக் காலம். ஏனெனில் ஆரம்பகாலத்தில் பெரும் பாவிகளுக்கு திருநீற்றுப் புதனன்று பரிகார உடை கொடுத்து தலையில் சாம்பல் பூசி அவர்களைக் கோயிலிலிருந்து அழைத்துச் சென்று,ஊருக்கு வெளியே விட்டுவிடுவார்கள். நாற்பது நாள்கள் அவர்கள் ஊருக்கு வெளியே இருக்கும்போது, கோயிலுக்கு வருபவர்களைப் பார்த்து தங்களுக்காக கடவுளிடம் வேண்டச் சொல்வார்கள். இவர்கள் நாற்பது நாள்கள் கடின தபசுக்குப் பின்பு உயிர்ப்புப் பெருவிழா இரவு,திருவிழிப்புச் சடங்கின் போதுதான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தனி மனிதனின் பாவம் சமூகத்தைப் பாதிக்கிறது. எனவே தனி மனி தனின் மனம்திரும்புதலுக்கு சமுதாயத்திலுள்ள அனைவரும் பரிந்து பேச வேண்டுமென்ற சமூக உணர்வை இது ஏற் படுத்துகின்றது. "உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக".

கிறிஸ்தவ வாழ்வு ஒரு சவாலான வாழ்வு. எம்மையே நாம் ஒறுத்து வாழ்கின்ற வாழ்வு. உடலின் உணர்வுகளை ஒட்டுமொத்தமாக அடக்கி ஆள்கின்ற வாழ்வு. சுயத்தை விடுத்து,பொது நலனில் அக்கறை கொள்கின்ற வாழ்வு. ஆனால் அத்தகைய வாழ்வுதான் உன்னதமான வாழ்வு. இறைவன் எம்மிடம் இருந்து எதிர்பார்க்கின்ற வாழ்வு. அத்தகைய உன்னதமாக வாழ்வை வாழத்தான் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம். அது கடினமான, சவாலான ஒன்றாக இருந்தாலும்,முடியாத ஒன்றல்ல. இறைவனின் துணை கொண்டு எம்மால் எதையும் செய்ய முடியும். எனவே அப்படிப் பட்ட ஒரு சாட்சிய வாழ்வு வாழ,இறை துணையை நாமும் நாடுவோம். இன்றைய நவீன உலகில் மனிதர்கள் இரக்கம் குறித்த அக்கறையின்றி வாழும் நிலையில்,இறைவனின் வார்த்தைக்கு செவி மடுப்பதற்கும், இரக்கச் செயல்களை ஆற்றுவதற்கும் இந்தத்தவக்காலம் சிறந்ததொரு வாய்ப்பு என்பதால்,அனைத்திற்கும் ஒரே பதிலாக நிற்கும் அன்பு எனும் சக்தியைக் கொண்டு இக்காலத்தில் இறைவனையும், ஏழைகளையும் நோக்கி மனம் திரும்புவோம். கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லாத வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும் போது,அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும்,உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் உங்களது உண்மையான நோன்பாக இருக்க வேண்டும். எனவே இந்தத்தவக்காலத்தை இறை இரக்கத்தை அனுபவிக்கும், சமூக உணர்வை மேம்படுத்திக் கொண்டாடும் நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம்.




# சீன உறவை மீண்டும் நாடும் நல்லாட்சி அரசு

சீனா தொடர்பாக கடந்த ஒரு வருடகாலமாக கடைப்பிடித்து வந்த நிலைப்பாட்டை இலங்கை அரசு முற்றாக மாற்றிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு அரசாங்கத்திடமுள்ள ஒரே ஒரு தெரிவு குறைந்த வட்டியில் சீனாவிடமிருந்து நிதி உதவியைப் பெற்று,இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதுதான். இதன் அடிப்படையில் இந்த அரசு பதவி ஏற்றபின்னர் நிறுத்திவைக்கப்பட்ட துறைமுக நகரத் திட்டமும் சில மாற்றங்களுடன் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கையும் சீனாவும் நீண்டகாலமாகவே மிகவும் நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்துள்ளன. அமெரிக்காவையும் மேற்கு நாடுகளையும் பொருட்படுத்தாது சீனாவை அங்கீகரித்த முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

ராஜபக்சவின் ஆட்சிக்கு முன்பிருந்த அரச தலைவர்கள் இந்தியாவுடனான உறவுகளைப் பாதிக்காத விதத்தில் , இந்தியா சந்தேகம் கொள்ளாத விதத்தில் சீனாவுடன் உறவுகளைப் பேணிவந்தனர். வளர்முக நாடுகளில் ஒன்றான இலங்கைக்கு இது அவசியமாகப்பட்டது. ஆனால், 2005 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றியடைந்த பின்னர்,நிலைமை மாற்றமடைந்தது. சீனாவுடனும் இந்தியாவுடனும் சமனான உறவைப் பேணுவதாகக் கூறிக்கொண்டு சீனா பக்கம் சாய்ந்தார் மகிந்த. சீன உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பெரிய திட்டங்களில் அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தல விமான நிலையம் என்பவை குறிப்பிடக்கூடியவை. இலங்கையின் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கக்கூடிய துறைமுக நகரத் திட்ட மும் போதுமான ஆலோசனைகள் பெறப்படாது ஆரம்பிக்கப்பட்டது. அதனால்தான் கடந்த ஒரு வருடகாலமாக அதன் செயற்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டன.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வங்குரோத்து நிலைமை ஏற்படவுள்ள சமயம் இலங்கை அரசு ஒருவருடகால தேக்க நிலைமையின் பின்னர் தற்பொழுது மீண்டும் சீன அரசின் உதவியை நாடி நிற்கிறது.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் சீனாவினால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் நேர்மையானவையா, சட்டரீதியானவையா என்ற கடுமையான கண்காணிப்பின் பின்பே சீனா தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதாக இலங்கை அரசு தற்பொழுது கூறுகின்றபோதிலும் குறைந்த வட்டியில் நிதி உதவி செய்யக்கூடிய ஒரே நாடு சீனா என்பதாலேயே இலங்கையின் நிலைப்பாடு மாற்றமடைந்துள்ளது. அமைச்சர்களின் கருத்துகள் இதனை உணர்த்துகின்றன.

மேற்கு நாடுகள் கடுமையான கடன் நிபந்தனைகளை விதிக்கின்றன. நாம் எங்கே செல்வது என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன.




அம்பாந்தோட்டையில் சீனாவுக்கு விசேட பொருளாதார வலயம் ஒன்றை உருவாக்க நாம் இணக்கம் தெரிவிப்போம். அவர்கள் தமது சொந்தப் பணத்தை அங்கு முதலீடு செய்யமுடியும். நாம் முன்னேறிச் செல்வதற்கு இது சரியான மார்க்கம் என்கிறார் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம.

இலங்கையில் செயற்படுத்தக்கூடிய நான்கு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான யோசனையை சீனா முன்வைத்துள்ளது. இவற்றில் அம்பாந்தோட்டை விசேட பொருளாதார வலயமே பெரியது. நாட்டின் அந்நியச் செலாவணி வேகமாக சரிந்துவரும் நிலையில், வேறு வழியின்றி இலங்கை மீண்டும் சீனாவிடம் சென்றுள்ளது என்பதே உண்மை. துறைமுக நகரத்திட்டம் நிறுத்தப்பட்டமை போன்ற சகப்பான அனுபவங்களின் பின்பும்,சீனா இலங்கைக்கு உதவ மீண்டும் முன்வந்திருப்பது இலங்கை அரசியல் வட்டாரத்தில் ஆச்சரியமாகப் பேசப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| | | | | | | 5 | 9 | 1 |
| | 6 | 2 | 8 | | 9 | | | |
| | | | | | 6 | | | |
| | | 8 | | 2 | | | | |
| | 5 | | | 1 | | | 3 | |
| | 9 | | 6 | 8 | | | | |
| | | 4 | | | | 3 | | |
| 2 | 3 | | 9 | | | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 6 | 7 | 3 | 1 | 8 | 4 |
| 3 | 8 | 4 | 9 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 1 | 6 | 7 | 4 | 8 | 2 | 3 | 5 | 9 |
| 7 | 4 | 6 | 5 | 2 | 9 | 8 | 1 | 3 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 |
| 8 | 1 | 3 | 7 | 6 | 4 | 5 | 9 | 2 |
| 4 | 9 | 1 | 8 | 3 | 7 | 6 | 2 | 5 |
| 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 1 | 9 | 6 | 7 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நயன்தாராவை துரத்தும் இயக்குநர்கள்



காதல் கதைகளில் மட்டுமே கவனம் செலுத்திக்கொண்டிருந்த திரிஷா, ஹன்சிகா, லட்சுமிராய் போன்ற ஹீரோயின்கள் திடீரென்று பேய்க் கதைகளுக்குத் தாவினார்கள். நயன்தாராவையும் நீண்ட நாள்களாகவே பேய்ப் படத்தில் நடிக்க வைக்க இயக்குநர்கள் முயன்றனர். மாயா படத்தில் அவர் நடித்தார். இதையடுத்து வரிசையாக பல இயக்குநர்கள் பேய்க் கதைகளைத் தூக்கிக்கொண்டு நயன்தாராவைத் துரத்தினார்கள். அதிலிருந்து நழுவிக்கொண்டிருந்தவர், தற்போது இயக்குநர் சற்குணத்தின் உதவியாளர் தாஸ் ராமசாமி இயக்கும் கதைக்கு சரி என்று சொல்லிவிட்டார். இந்தப் படத்துக்கு இன்னமும் பெயரிடப்படவில்லை. இயக்குநர் சற்குணத்தின் பட நிறுவனம் வழங்க, நேமிசந்த் ஜபக், ஹித்தேஷ் ஜபக் தயாரிக்கின்றனர். விவேக் மெர்வின் இசை. தம்பி ராமையா, ஹரிஷ் உத்தமன் உள்ளிட்டோரும் நடிக்கின்றனர். இந்த மாதம் முதல் படப்பிடிப்புத் தொடங்குகிறது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களது திறமையை மற்றவர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி ஏற்படும். இலாபம் திருப்திகரமாகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**இடபம்:** நிதானத்துடன் செயற்படுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** சமூக அக்கறையுடன் செயற்படுவீர்கள். தொழிலில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகளுக்குச் சமரச பேச்சில் நல்ல தீர்வு கிடைக்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணம் கொடுக்கல் வாங்கல், நல்லமுறையில் நடக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** பணிகளில், முழுமனதுடன் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். ஆடம்பர எண்ணத்தைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் பரீட்சை நோக்குடன் படிப்பது அவசியம்.

**கன்னி:** தகுதிக்கு மீறிய அளவில் வாக்குறுதி தர வேண்டாம். கூடுதல் உழைப்பால், தொழிலில் வருமானம் கிடைக்கும். குடும்பத்துக்கான பணச்செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழிலில், கூடுதல் மூலதனம் தேவைப்படும். பெண்கள் வீட்டை அழகுபடுத்த கலைப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** நண்பர்களின் மீதான நன்மதிப்புக் கூடும். தொழிலில், நிர்ணயித்த இலக்கை எளிதில் அடைவீர்கள். வருமானம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**தனுசு:** எதிலும் பொறுமை தேவைப்படும். தொழிலில், வருமானம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு கூடும். தாயின் ஆறுதல் வார்த்தை, மனதுக்கு நம்பிக்கையளிக்கும்.

**மகரம்:** மற்றவர் பேச்சு, உங்களைச் சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்புத் தேவைப்படும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். உணவுப் பொருள் தரம் அறிந்து உண்ணவும்.

**கும்பம்:** எதிரிகள் விலகிப் போகும் சூழல் உருவாகும். தன்னம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மீனம்:** எவரையும் அலட்சியப்படுத்த வேண்டாம். தொழிலில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். உடல்நலனில் அக்கறை உண்டாகும்.










## மீதிப்பணம் யாருக்கு?

முதியவரொருவர் ஒரு ஹோட்டலுக்கு சாப்பிடச் சென்றார். வெயிலில் வந்த களைப்பு அவர் முகத்தில் தெரிந்தது. அவர் அங்கு ஓர் இடத்தில் அமர்ந்து சர்வரை அழைத்துக் கேட்டார். "தம்பி இங்கு சாப்பாடு என்ன விலை" என்றார். அதற்குச் சர்வர் "50 ரூபாய்" என்றான். பெரியவர் தமது சட்டைப் பைக்குள் கை விட்டுப் பார்த்து சர்வரிடம் கேட்டார்.

"தம்பி அதற்கும் சற்றுக் குறைவாக சாப்பாடு கிடைக்காதா.."?

சர்வர் கோபமாக "யோவ், ஏன்யா இங்க வந்து, எங்க உயிர எடுக்கிறிங்க. இதை விட மலிவான ஹோட்டல் எவ்வளவோ இருக்கு. அங்க போய் தொலைங்கயா" என்றான்.

பெரியவர் சொன்னார் "தம்பி தெரியாமல் இங்கு வந்துவிட்டேன். வெளியே வெயில் வேறு அதிகமா இருக்கு. நான் இனி வேறு ஹோட்டலுக்குச் செல்வது சற்றுச் சிரமம் என்றார்." சர்வர் "சரி..சரி, எவ்வளவு பணம் குறைவா வச்சிருக்கீங்க?" என்று கேட்டான்.

பெரியவர் "என்னிடம் 45 ரூபாய் தான் இருக்கிறது." என்றார்.

சர்வர் "சரி. தருகிறேன். ஆனால் உமக்கு தயிர் இல்லை சரியா?" என்றான்.

பெரியவர் "சரி" என சம்மதித்தார்.

சர்வர் சாப்பாடு கொடுத்தான்.

பெரியவர் சாப்பிட்டு விட்டு அந்தச் சர்வரிடம் 50 ரூபாய் கொடுத்தார்.

சர்வர் மேலும் கோபம் ஆனான்.

"யோவ் 50 ரூபா வச்சிருக்கு. 45 ரூபா தான் இருக்குனு சொன்ன..? ஓ.. வெற்றிலை.. பாக்கு வாங்குறதுக்கு 5 ரூபாய் தேவைப் படுதா..? இந்தா.. மீதி 5 ரூபா." என்று மீதியைக் கொடுத்தான்.

பெரியவர் சொன்னார் "வேண்டாம் தம்பி, அது உனக்குத் தான். உனக்குக் கொடுக்க என்னிடம் வேறு பணம் இல்லை." என்றார்.

சொல்லிவிட்டு வெயிலில் நடந்து சென்றார்.

சர்வருக்கு கண்களில் நீர் ததும்பியது.

அன்பு நண்பர்களே...

யார் எந்தச் சூழ்நிலையில் எப்படி இருப்பார்கள் என்று எமக்குத் தெரியாது.

எவரையும் ஏளனமாக பார்ப்பதும் பேசுவதும் தவறு..!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 400 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 400 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 550 | 400 | 450 |
| சுறா | 400 | 500 | 600 | 800 | 650 | 400 | – |
| சீலா | 250 | 450 | 400 | 450 | 400 | 300 | 460 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 350 | 300 | 450 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 300 | 200 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 200 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | 300 | – |
| ஓரா | 300 | 400 | – | – | 450 | 300 | – |
| திரளி | 200 | 150 | 200 | 200 | 300 | 100 | 300 |
| நகரை | 150 | 250 | – | 300 | 300 | 100 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 250 | 300 | 150 | 250 | 300 | 100 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 400 | 100 | – |
| மதனம் | 100 | 250 | 180 | 300 | 280 | 100 | 300 |
| கொய் | 80 | 200 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 300 | 300 | 250 | 400 | 400 | 200 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 250 | 100 | – |



கத்தியைக் கூராக்கும் சாதனம் அறிமுகமாகியுள்ளது. இதனைக் கொண்டு வீட்டிலேயே கத்தியைக் கூராக்கிக் கொள்ள முடியும். இதன் விலை 500 ரூபா முதல் 600 ரூபாவாகும்.

## கத்தியை கூராக்கும் சாதனம்

### நாளை

மாசி-05
புதன்கிழமை 17.02.2016
திதி: தசமி பி.இ.01.10
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ 05.01
ராகுகாலம்: 12.33-02.03 வரை
சுபநேரம்: 05.03-06.33 வரை

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 80 | 40 | 60 | 30 | 40 | 35 | 30 |
| கத்தரி | 70 | 80 | 80 | 80 | 60 | 60 | 80 | 30 |
| கரட் | 200 | 240 | 240 | 180 | 200 | 280 | 180 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 120 | 100 | 100 | 80 | 100 | 80 | 100 |
| பாகல் | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 90 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 70 | 60 | 60 | 100 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 70 | 70 | 50 | 80 | 70 | 50 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 60 | 120 | 50 | 70 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 60 | 100 | 70 | 80 |
| தக்காளி | 60 | 60 | 60 | 70 | 50 | 60 | 60 | 55 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 120 | 90 | 40 |
| கீரை | 20 | 20 | 25 | 10 | 20 | 20 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 200 | 180 | 160 | 250 | 180 | 200 |
| புடோல் | 60 | 80 | 60 | 60 | 60 | 60 | 40 | 60 |
| கோவா | 80 | 90 | 60 | 100 | 60 | 100 | 80 | 70 |
| வெண்டி | 100 | 100 | 80 | 80 | 120 | 100 | 70 | 100 |
| போஞ்சி | 60 | 80 | 120 | 80 | 80 | 120 | 90 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 100 | 120 | 160 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 45 | 50 | 40–50 | 40 | 40 | 30–40 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 | 50 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 240 | 240 | 220 | 200 | 200 | 180 | 200 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 100 | 140 | 120 | 90 | 70 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 350 | 600 | 600 | 450 | 500 |
| பனங்கிழங்கு | 04 | 02.50 | 05 | 02 | 07 | – | 03 | – |



# அவல் லட்டு

### செய்முறை

அவல், பொட்டுக்கடலை இரண்டையும் சுத்தம் செய்து தனித்தனியே வெறுமனே வறுத்து பொடித்து வைத்தக் கொள்ளவும். சட்டியில் சிறிது நெய் விட்டு முந்திரி, தேங்காய்த் துருவல், காய்ந்த திராட்சை ஆகியவற்றை வறுத்து பொடித்துக் கொள்ளவும். சீனியைப் பொடித்து வைத்துக் கொள்ளவும். அகலமான பாத்திரத்தில் எல்லாவற்றையும் போட்டு ஏலப்பொடி, பால், நெய் சேர்த்து நன்கு கிளறி தேவையான அளவில் லட்டுகளைச் செய்து கொள்ளுங்கள்.

### தேவையான பொருள்கள்

அவல் – 1 கப்
பொட்டுக் கடலை (உடைத்த கடலை)– அரைக்கப், முந்திரி – 6,
திராட்சை – 6,
ஏலப்பொடி, பால் – அரை கப்,
சீனி – 1 கப், நெய்,
தேங்காய்த் துருவல் – 2 கப்

# இணை உணவுக் குறிப்பு

- இட்லி, தோசைக்கு இணையாக தொட்டுக் கொள்ளச் செய்யும் குழம்பை எப்போதும் போல் செய்து அலுத்துவிட்டதா?
- இதுபோன்ற குழம்புகள் செய்யும்போது, ஒரு கைப்பிடி வேர்க்கடலையை எடுத்து தோல் நீக்கி, அரைமணி நேரம் நீரில் ஊறவைக்கவும்.
- பின்னர் அதனை மிக்ஸியில் கூழாக அரைத்து குழம்பில் சேர்த்தால் மிகவும் ருசியாகவும், இறுக்கமானதாகவும் இருக்கும் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 மாநாட்டில் சாதனையாளர்களை கௌரவித்தது டிரையம்ப் நிறுவனம்



உலகின் முன்னணி உள்ளாடை உற்பத்தியாளரான டிரையம்ப் இன்டர்நெஷனல் நிறுவனம், அண்மையில் நடைபெற்ற வருடாந்த விற்பனை மாநாட்டில் உயர் சாதனையாளர்களைக் கௌரவித்திருந்தது. கலதாரி ஹோட்டலின் பிரதான போல் ரூமினை, திருவிழாக் கோலமாக மாற்றியமைத்த இந்த வருட மாநாடு, பிரேசில் திருவிழா கருப்பொருளின் கீழ் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் டிரையம்ப் நிறுவனத்தின் நேரடி விநியோகத்தர்கள், மொத்த விற்பனைப் பங்காளர்கள், முக்கிய கணக்குப் பங்காளர்கள் மற்றும் முக்கிய பங்கு உரிமையாளர்கள் ஆகியோரின் உயர் சாதனைகள் வெளிப்படுத்தப் பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, டிரையம்ப் நிறுவனம் அதன் புதிய வர்த்தக சின்னத்தையும் அறிமுகம் செய்து வைத்தது.

இந்தியா மற்றும் இலங்கைக்கான டிரையம்ப் நிறுவனத்தின் பொது முகாமையாளர் லிந்த்ர பெர்னாண்டோ, உள்நாட்டுச் சந்தையில் புதிய வரையறைகள் மற்றும் தங்கள் இலக்குகளையும் எய்துவதற்கு இரவு பகல் பாராது கடுமையாக உழைத்த டிரையம்பின் சிறந்த செயற்பாட்டாளர்களின் முயற்சிகளைக் கௌரவித்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் எமது பங்காளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றார் அவர். அவர்களது தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஈடுபாடு மற்றும் நிலைபேறுதன்மை ஆகியவை வர்த்தக குறியீட்டு இலங்கையில் அதன் தலைமைத்துவத்தைப் பேண வழிவகுத்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் எமது விற்பனைக்கு படையினர் மற்றும் பங்காளர்கள் மேன்மேலும் தமது பங்களிப்பைச் சிறப்பாக வழங்குவர் என நாம் எதிர்பார்க்கிறோம். டிரையம்ப் நிறுவனம், இந்த மாநாட்டைத் தனது எதிர்கால இலக்குகள் குறித்து தெரியப்படுத்தவும், அதன் பங்காளர்களை ஊக்குவிக்கவும் பயன்படுத்திக் கொண்டது-என்றார்.

ஆசிய பெண்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட நெருக்கமான உள்ளாடைகளை உற்பத்தி மற்றும் வடிவமைப்புச் செய்யும் ஒரேயொரு ஐரோப்பிய வர்த்தகநாமம் டிரையம்ப் என்பது குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டில் உயர் சாதனையாளர்களை அடையாளப்படுத்த பயன்படுத்திய பொதுவான அளவுகோலே இம்முறையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய செயற்திறன் மற்றும் பங்களிப்பு போன்றவற்றின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வருடத்திற்கான மிகச்சிறந்த விநியோகத்தர் நிலையத்துக்கான தங்க விருதை செல்வி எம்.ஜே.பெரேரா வென்றார். அதே பிரிவில், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளை முறையே செல்வி. நலனி சந்திரமோஹன் மற்றும் செல்வி.ருக்லாந்தி தலகுணே ஆகியோர் வென்றெடுத்தனர். உயர் வருமானத்தை பதிவு செய்த வியாபார நிலையங்களுக்கான விசேட அங்கீகாரத்திற்கான தங்க விருதுகளை செல்வி. தீபா நக்தால் மற்றும் செல்வி.எம்.ஜே.பெரேரா ஆகியோர் வென்றிருந்தனர். (த)




# சீட்டிழுப்பு வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கியது டிஎவ்சிசி

டுபாயில் வேலைசெய்யும் இலங்கையருக்காக லங்கா மணி ட்ரான்ஸ்பர், அண்மையில் ரிதம் நைட் என்ற இசை நிகழ்ச்சி ஒன்றை விமரிசையாக நடத்தியது. பேப்பிள் றேஞ் இசைக் குழுவினர் வழங்கிய இந்த இசை விருந்து அல் நாஸர் லெர்லான்டில் இடம்பெற்றது. வெளிநாட்டு நாணய அனுப்பீட்டுச் சேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அதனை ஊக்குவிப்பதற்காகவும் அதன் பங்காளி என்ற முறையில் டிஎவ்சிசி வங்கி இந்த நிகழ்ச்சிக்குப் பூரண ஆதரவை வழங்கியது.

டுபாயில் வசிக்கும் சுமார் 4,000 இலங்கையர் இசை நிகழ்ச்சிக்குச் சமுகமளித்திருந்தனர். நிகழ்ச்சியின் முடிவில் அவர்களுக்கிடையே விசேட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பொன்று நடத்தப்பட்டது. இதில் வெற்றியீட்டியவர்களினால் நியமிக்கப்பட்ட இலங்கையிலுள்ள அவர்களது உறவினர்களுக்கு டிஎவ்சிசி வங்கி இந்த வாரம் பணப் பரிசுகளை வழங்கியது. டிஎவ்சிசி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் பெர்னாண்டோ, பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் சில்வா ஆகியோர் பரிசுகளைக் கையளித்தார்கள்.

இலங்கையில் அதிவேகமாக வளர்ச்சி அடைந்துவரும் வர்த்தக வங்கியான டிஎவ்சிசி வங்கி 2014ஆம் ஆண்டில் லங்கா மணி ட்ரான்ஸ்பர் சேவையை அறிமுகப்படுத்தியது. அனுப்புபவர், பெறுபவர் ஆகிய இரு தரப்பு வாடிக்கையாளர்களும் தமது வழமையான வங்கிகளின் ஊடாகப் பணத்தை இலகுவாகப் பரிமாறிக்கொள்ள இந்த அனுப்பீட்டுச் சேவை இடமளிக்கிறது. இலங்கையில் அனுப்பீட்டுப் பணப் பரிமாற்ற முறையை அறிமுகப்படுத்திய முதலாவது இலங்கைசார் வங்கி டிஎவ்சிசி வங்கியாகும். இந்தச் சேவைக்காக, உலகில் ஏனைய வங்கி களுடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்திய முதலாவது வங்கிகளில் ஒன்றாகவும் அது விளங்குகின்றது.

டிஎவ்சிசி வங்கியின் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் சில்வா தகவல் தருகையில், டிஎவ்சிசி வங்கியிலுள்ள நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு இலங்கையில் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம் என்று தெரிவித்தார். (த)

**வணிகம்**

# நுட்பம்




## பனியில் பயணிக்க புதிய கார் வடிவமைப்பு

சாதாரண வாகனங்களால் பனிப் பிரதேசங்களிலோ அல்லது மணல் பிரதேசங்களிலோ இலகுவாகப் பயணம் செய்ய முடியாது என்பது அனைவரும் அறிந்ததே.

இதற்காக பிரதேசங்களுக்கு ஏற்றாற்போல் வாகனங்கள் வடிவமைக்கப்படுவது வழக்கமாகும்.

இவற்றின் வரிசையில் முன்னணி வாகன வடிவமைப்பு நிறுவனமான நிசான் நவீனரக கார் ஒன்றை வடிவமைத்துள்ளது.

இந்தக் காரானது குளிர்ப் பிரதேசங்களில் பனி படர்ந்துள்ள நிலையிலும் எவ்வித இடர்ப்பாடும் இன்றி பயணிக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக்கார் தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## மின்னல் வேக தரவு பரிமாற்ற முறை




அசுர வளர்ச்சி கண்டுவரும் தொழில்நுட்ப உலகில் தரவுப் பரிமாற்றம் என்பது இன்றியமையாததாக விளங்குகின்றது.

அதிலும் இன்று அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டுவரும் தரவுப் பரிமாற்ற வேகமானது,புதிய தொழில்நுட்பங்களின் ஊடாக காலத்துக்குக் காலம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக தற்போது ஒளியியல் தொழில்நுட்பத்தின் (ஒப்ரிக்கல் கொமினியுகேசன் சிஸ்டம்) ஊடாக செக்கனுக்கு 1.125 ரெறா பைட்ஸ் வேகத்தில் தரவு கடத்தும் முறையைக் கண்டுபிடித்து ஐக்கிய இராச்சிய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

இந்த வேகமானது ஐக்கிய இராச்சியத்தில் தற்போது காணப்படும் பல்வேறு தரவுப்பரிமாற்ற வேகத்தினதும் சராசரியின் 50,000 மடங்கு அதிகம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## புதிய வசதிகளுடன் எச்ரிசியின் எம்10



எச்ரிசி நிறுவனம் வண் எம்10 எனும் தனது புத்தம் புதிய தொடுதிரைக்கைபேசியை விரைவில் வெளியிடவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்படவுள்ள இக் கை பேசியானது 5.1 அங்குல அளவுடையதும், 2560 X 1440 பிக்சல் தீர்மானம் உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன்,பிரதான நினைவக மாக 4ஜிபி ரம், 32ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர அன்ரொய்ட் 6.1 மாஸ்மலோ இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதுடன், 12 மெகாபிக்சல் உடைய பிரதான கமராவைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈபிடிபிக்கு

அனுப்பப்பட்ட 'கேபிள்' செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்த விவரங்களை "உதயன்" பத்திரிகை வெளியிட்டிருந்தது. விக்கிலீக்ஸ் இணையத் தளத்தினால் வெளியிடப்பட்டிருந்த இந்த இரகசியதகவல் ஆவணங்களில் ஈபிடிபி மற்றும் கருணா குழுவின் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் என்று குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை உதயன் பத்திரிகை அம்பலப்ப டுத்தியதை எதிர்த்து முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கின் விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று மீண்டும் டக்ளஸ் தேவானந்தா குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். இரண்டு மணி நேரத்துக்கு இந்த விசாரணை நீடித்தது. சட்டத் தரணி சுமந்திரன் தோண்டித் துருவிக் கேள்விகளைக் கேட்டார். அவரது கேள்விகளுக்கு நழுவல் போக்கில் டக்ளஸ் பல தடவைகள் பதிலளிக்க முயற்சிக்க வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, ஆம் அல்லது இல்லை என்று பதிலளியுங்கள் என சட்டத்தரணியால் அறிவுறுத்தப்பட்டார். முதலில் சட்டத்தரணி கேட்கின்ற கேள்விகளுக்குப் பதிலளித்துவிட்டு மேலதிக விளக்கங்கள் இருந்தால் தெரிவிக்கலாம் என்று நீதிமன்றமும் டக்ளஸை நெறிப்படுத்தியது.

குறுக்கு விசாரணையின் போது, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தனது குறுக்கு விசாரணைக்கான ஆதாரமாக சட்டத்தரணி சுமந்திரன் எடுத்துக் கொண்டார். அந்த அறிக்கை, 'உதயன்' பத்திரிகை வெளியீட்டுக்குப் பின்பாக வெளியிடப்பட்ட ஒன்று என்பதால் அதனை ஓர் ஆதாரமாக இந்த வழக்கில் பயன்படுத்த முடியாது என்று டக்ளஸின் சட்டத்தரணி ஆட்சேபனை கிளப்பினார். அதில் தன்னுடன் தொடர்புபட்டதாகக் கூறப்பட்டுள்ள விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று வழக்காளியான டக்ளஸ் ஏற்கனவே மறுத்துரைத்திருக்கிறார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். ஆனால், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத் தன்மை குறித்து, தான் இந்த வழக்கில் எந்த விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றும் டக்ளஸ் தேவாணந்தா அமைச்சராக இருந்த அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவே அவரது கட்சியான ஈபிடிபியை சட்ட விரோத ஆயுதக் குழு என்ற வகைப்பாட்டின் கீழேயே அறிக்கையிட்டுள்ளது அவரது சாட்சியங்கள் குறித்து ஆணையாளர்கள் சிலவிமர்சனங்களை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி சுமந்திரன், அப்படி அந்த அறிக்கை ஈபிடிபியை சட்ட விரோத ஆயுதக் குழுவாக இலங்கை மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கும்போது அந்தக்கட்சிக்குஎன்னமானம் இருக்கிறது என் பதே தனது தரப்பு முன்வைக்கும் வாதம் என்று நீதிமன்றத்திடம்சுட்டிக் காட்டினார்.

ஈபிடிபியினர் இப்படியான சட்டவிரோத செய்கைளைச் செய்தவர்கள் என்ற விடயம் தொடர்பில் இதுபோன்ற பல ஆவணங்களைத் தான் இந்த நீதிமன்றத்தில் முற்படுத்த இருக்கிறார் என்று தெரிவித்த சட்டத்தரணி சுமந்திரன், அவற்றின் ஊடாக, பொது மக்கள் மத்தியில் ஈபிடிபி என்பது சட்டவிரோதக் குழு என ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மன்றுக்கு எடுத்துக் காட்டுவதே தனது நோக்கம் என்றும் தெளிவு படுத்தினார்.

கொழும்பில் இருந்து வெளியாகும் "சிலோன் ருடே" ஆங்கிலப் பத்திரிகைக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச வழங்கியிருந்த பேட்டியில் குறிப் பிடப்பட்டிருந்த, வடக்கு மாகாண சபைத் தேர்த லுக்கு முன்பாக ஈபிடிபியினரின் ஆயுதங்களை நான் களையாமல் விட்டிருந்தால் இப்போது டக்ளஸ் தேவானந்தா வடக்கின் முதலமைச்சராக இருந்திருப்பார் மகிந்த ராஜபக்ச நாட்டின் தலைவராகத் தொடர்ந்திருப்பார் என்று கூறிய விடயத்தையும்கூட சுமந்திரன் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

குறுக்கு விசாரணை நீண்டு கொண்டே சென்றதால், அடுத்த தவணைக்கு வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. எதிர் வரும் மே மாதம் 24ஆம் திகதி டக்ளஸ் தேவாணந்தா மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட உள்ளார். (உ)

## வழங்கிய

துக்கான புதிய ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்திருந்தார். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் இணைந்து மக்களுக்காக சேவையாற்றுவதே தனது இலக்காகும் என்றும் அவர் மேலும் கூறியிருந்தார்.

வடக்கு மாகாணசபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் உள்ளது. இந்நிலையில், வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநரின் மேற்படி கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று உதயன் வினவியது.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநராக ரெஜினோல்ட் கூரே பதவியேற்றுள்ளார். இவரை நாம் வரவேற்கின்றோம். இவர் முற்போக்குவாதி. இவர் ஏற்கனவே முக்கிய பதவிகளில் இருந்தவர். நீண்டகாலமாக இவரை எமக்குத் தெரியும்.

இவர் வழங்கியுள்ள வாக்குறுதிக்கேற்ப வடக்கு மாகாண முதலமைச்சருடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட வடக்கு மாகாண சபையுடனும் இவர் இணைந்து செயற்படுவார் என்று நாம் நம்புகின்றோம் என்றார். (த-சி)

## மயிலிட்டி

பெறவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. மயிலிட்டியில் மக்களை மீளக் குடியமர்த்துவதா? இல்லை பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்து அறிவிக்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பலாலியில் தைப்பொங்கல் அன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் குறிப்பிட்டிருந்தாக, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இதற்கமைவாக, கருத்தறியும் கூட்டமே நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

மயிலிட்டியைச்சேர்ந்த 4 மீனவ சங்கங்கள், மயிலிட்டி மீள்குடியமர்வுக் குழு உள்ளிட்ட இதனுடன் தொடர்புடைய அமைப்புக்கள் மற்றும் மீள்குடியமர்வுடன் தொடர்பு டைய அதிகாரிகளுக்கு இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், விமான நிலைய அபிவிருத்தி தேவையில்லை என்றும் மயிலிட்டி மீள்குடியமர்வே வேண்டும் என்றும், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அரசமைப்புக்கு

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்பார்த்ததை விடவும் மக்கள் மிக ஆர்வத்துடன் தமது பரிந்துரைகளை முன்வைத்து வருகின்றனர். இதுவரை சுமார் 2 ஆயிரம் பரிந்துரைகளை மக்கள் முன்வைத்துள்ளனர். வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உட்பட 11 மாவட்டங்களில் அமர்வுகள் இடம்பெற்றுள்ளதுடன் ஏனைய மாவட்டங்களிலும் எதிர் வரும் நாட்களில் அமர்வுகள் இடம்பெறும். மின்னஞ்சல் மூலமான 462 பரிந்துரைகளும், எழுத்து மூலமான 350 பரிந்துரைகளும் தொலைநகல் மூலமான 46 பரிந்துரைகளும் அடங்குகின்றன. இது தவிர அமர்வுகளின்போது நேரடியாக ஆயிரத்து 170 பரிந்துரைகள் கிடைத்துள்ளன. அத்துடன் மார்ச் மாத இறுதியில் அனைத்து அமர்வுகளையும் பூர்த்தி செய்ய எதிர் பார்த்துள்ளோம். ஏப்ரல் இறுதிக்கு முன்னர் அறிக்கையை கையளிக்க எதிர்பார்த்துள்ளோம் -என்றார். (த-5)

## மிரட்டியே

பக்சவின் தலைமைத்துவத்தின் கீழ் எதிர் வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் நீர்கொழும்பில் அமைந்துள்ள விடுதியில் கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒழுங்கு படுத்தியிருந்தனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யானையின் வாலில் தொங்கி சுவர்க்கம் செல்ல மக்கள் ஒருபோதும் ஆணை வழங்கவில்லை. யானையின் மீது தொங்கி பயணிக்கும் இந்தப் பயணம் அவ்வளவு நல்லதல்ல. நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள 96 பேருக்கு யானை மீது சவாரி நடத்த மக்கள் அனுமதி வழங்கவில்லை.

நான் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை தானம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையிலேயே அப்படி ஒன்று நடைபெறவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் பின்னர் நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தி தலைவர் பொறுப்பை பெற்றுக் கொண்டனர்.

தேர்தலில் பின்னர் கட்சி உறுப்பினர் களிடத்தில், "அடிப்பேன், சிறையில் போடுவேன், இதை காப்பாற்ற வேண்டும் என்றால் எனக்கு இதை தந்துவிடு" எனக் கூறியே கட்சித் தலைவர் பதவியை பெற்று கொண்டதாகவும் மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா நல்லதம்பி

தோற்றம்
21 . 12 . 1927



மறைவு
13 . 02 . 2016

நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா நல்லதம்பி 13.02.2016 சனிக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தெய்வானை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நல்லதம்பி அவர்களின் ஆருயிர் மனைவியும் சுவாமி பரமாத்மானந்தா(பரராசசிங்கம் - கனடா), ஜெயபாலன்(லண்டன்), மதனாம்பிகை (கனடா), பாலகுமார்(கனடா), சிவகுமார்(கனடா), ராஜ்குமார்(கனடா), விஜயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புச்சகோதரியும் சறோஜினிதேவி, இராம்பிரசாத், உமாராணி, மதிவதனி, சுமதி, சுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, காமாச்சி அம்மா, நாகேஸ்வரி மற்றும் பூமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராசையா, மனோன்மணி ஆயோரின் அன்பான சகலியும், ஜனன், ஜெயகிரிஷ், பிரியங்கா, ராம்தீபன், டனா, சாயினா, ராஜ், அபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி 001 16475475215, 001 19054410748
செல்லிடப்பேசி 001 16474630506, 001 14166700237

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பகவதி தாமோதரம்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை/ இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி தாமோதரம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை, இராமநாதன் கல்லூரி) 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீலகண்டர்-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் திருவாளர் இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் விக்கினராஜா, இந்துமதி, நீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சனாதனன், சனந்தனன், சனகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரிக்கா, சுகன்யா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் அரன், அயன், அனிக்கா, அபிரா, சேயோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2016) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"திருவாசகம்"
சுதுமலை வீதி, தாவடி,
கொக்குவில்.

(69322)
(12.17.18.20)

தகவல்:
திரு.தாமோதரம்பிள்ளை குடும்பம்

021 492 3545

### திருமதி பரமேஸ்வரி(நேசம்மா) சுப்பிரமணியம்



தோற்றம்: 08.04.1935
மறைவு: 14.02.2016

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் (14.02.2016) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி- எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- வெள்ளைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் இலட்சுமி, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் தங்கச்சிப்பிள்ளை, சின்னம்மா, சரஸ்வதி, சரவணன் ஆகி யோரின் சகோதரியும் சாந்தினி, பராசக்தி, சிவா(சுவிஸ்), காலஞ்சென்ற தவேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அமுதா காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற துஸ்யந்தன் மற்றும் துவராகி (கொழும்பு), துஸ்யந்தினி(கனடா), நந்தினி( கொழும்பு), நதியா(இந்தியா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
உத்தமன் சிலையடி, ஏழாலை.

(69322)
(12.17.18.20)

தகவல்:
குடும்பத்தினர்.

077 3281932, 077 225 0354

# மரண அறிவித்தல்



## முத்து கிருஷ்ணபிள்ளை
(ஓய்வுநிலை புகையிரத நிலைய பாதுகாவலர்)

கல்லுவம், கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்து கிருஷ்ணபிள்ளை 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், மஞ்சுளா (ஆசிரியை யா/கரணவாய் மகா வித்தியாலயம்), சியாமளா (கனடா) காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் குமார் (பிரான்ஸ்) கோகிலா (கனடா) ஞானசௌந்தரி (கனடா) ஆகியோரின் அன்பு தகப்பனும், மகேஸ்வரன், கிருபாகரன் (கனடா) ரேணுகா (பிரான்ஸ்) வசந்தராஜா (கனடா) ஆரூரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், குமரன், கிரிசாந்தன் (கனடா) கோகுலன் (கனடா) தாட்ஷாயினி (கனடா) தர்சன் (பிரான்ஸ்) சுதர்சன் (பிரான்ஸ்) சுகந்தன் (கனடா) செந்துஜன் (கனடா) சுதர்சினி (கனடா) அஸ்ணவி (கனடா) ஐஸ்விணா (கனடா) ஆருஷன் (கனடா) ஆக்ஷணா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னம்மா மற்றும் நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (18.02.2016) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்லுவம், கரணவாய் மேற்கு,**
**கரவெட்டி.**
**T.P: 021 205 6239**

(65929)(10.17.20)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# துயர் பகிர்கின்றோம்



பிறப்பு:
19.08.1951
இறப்பு:
12.02.2016

தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையில் கடமை யாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி. சஜிலா விஜயகாந்தின் அன்புத் தாயும், திரு. ச.விஜயகாந்தின் அன்பு மாமியும் ஆகிய

**திருமதி விஜயராணி திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன், எமது துயரத்தினையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

தென்னைப் பயிர்ச்செய்கை சபை
நலன்புரி சங்கம் - யாழ்ப்பாணம்.

(69284) (10.17.20)

# முதலாம் ஆண்டு நினைவும் திவச அழைப்பும்

அமரர்
## இராசம்மா
(அம்மாச்சி அக்கா)
## பொன்னம்பலம்



தோற்றம்
11.02.1940

மறைவு
27.02.2015

கடந்த வருடம் 27.02.2015 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி இராசம்மா பொன்னம்பலம் அவர்களின் முதலாம் ஆண்டுத் திவச நிகழ்வுகள் இன்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கச்சாய் தெற்கு,**
**கொடிகாமம்**

(60736)(11.17.20)


**குடும்பத்தினர்.**

## 76 வயது முதியவரிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சா

மொனறாகலை,ஹூடலந்தாவ சந்தியிலுள்ள பிபிலை பஸ் தரிப்பு நிலையத்தில் ஊன்றுகோலுடன் நின்றிருந்த 76 வயதான முதியவரிடமிருந்து ஒன்றரை கிலோ காய்ந்த கஞ்சா மொனறாகலை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.வெல்லவாய, பலஹருவ பிரதேசத்திலிருந்து வந்த இவர் ஹூடலந்தாவ சந்தியில் இறங்கி மகியங்கனை பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார். ஊன்றுகோலுடன் தள்ளாடி நடக்கும் இந்த முதியவர் மூலமாக வேறொருவர் இந்த கஞ்சாவை மகியங்கனை அல்லது பிபிலைக்கு கடத்த முயன்றதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1974 . 12 . 26



மறைவு
2016 . 02 . 14

எமது வடபிராந்திய தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியத்தின் முகாமையாளர்

## அமரர் பரஞ்சோதி கண்ணன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆழ்ந்த துயரத்துடன்**
**உரிமையாளர், பணியாளர், நிர்வாகத்தினர்**
**வட பிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியம்**

(80222.6.15)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
02 . 11 . 1950



உதிர்வு
17 . 01 . 2016

அமரர்
## யோகலட்சுமி இராசரத்தினம்

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே...
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே அம்மா...
அதிகாலையில் எழுந்ததும் நின் முகமும் உன்குரலும் தேடும்
எம்மைவிட்டு கணப்பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ அம்மா...
மாதம் ஒன்றாகித் தவிக்கின்றோம்... உங்களைப்பிரிந்து அம்மா...
பிள்ளைகள்தான் உலகம் என்று அன்பை பொழிந்தீரே அம்மா...
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில் அம்மா...

**எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அமரர் யோகலட்சுமி இராசரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (17.02.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தோடு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும், சகல உதவிகள் செய்து அனைவருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**[illegible] வீதி,**
**அளவெட்டி.**

(c29142)(15.17)

**குடும்பத்தினர்**
**இராசரத்தினம் (கட்டையப்பா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழத்துக்குச்

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழீழம் கேட்டார்கள் என்று சொல்வது தவறு. தமிழ் மக்களும் அதனைத் தான் விரும்பினார் கள். இன்றும் தமிழ் மக்களின் ஆழ் மனது விருப்பமாகத் தமிழீழம்தான் இருக்கின்றது. எனது விருப்பமாகவும் அதுதான் இருக்கின்றது.

ஆனால் இலங்கையின் அரசியல் கள யதார்த்தத்தில் அது சாத்தியமில்லை. இப்போது குறைந்தபட்ச தீர்வாக, அதி உச்ச சமஷ்டியை எதிர்பார்க்கின்றோம். ஆறு பிராந்தி யங்களாக இலங்கையைப் பிரிக்கலாம். வடக்கு – கிழக்கு இணைந்த ஓர் பிராந்தியம். முஸ்லிம்களுக்கு தென் கிழக் குப் பிராந்தியம். ஏனைய பிராந்தியங்களை சிங்களவர்கள் வைத்துக் கொள்ளட்டும்.

எங்களுடைய வடக்கு - கிழக்குப் பிராந்தியத்துக்கு சுய நிர்ணயத்துடன் கூடிய சமஷ்டி வழங்கப்படவேண்டும். காணி - பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக இருக்க வேண்டும். எங்களுடைய மாநிலத்தின் தலைவிதியை நாமேதான் தீர்மானிக்கவேண்டும்.

எங்களுக்கு - தமிழர்களுக்கு உரிமை கிடைக்கும் வரை நான் தமிழனாகவே இருக்க விரும்புகின்றேன். இலங்கை யன் என்ற அடையாளத்தை ஏற்கவில்லை. எங்களுக் கான உரிமைகள் கிடைத்த பின்னர் இலங்கையராக இருப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை – என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றைய அமர்வில் கருத்துத் தெரிவித்த வர்களில் மிகச் சொற்பப் பேரைத் தவிர ஏனையோர் சமஷ் டித் தீர்வையே முன்வைத்துள்ளனர்.

இருவர் மாத்திரம், தமிழீழத்தைத் தமிழீழ விடுதலைப் புலி களே கோரினார்கள் என்றும் தமிழ் மக்கள் கோரவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். அத்துடன் இலங்கையர்களா கவே இருக்க விரும்புகின்றோம் என்றும், இந்தியாவின் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதி காரத்தை விடக் குறைந்த பொலிஸ் அதிகாரமே மாகா ணங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (த-5-ரி5)

## தனி நாட்டுக்

யோசனையை முன்வைக்கின்றோம் என்று வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான மக்கள் கருத்தறியும் அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போர்க்குற்றத்துக்கான நீதியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் வேண்டும். முடிவடைந்த போர் மீண்டும் ஏற்படாது என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. இன்ன மும் தமிழ் மக்கள் தனிநாட்டுக் கோரிக்கையில் இருந்து விடுபடவில்லை. மக்களின் எதிர்கால நலனுக்காக கூட் டாட்சியில் வாழும் யோசனையினை முன்வைக்கின்றோம். இந்த அரசமைப்பு சீராக முன்வைக்கப்பட்டால் தமிழ் மக் கள், தனிநாடு என்ற கோரிக்கையில் இருந்து விடுபடு வதற்கான வாய்ப்புக்கள் உருவாகும்.

சிங்கள மக்கள் தனியான அபிலாசைகளுடன் இருப்பார் கள். அது அவர்களுடைய விருப்பு. ஆனால் தமிழ் பேசும் மக்கள் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைந்து இருப் பதையே விரும்புகின்றனர். சமஅந்தஸ்து வழங்கப்பட்டு மாநிலங்கள் பிரிக்கப்படவேண்டும். மாறாக எந்த ஒரு மா நிலத்திற்கும் விசேட அந்தஸ்துகள் வழங்கப்படுதல் கூடாது. முஸ்லிம் மக்கள் தமக்கான தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும். மாநிலங்கள் விரும்பும் வகையில் தனித்துவமான கொடி, மாநிலத்துக்கான தேசிய கீதம், மாநிலங்களுக்கான பெயர் என்பன உரித்தாக்கப்பட்ட வகையில் மாநிலங்கள் அமைக்கப்பட்டு செயற்படுதல் வேண்டும். பிராந்திய சமஅந்தஸ்துடன் அமைக்கப்பட வேண்டும். இவை சரியாக அமைக்கப்பட்டனவா என்பதை ஐந்து ஆண்டுகளின் பின் ஐ.நா சபையின் மேற்பார்வையில் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் எதாவது ஒன்றின் மத்தியஸ்த நிலையுடன் கவனிக்கப்படுதல் வேண்டும் - என்றார். (த-5-ரி5)

## மகிந்தவின்

ஆணைக்குழு வினால் கொழும்பு பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான அறிவுறுத்தல் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் தமிழ் பிரதேச மேடைகளில் ஏறி சில வசனங்களை தமிழ் மொழியில் பேசியவர்கள் இன்று தமிழ் மொழியில் பாடப்பட்ட தேசிய கீதத்தை எதிர்க்கிறார் கள். அதாவது தமிழ் மொழிப் பாவனையை எதிர்க்கிறார் கள். ஆனால், தமிழ் இந்து கடவுள்களான விஷ்ணுவை யும், காளியம்மனையும் தேடிச்சென்று தேங்காய் அடிக் கிறார்கள். அதுவும் திருட்டு தேங்காய் உடைக்கிறார்கள். தமிழ் மொழி வேண்டாம், தமிழ்க் கடவுளர்கள் வேண்டும் என்பது இவர்களது கொள்கை. என்ன, கோமாளி கொள் கையோ, அந்த விஷ்ணுவுக்கும், காளியம்மனுக்கும்தான் வெளிச்சம்.

இந்த நாட்டில் இப்போது, இந்த கொழும்பு பிரதேச செய லக பிரிவு உட்பட 41 உதவி பிரதேச செயலக பிரிவுகள், இருமொழி பிரதேச செயலக பிரிவுகளாக சட்டப்படி பிரகட னம் செய்யப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையை விரை வில் 72 ஆக உயர்த்த உள்ளேன்.

இந்த பிரிவுகளில் பணிபுரிய எதிர்காலத்தில் நியமனம் பெறும் அனைத்து அரச பணியாளர்களும் இரு மொழித் தகைமை இருந்தால் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்ற ஒரு அமைச்சரவை பத்திரத்தை விரை வில் சமர்ப்பிக்க உள்ளேன். அதன்பிறகு ஒரு மொழி அறிவு கொண்டவர்களை விட, இருமொழி கற்றவர்களுக்கு இந்த பிரதேச செயலக பிரிவுகளில் அரசு பணி நியமனம் கிடைக்க வாய்ப்பு அதிகரிக்கும்.

எனது அமைச்சின் கீழ் வரும் தேசிய மொழி பயிலகத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஒரு தேசிய மொழி கல்லூரியாக தரமுயர்த்த முடிவு செய்துள்ளேன். இந்த பிரதேச செயலக பிரிவுகளில் நியமனம் பெறும் சிங் களம் பேசுவோர் தமிழையும், தமிழ் பேசுவோர் சிங்களத் தையும் கற்று இருக்க வேண்டும். இப்போது இருப்பது போல் அரச பணிக்கு வந்த பிறகு இரண்டாம் மொழி கற் கும் விளையாட்டு வேண்டாம். அரச பணி நியமனம் கிடைத்து விட்டால் அப்புறம் மொழியை படிப்பதில் இந்த அரச பணியாளர்கள் பெரும் அக்கறை காட்டுவதில்லை. இதை நான் இப்போது தேடியறிந்துள்ளேன் - என்றார் அவர். (த-5)

## அடுத்த வாரம்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க செயற்பட்டு வருகின்றார்.

நிதிக் குற்றப்புலனாய்வு விசாரணைப் பட்டியலில் எனது குடும்ப உறுப்பினர்களே முன்னணியில் உள்ளனர். நாடாளுமன்றில் தெரிவித்துவிட்டு அடுத்த வாரமளவில் குறித்த நபர் ஒருவரைக் கைது செய்யும் நிலைமை காணப்படுகின்றது. இதனடிப்படையில் அடுத்தது எனது மகன் நாமல் ராஜபக்ச கைது செய்யப்படக் கூடும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு அர சியலமைப்பிற்கும் நீதிமுறைக்கும் முரணானது. இந்த நடைமுறையானது உலகில் எந்தவொரு நாட்டிலும் கையாளப்படாத முறை எனவும் தெரிவித்துள்ளார். (த-5)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில் 25 . 04 . 1994

ஆண்டவன் பிடியில் 03 . 01 . 2016

**தவராசா கபிஷாந் (கவி)**

மீனுருண்ட நீரினிலே உன் மேனி உருண்டது
காருண்ட கண்டனவன் மனம் மிரண்டது
மீனின்னும் நீரினிலே வலம்வருகுது - கவி
நீயில்லை தேடுகின்றோம் நெஞ்சம் ஏங்குது
பாதியிலே சென்றுவிட்டாய் மீதி எங்கே
இறைவன் சோதியிலே கலந்து நின்றாய் கண்கள் நனைந்தது

(69286)(10.17.20)

694, கண்டி வீதி, அரியாலை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**நாராயணபிள்ளை செல்வரட்ணம் (செல்வம்)**



அராலி தெற்கு, வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாக வும், கே.கே.எஸ். வீதி, மல் லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை செல்வரட்ணம் நேற்று (15.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பசுபதிபிள்ளை யின் அன்பு கணவரும், காலஞ் சென்றவர்களான நாராயண பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப் பிள்ளை-அகிலாண்டேஸ்வரி தம்பதியரின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற விஜரெட்ணம், தவராசா, குண ரெட்ணம், தயாபரன் ஆகியோரின் அன் புச் சகோதரனும், கல்பனா, நிதர்சன், தர்சனா, அஜந்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜமுகனின் மாமனும் காலஞ்சென்ற சூரியப்பிரபாலினி, சூரியப்பிரபாகரன், காளியம்மை, சத்தியரூபராணி, நித்தியானந்தராணி வினோதினி, வினோகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02. 2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அள வெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.
0772328917, 0778609773

தகவல்:
குடும்பத்தினர்.

(C/29140) (10.17.20)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு: 08.12.1937 இறப்பு: 15.02.2016

### வாரித்தம்பி வீரவாகு

மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு மீசாலையினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி வீரவாகு நேற்று (15.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - பொன்னம்மா தம்பதியிரின் பாசமிகு மகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் சின்னம்மா, கமலாம்பிகை காலஞ்சென்ற கதிரேசபிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும் விஜய சிறீலன் (ஜேர்மனி), விமலசிறீலன் (லண்டன்), யசோதா (கனடா), சுயாதனா, ஈழரதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தி (ஜேர்மனி)காயத்திரி (லண்டன்), மதன் (கனடா), திருக்குமார் (துபாற்கந்தோர் ஊழியர் - யாழ்ப்பாணம்), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கர்ஷனா, வர்ஷணன், வர்ஷிகா, பகிஷா, கனிஷா, கிருசிகா, ரூபிகன், ஆர்த்தி, கவின், நிரூத்திகன், அபியா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

(60737) (15.17.20)

தகவல்:
குடும்பத்தினர்.

### முருகேசு நடராசா



யாழ். வசாவிளான் பெரி யண்ணன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஆஸ்தி ரேலியா, சிட்னியை வதிவிட மாகவும் கொண்ட முருகேசு நடராசா 13.02.2016 சனிக் கிழமை மானம்பராய் பிள்ளையாரின் பாதாரவிந் தத்தை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வர்களான முருகேசு- செல் லம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், அப்புத்துரை விசாலாட்சி தம்பதியரின் சிரேஸ்ட அன்பு மருமகனும், சுசீலாதேவியின் ஆருயிர்க் கணவரும், காயத்திரியின் அன்புத் தந்தையும், ஜீவிதனின் அன்பு மாமனும், இராசயோகம் (பிரான்ஸ்), கனகரட்ணம் (யாழ்ப்பா ணம்), ஜெயசிங்கம் (யாழ்ப்பாணம்), மகேஸ்வரராஜா (கனடா), இராசலட்சுமி (யாழ்ப்பாணம்), புவனலட்சுமி (கனடா), விசயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரராஜசிங்கம், விசய லட்சுமி, இந்திராதேவி, சிவமலர், அமிர்தலிங்கம், விக் னேஸ்வரன், அகிலன், பாலச்சந்திரன், பாலசுப்பிர மணியம், பாலகிருஷ்ணபிள்ளை, வசந்தாதேவி, பாலசுந் தரம், சரோஜினிதேவி, பரமசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆத்திக்காவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2016) புதன்கிழமை மு.ப 9.00 - ந.ப 12.00 வரை Magnolia Chapel in Macquarie Park, Cnr. Delhi Rd & Plassey Rd. Macquarie Park இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:-
சுகிந்தன் (பேரமகன்) +61 402 818 708
ஜீவிதன் (மருமகன்) +61 401 373 225
கனகரட்ணம் (சகோதரன்) +94 779 968 568

(69289) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஸ்திரேலியா அசத்தலான வெற்றி நியூசிக்கு எதிரான முதல் டெஸ்ட்டில்

நியூசிலாந்து-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இன்னிங்ஸாலும் 52 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றுள்ளது.

வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக கிறைக் 41 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கசில்வூட் 4 இலக்குகளையும், சிடில், லையன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸ் 562 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. அதிகபட்சமாக வோக்ஸ் 239 ஓட்டங்களையும், கவாயா 140 ஓட்டங்களையும், சிமித் 71 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நியூசிலாந்து சார்பாக சவுத்தி, போல்ட், அண்டர்சன், கிறைக், பிரேஸ்வெல் ஐவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினார்கள்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 379 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது நியூசிலாந்து. இரண்டாவது இன்னிங்ஸில் நியூசிலாந்தின் ஆரம்பம் சொல்லிக்கொள்ளும் படியாக அமைந்தது. இலக்குச்சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது அந்த அணி. 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குப்தில். அரைச்சதம் கடந்தாலும் லாதத்தால் தொடர்ந்து நீடிக்க முடியவில்லை. வில்லியம்சன், மக்கலம் இருவராலும் இன்னிங்ஸை கட்டமைக்க முடியவில்லை. மூன்றாம் நாள் முடிவில் நியூசிலாந்து 178-4. நிக்கொல்ஸ் 31 ஓட்டங்களுடனும் அண்டர்சன் ஓட்டம் எதனையும் பெறாத நிலையிலும் நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். 22 பந்துகளை சந்தித்த போதிலும், ஓட்டத்தை ஆரம்பிக்காமல் ஆட்டமிழந்தார் அண்டர்சன். வற்லிங், பிரேஸ்வெல் அடுத்தடுத்து பதின்மத்துடன் பவிலியன் திரும்பினாலும், அரைச்சதம் கடந்து ஆறுதலளித்தார் நிக்கொல்ஸ். 59 ஓட்டங்களுடன் நிக்கொல்ஸின் இன்னிங்ஸும் முடிவுகண்டது. சவுத்தி பின்வரிசையில் சிக்சர்கள் பவுண்டரிகளாக விளாசித்தள்ளினார். 23 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்க முடிவில் நியூசிலாந்து 327 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன் 4 இலக்குகளையும், மிச்செல் மார்ஸ் 3 இலக்குகளையும், கசில்வூட் 2 இலக்குகளையும், பேட் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள். ஆட்டநாயகனாக வோக்ஸ் தெரிவானார். (ம)

## சென்.அன்ரனிஸ் இலகுவெற்றி

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாழ்வுப்பாடு ஆயர் ஜோசப் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. முருங்கன் பொதுசன அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-33)

## மன்னார் - பருத்தித்துறை லீக்குகள் இன்று மோதல்

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தாழ்வுப்பாடு ஆயர் ஜோசப் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் மன்னார் லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக் அணி மோதவுள்ளது. (ம-23)

## சிறிமுருகன், நாவலர், இளைஞர் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன

கரணவாய், பெப். 16

இமையாணன் மத்திய வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம், மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் மற்றும் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**நாவலர் - இணுவில் கலையொளி**

இமையாணன் மத்திய வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கலையொளி விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோகுலன் 14 ஓட்டங்களையும், கஜி 12 ஓட்டங்களையும் பெற்றனர். 70 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் 7.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. அதிகபட்சமாக ஸ்ரீபன் 28 ஓட்டங்களையும், வினோ 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் மோகன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

**இமையாணன் இளைஞர் - றோயல்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 52 ஓட்டங்களைப் பதிவு செய்தது. அதிகபட்சமாக நிரோசன் 20 ஓட்டங்களையும், கவி 8 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் றோயல் அணியின் சார்பாக சதீஸ் 2 இலக்குகளையும், கோபன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். 53 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்கு களமிறங்கிய றோயல் அணி 7.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களை மட்டுமே பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பந்துவீச்சில் இமையாணன் இளைஞர் அணியின் சார்பாக மணாளன் 3 இலக்குகளையும், பிரசாந், பிரகாஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மணாளன் தெரிவு செய்யப்பட்டார்.

**சிறிமுருகன் - புத்தூர் ஞானவைரவர்**

இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிமுருகன் அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிவதானு 39 ஓட்டங்களையும், மகிழன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஞானவைரவர் அணியின் சார்பாக உசானந் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். 91 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு களமிறங்கிய ஞானவைரவர் அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று 50 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்து தொடரிலிருந்து வெளியேறியது. பந்துவீச்சில் சிறிமுருகன் அணியின் சார்பாக கண்ணா 2 இலக்குகளையும் சஜீவன், சிவதனு மற்றும் கௌசி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சிறிமுருகன் அணியின் சிவதனு தெரிவு செய்யப்பட்டார். (ம-108)




## யுவராஜ் சிங்குக்கு அதிக வாய்ப்பு வழங்கவுள்ளதாக டோனி தெரிவிப்பு

இந்திய அணித்தலைவர் டோனி, அதிரடி துடுப்பாட்ட வீரரான யுவராஜ் சிங்கின் துடுப்பாட்ட வாய்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ளார். அதாவது யுவராஜின் மீள்வருகையின் பின்னர் அவர் தனது திறமையை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும், எதிர்வரும் ரி-20 ஆட்டங்களில் அவரின் செயற்பாட்டைப்பொறுத்து ஒருநாள் ஆட்டங்களிலும் அவரைக் அணியில் இணைக்க பரீசீலனை செய்யவுள்ளதாகவும் டோனி வெளிப்படுத்தியுள்ளார்.

யுவராஜ் சிங்கின் துடுப்பாட்ட வாய்ப்பு குறித்து டோனி தெரிவிக்கையில்; யுவராஜ் சிங்கை முன்கூட்டியே களமிறக்க முடியாது. அது சற்று கடினமான ஒன்று. அவருக்கு 5ஆவது இடமே பொருத்தமானது. ஏனெனில் முன் வரிசையில் 4 சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ரோஹித், தவான் தொடக்க வீரர்களாகவும், 3ஆவது இடத்தில் கோக்லி, 4ஆவது இடத்தில் ரெய்னா களமிறங்குகின்றனர். இந்த 4 பேரும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, அவர்கள் இடத்தில் யுவராஜை துடுப்பெடுத்தாட செய்ய வைப்பது கடினமான ஒன்று. மேலும், யுவராஜ் சிங்கால் களமிறங்கிய உடனே பெரிய இன்னிங்ஸை முடியாது. அவருடன் ஆடிய அனுபவத்தில் இதை கூறுகிறேன். எனவே தான், 17 பந்துப்பரிமாற்றங்களுக்கு பிறகு அவர் இறங்க வேண்டி வந்தால், அவரை களமிறக்குவதை தவிர்க்கிறேன். இருப்பினும் எதிர்வரும் ஆட்டங்களில் அவருக்கு அதிக வாய்ப்பு அளிக்க நான் முயற்சி செய்வேன். ரி-20 ஆட்டங்களில் அவரின் செயற்பாட்டை வைத்து ஒருநாள் ஆட்டங்களில் அவரை களமிறக்குவது தொடர்பாக தெரிவுக்குழுவுடன் இணைந்து பரிசீலனை செய்வேன்- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ராரின் தொடர்**

யாழ்ப்பாணம், பெப்.16
வவுனியாவைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து அம்மன் அணிமோதவுள்ளது.

**கரவெட்டி கால் பந்தாட்டத் தொடர்**

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணி முதல் சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகமும் அதே மைதானத்தில் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழ கமும் மோதவுள்ளன. (ம-23-108)

## கில்லறி அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 16
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் மன்னார் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம்ஒன்றுநேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. மன்னார் கில்லறி அணியை எதிர்த்து வட்டக்கச்சி இளந்தளிர் அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## கிண்ணம் வென்றது யாழ். பல்கலை அணி இறுதியில் கிறாஸ் கொப்பர்ஸை வீழ்த்தி

யாழ்ப்பாணம், பெப். 13
யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்யப்பட்ட அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். பல்கலைக் கழக அணி சம்பியன் ஆகியுள்ளது.
அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். பல்கலைக்கழக அணி 34:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அரியாலை ஐக்கிய அணி 30:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)



உடுவில் பிரதேச இளைஞர் சம்மேளனத்தினால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வலைப்பந்தாட்ட மைதானம் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (ம-422)

## போராடி வென்றது சென்.மேரிஸ் அணி

யாழ்ப்பாணம், பெப். 16
கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.
அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் மாலை 4.15 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. சமநிலைத்தவிர்ப்பில் சென்.மேரிஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஸ்போட்ஸ், நெடியகாடு அணிகள் அரையிறுதியை உறுதிப்படுத்தின

கரணவாய், பெப்.16
கரவெட்டி கிருஸ்ரார் வி.கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஸ்போட்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அரையிறுதிக்கான வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக் கொண்டுள்ளன.

**யாழ். கொட்டடி-வல்வை நெடியகாடு**

லீக் முறையிலான இந்தத் தொடர் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். கொட்டடி விளையாட்டுக் கழகமும் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய கொட்டடி அணி 6 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரேன் 20 ஓட்டங்களையும், மோகன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வல்வை நெடிய காடு விளையாட்டுக் கழகம் சார்பாக நாதன் 2 இலக்குகளையும், ஈசன், சிறிகிருபா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். 62 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நெடியகாடு அணி 5.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து அரையிறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டது. அதிகபட்சமாக வசந் 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் கொட்டடி வி.கழகம் சார்பாக மிதுன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

**யாழ். கொட்டடி-கரவெட்டி ஸ்போட்ஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் யாழ். கொட்டடி விளையாட்டுக் கழகமும் கரவெட்டி ஸ்போட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்கான வாய்ப்பபை தக்க வைக்கலாம் என்ற நிலையில் இரு அணியினரும் களமிறங்கினர். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொட்டடி அணி 5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 24 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதிகபட்சமாக மோகன் மட்டும் 6 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பவன் 3 இலக்குகளையும், மனோ 2 இலக்குகளையும், டெஸ்மன் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர். 25 ஓட்டங்கள் என்ற எட்டக்கூடிய இலக்குடன் களமிறங்கிய ஸ்போட்ஸ் அணி 2.1 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி வெற்றிபெற்றது. (ம-108)

## சென்.மேரிஸ், ஜோசவாஸ் நகர் ஐக்கிய அணிகள் மன்னார் கரப்பந்தாட்டத் தொடரில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், பெப். 16
மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் துள்ளுக் குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் சம்பியனாகின.
மன்னார் உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் துள்ளுக்குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல் அரபா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் துள்ளுக்குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட் டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற பெண் களுக்கான இறுதியாட்டத்தில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர் த்து பள்ளிமுனை சென். லூட்சியா அணி மோதிக் கொண்டது. இதில் ஜோசவாஸ் நகர் ஐக்கிய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.(ம-23)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியூ அபயசிங்க, கிமிக்கோ ரகீம் சாதனை; நீச்சலில் நேற்று தங்கம் வென்றது இலங்கை



இந்தியாவின் குவாத்தி, சில்லாங் நகர்களில் 12ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற நீச்சல் போட்டியில் இலங்கை சாதனைகளுடன் தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றியது. நேற்றைய பெறுபேறுகளின் அடிப்படையில் 169 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தில் இலங்கை தொடர்கிறது. இவற்றில் 25 தங்கப்பதக்கங்களும், 57 வெள்ளிப்பதக்கங்களும், 87 வெண்கலப் பதக்கங்களும் அடங்குகின்றன.

இதன்படி நேற்றுநடைபெற்ற ஆண்களுக்கான 50 மீற்றர் நீச்சல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த மத்தியூ அபயசிங்க 23.33 செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனையுடன் தங்கம் வென்றார். பெண்களுக்கான 200மீற்றர் நீச்சலில் கிமிக்கோ ரகீம் 2 நிமிடம், 18 செக்கன், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனையுடன் தங்கம் வென்றார். ஆண்களுக்கான 50மீற்றர் தூரம் கொண்ட குழுநிலைத் துப்பாக்கி சுடுதலில் டபிள்யு. கிரிசாந்த, எஸ்.சமரக்கோன், எச்.குமார மூவரையும் கொண்ட குழு வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றியது. பெண்களுக்கான 54கிலோ எடைப்பிரிவின் ரேக்வொண்டோ போட்டியில் ஆர்.தர்மப்பிரியா வெண்கலம் வென்றார். ஆண்களுக்கான 68 கிலோ எடைப்பிரிவின் ரேக்வொண்டோ போட்டியில் பி.கெட்டியாராச்சி வெண்கலம் வென்றார். கலப்பு ஓட்டத்தில் கயானி திசநாயக்க, லக்ரூபன் விஜயசிறி, டி சில்வா, நுவான் குமார ஆகியோரைக்கொண்ட குழு வெண்கலம் வென்றது. ஆண்களுக்கான 50 மீற்றர் தூரம் கொண்ட தனிநபர் துப்பாக்கி சுடுதலில் சமரக்கோன் வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

பதக்கப்பட்டியலில் 159 தங்கம், 87 வெள்ளி, 28 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 274 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. 25 தங்கம், 57 வெள்ளி, 87 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 169 பதக்கங்களுடன் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. 10 தங்கம், 27 வெள்ளி, 46 வெண்கலம் என மொத்தம் 83 பதக்கங்களுடன் பாகிஸ்தான் மூன்றாமிடத்தில் உள்ளது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகள் முறையே நான்கு முதல் எட்டு வரையான இடங்களில் உள்ளன.

தெற்காசிய களத்தில் இன்று, ஆண்களுக்கான குத்துச்சண்டை, பெண்களுக்கான குத்துச்சண்டை, ஆண்களுக்கான யூடோ, பெண்களுக்கான யூடோ, ஆண்களுக்கான ரேக்வொண்டோ, பெண்களுக்கான ரேக்வொண்டோ ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம)

# நியூகாசிலை பந்தாடியது செல்சி



இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் செல்சி, நியூகாசில் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் செல்சி அணி வெற்றிபெற்றுள்ளது.

செல்சி சார்பாக ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் டியகோ கோஸ்டாவும் ஆட்டத்தின் 9 ஆவது, 59ஆவது நிமிடங்களில் பெட்ரோவும் ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் வில்லியனும் ஆட்டத்தின் 83 ஆவது நிமிடத்தில் பேர்ட்ரண்ட் ட்ரோரே ஆகியோர் கோல்களைப் பெற முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் செல்சி அபார வெற்றி பெற்றது. நியூகாசில் சார்பாக பெறப்பட்ட கோலை அன்ட்ரோஸ் டௌன்சென்ட் பெற்றிருந்தார். (ம)

# பாக். சுப்பர் லீக் ரி-20 தொடரில் அகமட் செசாட், ரியாஸ் மோதல்



பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரில் வகாப் ரியாஸ் மற்றும் அகமட் செசாட் மைதானத்தில் மோதிக் கொண்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் குயூட்ட கிளாடியட்டர்ஸ் – பெசவர் சல்மி அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியட்டர்ஸ் அணி இலக்குகளை இழந்து திணறிக் கொண்டிருந்தது. இந்நிலையில் தொடக்க வீரரான அகமது செசாட் 21 ஓட்டங்களில், ரியாஸின் பந்தில் இலக்கைப் பறிகொடுத்தார். அப்போது ரியாஸ், செசாட்டை நோக்கி ஏதோ பேசிக் கொண்டே வந்தார். இதனால் செசாட் கோபமடைந்த நிலையில், ரியாஸ் அவரை தள்ளிவிட்டார். இதனையடுத்து இருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. பின்னர் சக வீரர்கள் இருவரையும் சமாதானப்படுத்தினர். பாகிஸ்தான் அணி வீரர்களான ரியாஸ் – செசாட் திடீரென மோதிக் கொண்டதால் மைதானத்தில் சலசலப்பு ஏற்பட்டது. (ம)

# சானியா-கிங்கிஸ் இணையின் மிரட்டல்ரஷ்யாவிலும்தொடர்கிறது

ரஷ்யா நாட்டின் ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் கிங்கிஸ் இணைசம்பியனாகியுள்ளது.

நேற்று நடந்த பெண்கள் இரட்டையர் இறுதியாட்டத்தில் மிர்சா - கிங்கிஸ் இணையை எதிர்த்து ரஷ்யாவின் விராடவினா - பார்போரா இணை மோதியது. முதல் செற்றை 6 - 3 எனக் கைப்பற்றிய மிர்சா -கிங்கிஸ் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 6-1 எனக் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது.

சர்வதேச தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள மிர்சா-கிங்கிஸ் இணை தொடர்ச்சியாக பெற்ற 40 ஆவது வெற்றி இது வாகும். (ம)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af பிரெஞ்சு மொழி


பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவை யில்லை.
கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/=
பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்கள்.
மாணவர்களுக்கு 40% கழிவு
இலவசம்: படிக்கும் பாடங்களின் , PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..
யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

ஆரம்பம் 21.02.2016 2 p.m உடன் அழைத்து பதியவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

# அத்லெட்டிக்கோவை நொறுக்கியது ரியல் மட்ரிட்



லா லிகாத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

ரியல் மட்ரிட், அத்லெட்டிக்கோ பில்பாவோ அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 4-2 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது. ரியல் மட்ரிட் சார்பாக, அந்த அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, 3ஆவது, 87ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றிருந்தார். 37ஆவது நிமிடத்தில் ஜேம்ஸ் ரொட்ரிகாஸ் ஓர் கோலையும், 45ஆவது நிமிடத்தில் டொனி குரூஸ் ஓர் கோலையும் பெற்றிருந்தனர். அத்லெட்டிக்கோ பில்பாவோ அணி சார்பாக, எறஸோ கோனி, 10ஆவது நிமிடத்திலும் எலுஸ்டோண்டோ உர்கோலா இறுதி நிமிடத்திலும் கோல்களைப் பெற்றிருந்தனர். இந்த ஆட்டத்தில் பெற்ற வெற்றியுடன், 53 புள்ளி களைப் பெற்றுள்ள ரியல் மட்ரிட், லாலிகா தரப்படுத்தலில் அத்லெட் டிக்கோ மட்ரிட்டை பின்தள்ளி இரண்டாமிடத்துக்கு முன்னேறியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.